வந்தேம[illegible]

“ ஜ[illegible]

நான்காவது சுடர் [illegible]

பொருள் அடக்கம்

கதிர்—

அரசியல்

அ. இ. கா. கமிட்டிதீர்மானம் 1 – 15, 3 – 8
அரசாங்க உத்தியோகங்கள் .... 5 – 25
இந்தியாவைப்பற்றி .... 1 – 40
உலக அரசிய லமைப்புகள் .... 2 – 54
காக்கிநாடா காங்கிரசில் ஒரு சம்பவம் .... 1 – 33
காங்கிரஸ் கமிட்டி தீர்மானம் .... 4 – 21
காந்தீயம் ஒரு தத்துவம் .... 3 – 10
சமுதாய ஒப்பந்தம் 1 – 44, 2 – 25, 5 – 16, 6 – 36
தேசத்தொண்டு .... 2 – 42
மானிடசமுதாயத்தின் சிலவளர்ச்சிகள் .... 1 – 54
ஜனநாயகமும் சர்வாதிகாரமும் .... 4 – 28

அன்றாட உலகம்

தினசரி நிகழ்ச்சிகள் 1 – 9, 2 – 19, 3 – 4, 4 – 16, 5 – 7, 6 – 18

இலக்கியம், கலை முதலியன

அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம் .... 3 – 47
கவி யார்? .... 5 – 57
சமயத்தின் சிறப்பியல்புகள் .... 1 – 25
சமயா நுஷ்டானம் .... 3 – 25
சாதனை பயில்வாருக்கு .... 5 – 58
சிலப்பதிகாரம் 1 – 34, 2 – 46, 3 – 51, 4 – 47, 5 – 49, 6 – 52
சில அறிவு மொழிகள் .... 5 – 63
சில காலண்டர்கள் விநோதங்கள் .... 6 – 34
சிறியாரும் பெரியாரும் .... 4 – 22
சுவாமி விவேகானந்தர் உலகுக்கு அளித்த நிதி .... 6 – 25
தமிழ்நாவல்கள் .... 1 – 17
நல்ல காரியத்திற்கு நாலாயிரம் விக்கினம் .... 1 – 51
நாம் என்ன செய்ய வேண்டும்? .... 5 – 21
மகான்கள் யார்? .... 5 – [illegible]
முதலிய .... 3 [illegible]
வார்த்தைகளின் சக்தி .... [illegible]
ஜப்பான் பாடசாலை .... 3 [illegible]

கதிர்—பக்கம்.

.... 6 – 24
...யில் சிறுசம்பவம் .... 1 – 41
.... 5 – 13
.... 2 – 21
...ா நாயுடு .... 3 – 43
...த்திரிபாய் .... 4 – 25
...ண்டித மோதிலால் நேரு .... 6 – 59
பர்மாவில் இந்தியநாகரிகம் .... 5 – 18
...டாக்தார் அஹமத் அன்சாரி .... 5 – 33
மீராபாயின் சரித்திரமு... பாடல்களும் .... 2 – 36
மோகனதாஸ் கரம்சந்த் காந்தி .... 2 – 58
மௌலானா முகம்மது அலி .... 1 – 31
ஸ்ரீனிவாச ஐய்யங்கார் .... 4 – 43
ஜேம்ஸ் வாட் .... 1 – 43

சிறு கதைகள்

மதியாதார் தலைவாசல் .... 1 – 22

துலாக்கோல்

கனகாம்பரம் .... 1 – 11
சக்ரவாகம் .... 1 – 13
தனவணிகர் தன்மை .... 5 – 15
தீனபந்து ஆண்ட்ரூஸ் .... 5 – 15
மாதவீ கங்கணம் .... 5 – 14
ராம்கார் காங்கிரஸ் .... 1 – 15

நம்து நியாய சபை

தலைபங்கம் .... ஒவ்வொரு கதிரின் முதற் பக்கத்திலும்

பாடல்கள்

தமயனின் கடிதம் 12-1 – 51, 13-3 – 41, 14-4 – 55, 15-5 – 35
தேடி யெடுத்த திரவியங்கள் 1 – 7, 2 – 34
போலிச் சீர்திருத்தம் .... 2 – 35

பொருளாதாரம்

ஆதிமனிதன் எப்படி வியாபாரம் செய்தான்? .... 6 – 43
இபதியக் கைத்தொழில் அபிவிருத்திக்கு லேசானவழி 6 – 49
கூலி .... 4 – 57
சராசரி வருமானம் .... 1 – 42
செலவினங்களுக்குச் சில உதாரணங்கள் .... 1 – 30
நம்முடைய கிரமங்களும் அதன் மக்களும் .... 3 – 58
விவசாயம் .... 5 – 37

...ஞ்ஞானம்

ஆதிமனிதர்கள் நெருப்பைக் கண்டுபிடித்தது எப்படி? 3 – 62
...சப்பாத்துக் கள்ளி உபயோகம் .... 2 – 22
பூமிக்கு அடியில் ஓடும் ரெயில்பாதை .... 2 – 51

ஜோதி

ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா

சுடர் 4 விக்கிரம௵ ஆடி௴ கதிர் 1

ஆகஸ்ட்-1940

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை	—	1
தேடிப்பார்த்த திரவியங்கள்	— "பாலபோதகர்"	7
அன்றாட உலகம்	—	9
துலாக்கோல்	— (புத்தக விமரிசனம்)	11
அ. இ. கா. கமிட்டி தீர்மானம்	—	15
தமிழ் நாவல்கள்	— "சங்கரகுமாரன்"	17
வெளவால்	— (அ. சி. பெ.)	20
மதியாதார் தலைவாசல்	—	22
சமயத்தின் சிறப்பியல்புகள்	— "ஆசிரமவாசி"	25
மௌலானா முகம்மது அலி	— "ஒரு காங்கிரஸ்வாதி"	31

சிலப்பதிகாரம் — மா, சர்மா B. A. (Hons) 34

ஒரு வீரனுடைய வாழ்க்கையில் சிறு சம்பவம் — பி. சுப்ரமண்யம் 41

ஜேம்ஸ் வாட் — நீராவி யந்திரத்தின் தந்தை. 43

சமுதாய ஒப்பந்தம் — வெ. சா. 44

தமயனின் கடிதம்-12 — "தேவிதாஸன்" 50

நல்ல காரியத்துக்கு நாலாயிரம் விக்கினம் — வ. பார்த்தசாரதி 51

மானிட சமுதாயத்தில் சில வளர்ச்சிகள் — "வராகன்" 54

கலைமகள்

ஓர் உயர்ந்த மாதப் பத்திரிகை

(1932ம் ௵ ஆரம்பிக்கப்பட்டது)

தமிழ் நாட்டிலுள்ள சிறந்த அறிவாளிகளுடைய கட்டுரைகளோடு வெளி வருவது. அழகிய சித்திரங்கள், இனிய கட்டுரைகள், சுவையுள்ள கதைகள், சிறந்த தொடர் கதை, விஞ்ஞான சரித்திரம் சம்பந்தமான விஷயங்கள் முதலிய சல அருமையான பகுதிகளோடு உயர்ந்த முறையில் அச்சிடப்பெற்று மாதந்தோறும் தவறாமல் மலர்வது.

வருஷ சந்தா :

உள் நாடு :	ரூ.	4-0-0
பர்மா :	ரூ.	4-8-0
வெளிநாடு:	ரூ.	6-0-0

தனிப் பிரதி அணா ஆறு.

கிடைக்கும் விலாசம் :—

மானேஜர், கலைமகள் காரியாலயம்,
மயிலாப்பூர் : : : : மதராஸ்

ஜோதி

சுடர் 4 ஆகஸ்ட்-1940 கதிர் 1

நான்காவது 'ஜோதி' தன்னுடைய மூன்றாவது வயதை முடித்துக் கொண்டு நான்காவது வயதின் எல்லையை மிதிக்கிறது. மூன்று வருஷ காலம் எவ்வளவு சீக்கிரமாக ஓடிப் போய் விட்டது! ஆனால் நாம் சாதித்தது என்ன? அது நமக்குத் தெரியாது. 'ஜோதி' வாசகர்கள்தான் அதை நிர்த்தாரணம் செய்ய வேண்டும். ஆனால் நாம் சாதிக்க வேண்டியதென்ன வென்பதைப் பற்றி மட்டும் நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம். ஏனென்றால் அது—நாம் சாதிக்க வேண்டியது—மலை போல் முன்னே நிற்கிறது. நமது பார்வையும் முன்னோக்கியே இருக்கிறது.

இன்றைய உலகம் நமது கண்ணுக்குத்தானோ என்னவோ ஒரு புதிராகவே காணப்படுகிறது. எதையெடுத்தாலும் முரண்பாடுகள், ஏற்றத் தாழ்வுகள், இப்படித்தான் காணப்படுகின்றன. மனிதன் எந்த நிலையில் சாந்தி பெறுகிறானோ அந்த நிலைக்குத்தான் நாகரிகம் என்று அறிஞர்கள் கூறிப் போயிருக்கிறார்கள். இருபதாவது நூற்றாண்டு ராஜதந்திரிகளையும், கலாசாலை ஆசிரியர்களையும் நீங்கள் போய்க் கேட்பீர்களாயின், நாகரிகம் இப்பொழுது உச்ச ஸ்தானத்தையடைந்திருக்கிறதென்றுதான் சொல்வார்கள். தங்கள் கட்சிக்கு ஆதாரமாக, தாங்கள் படித்த புத்தகங்களை உங்கள் முன்னே தூக்கிப் போடுவார்கள். அல்லது ரேடியோவையோ, ஆகாய விமானத்தையோ, வேறு யந்திர முன்னேற்றங்களையோ உதாரணமாக எடுத்துக் காட்டுவார்கள். வாஸ்தவம். இவையெல்லாம் முன்னேற்றத்தின் அறிகுறிகள்தான். ஆனால் மனிதன் சாந்தி பெற்றிருக்கிறானா? அவனுடைய தினசரி வாழ்க்கையானது, மன அமைதியுடன், சந்தோஷத்துடன் நடைபெறுகிறதா? இல்லவே யில்லை. அப்படியிருக்க, இன்றைய உலகத்தில் நாகரிகம் நிறைந்திருக்கிறதென்று நாம் எப்படித் துணிந்து சொல்ல முடியும்?

இன்றைய ஐரோப்பாவை எடுத்துக் கொள்ளுங்கள். அங்குள்ள ஜனங்கள், ஒவ்வொரு நிமிஷமும் பயத்திலேயே வாழ்கிறார்கள். கவலையோடு காலங் கழிப்பது அவர்களுக்குச் சர்வ சாதாரணமாயிருக்கிறது. ஆயினும் இவர்களெல்லாரும் நாகரிகர்கள்; நாகரிக காலத்திலே வாழ்கிறோமென்று பெருமை கொள்கிறவர்கள். என்ன முரண்பாடு பார்த்தீர்களா?

விஞ்ஞானத் துறையில் அறிஞர்கள் நூதன விஷயங்கள் பலவற்றைக் கண்டு பிடித்து வருகிறார்கள். ருஷ்யாவில், நடவு நடாமலேயே கோதுமையைப் பயிரிடக் கூடிய முறைகளைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்; வட துருவப் பிரதேசத்தில் மனிதன் வாழ முடியும் என்று நிர்த்தாரணஞ் செய்திருக்கிறார்கள். பெர்ட்ராண்ட் ரஸ்ஸல் என்ற ஆங்கில அறிஞன் கூறுகிற மாதிரியைப் பார்த்தால் வருங்காலத்தில், ஆண் பெண் சேர்க்கையின்றியே, மனிதர்களை உற்பத்தி செய்து ஒரு நாட்டின் படை பலத்தை விருத்தி செய்து கொள்ளலாம் போலிருக்கிறது. இந்த நம்பிக்கை கொள்ளும் அளவுக்கு விஞ்ஞான சாஸ்திரம் முன்னேற்ற மடைந்திருக்கிறது! ஆயினும், மனிதன், இந்த விஞ்ஞான அபிவிருத்தியை எந்த வகையில் அநுபவிக்கிறான்? ஆகாய விமானக் குண்டுகளாகப் பார்க்கிறான்; விஷ வாயுவாக நுகர்கிறான்; சத்துரு நாட்டின் சாமான் தடுப்பு முறையினால் பட்டினி கிடக்கிறான். விஞ்ஞான சாஸ்திரத்தின் வளர்ச்சி!

நாகரிக ஏணியின் முதற்படியிலே நின்று கொண்டிருப்பதாக எண்ணிக் கொண்டிருக்கும் மனிதன், ஆகாய விமானங்களின் சப்தத்தைக் கேட்டதும், பூமிக்குள் தோண்டப் பெற்ற குகைகளுக்குச் சென்று பதுங்கிக் கொள்கிறான். நாகரிக ஆரம்பத்தில் மனிதன் நாடோடி வாழ்க்கையை நடத்தினானென்றும், நாகரிகம் வளர வளர அவன் ஓரிடத்திலேயே தங்கி நிரந்தர வாசஞ் செய்யத் தொடங்கி விட்டானென்றும் சரித்திரக்காரர்கள் ஏடுகளில் எழுதி வைத்துப் போயிருக்கிறார்கள். ஆனால் இன்று ஐரோப்பாவிலுள்ள ஜனங்களின் பரிதாப நிலையைப் பாருங்கள். ஒவ்வொரு கணத்திலும் அவர்கள் நாடோடி வாழ்க்கைக்குத் தயாராயிருக்கிறார்கள். சமீபத்தில் பாரிஸ் நகரம் ஜெர்மானியர்களுடைய ஆக்ரமிப்புக்குட்படுவதற்கு முன்னர், அந்நகர ஜனங்கள் கையிலகப்பட்ட மூட்டை முடிச்சுகளுடன் ஊரை விட்டு வெளியேறிய காட்சி நம் அகக்கண் முன் வந்து நிற்கிறது.

ரேடியோ முன்னேற்றத்தைப் பற்றி இப்பொழுது நாம் அதிகமாகச் சிலாகித்துப் பேசுகிறோம். ஆனால் ஜனங்கள் அடைகிற லாபமென்ன? ஒரு தேசத்து ராஜ தந்திரிகள் இன்னொரு தேசத்து ராஜ தந்திரிகளைத் தூஷிக்கிறார்கள்; அவர்கள், இவர்களைப் பொய்யர்களென்கிறார்கள்; இவர்கள், அவர்களைப் பொய்யர்களென்கிறார்கள். இதைத்தான் கேட்கிறோம்.

ஆக, மனிதனுடைய நல்வாழ்வுக்காக ஏற்பட்ட விஞ்ஞானமானது, அவனுடைய அழிவையே தேடிக் கொடுத்திருக்கிறது. இதற்காக, விஞ்ஞானத்தை நாம் எப்படிக் குறை கூற

முடியும்? அதில் என்ன தவறு இருக்கிறது? இல்லை. அந்த விஞ்ஞானத்தை உபயோகிக்கும் முறையிலே தான் தவறு இருக்கிறது. இந்தத் தவறை நாம் திருத்திக் கொள்ளாத வரையில், நாம் நாகரிக நிலையையடைந்து விட்டதாகச் சொல்ல முடியாது.

தற்கால நாகரிக அபிவிருத்தியின் பயனாக, நமது அன்றாட வாழ்க்கை கூட எப்படி யந்திர மயமாகி விட்டது! நாம் காண்கிற காட்சி, அநுபவிக்கிற ஆனந்தம், எல்லாம் யந்திர மயந்தான். நாம் சுயமாக ஆடியோ, பாடியோ, பேசியோ சந்தோஷத்தை அடைகிறோமில்லை. சினிமாத் திரையில் யாராவது ஆடினாலும், பாடினாலும், பேசினாலும் அதைப் பார்த்துச் சந்தோஷப்படுகிறோம். காற்று வாங்க நடந்து செல்வதைச் சந்தோஷமாகக் கொள்கிறோமில்லை. மோட்டாரில் ஏறி வேகமாகச் செல்கிற போது எதிர்த்து வரும் காற்றைச் சுவாசித்துத் தான் சுகமநுபவிக்கிறோம். அப்படிச் சந்தோஷமோ, சுகமோ அநுபவிப்பது கூட தனித்துவம் உடையதாயில்லை. எல்லோரும் பார்க்கிற சினிமாவை, எல்லோரும் கேட்கிற ரேடியோவைக் கேட்டுத் தான் மனிதன் இன்பத்தை அநுபவிப்பதாக நினைக்கிறானே தவிர, இவன் உள்ளத்திலிருந்து சுயமாகக் கிளர்ந்தெழும் உணர்ச்சியின் பரிணாமமாக இவன் சந்தோஷத்தை அநுபவிப்பதில்லை. இவனுடைய சந்தோஷங்கூட யந்திர சந்தோஷந்தான்!

இவ்வளவுக்கும் காரணம் என்ன? மனிதன், எதைத் தெரிந்து கொள்ள வேண்டாமோ அதைத் தெரிந்து கொண்டிருக்கிறான். எதைத் தெரிந்து கொள்ள வேண்டுமோ அதைத் தெரிந்து கொள்ள மறந்து விட்டான். மனிதன் கடவுள் தன்மையுடையவன் என்பதை எப்பொழுது ஒவ்வொருவரும் தெரிந்து கொண்டு விடுகிறார்களோ அப்பொழுதே உலகத்திற்கு நல்ல காலம் பிறந்து விட்டது. தனது பூர்வ பரம்பரை மிருகம் என்பதை மறந்து, தனது எதிர் கால சந்ததி கடவுள் என்பதை எந்தக் கணத்தில் மனிதன் உணரத் தலைப்படுகிறானோ அந்தக் கணத்திலேயே அவனுக்கும் உலகத்திற்கும் நல்ல காலம் பிறந்து விட்டது. இந்த நற்கால உதயத்திற்குப் பிரயத்தனப் படுவதுதான் 'ஜோதி'யின் வேலை.

நாம் எண்ணுகிற எண்ணம், செய்கிற வேலை ஒவ்வொன்றும் தன் மதிப்புடையதாயிருக்க வேண்டும். இந்தத் தன் மதிப்புணர்ச்சியை நமது ஜனங்களிடத்தில் தூண்டுவதே 'ஜோதி'யின் தொண்டு. வெறித்த பார்வை, தளர்ந்த நடை, தன்னம்பிக்கையில்லாப்பேச்சு, பல்லை இளித்தோ, தலையைச் சொரிந்தோ, வயிற்றைக் காட்டியோ எப்படியாவது காரியத்தைச் சாதித்துக் கொள்ள வேண்டுமென்ற மனப்பான்மை, உலகம் எந்தப் போக்கிலே போனாலென்ன வென்று ஒதுங்கி வாழும் சுபாவம் முதலியன வெல்லாம் நமக்குப் பிடிப்பதே யில்லை. சுழன்றடிக்கும் சூறாவளியிலே, கொந்தளிக்கும் கடலிலே, மின்னுகின்ற மேகத்திலே நாம் வாழ்க்கை இன்பத்தை அடைய விரும்புகிறோம். அப்பொழுதுதான் அந்த இன்பத்திற்கும் ஒரு பெருமை; நாமும் அதனை அநுப

விக்கத் தகுதியுடையவர்களாகிறோம். 'சந்தோஷம் என்பது எங்கே யிருக்கிறது? போராட்டத்திலே' என்றான் மார்க்ஸ். வாழ்க்கையே ஒரு போராட்டந்தானே. போராட்டமில்லாத வாழ்க்கை வாழ்க்கையே ஆகாது. அதனால்தான் நாம், தூர்ந்து கிடக்கிற ஒரு துறை முகத்திலே கட்டிப் போட்ட கட்டு மரத்தின் துடுப்பாக இருப்பதைக் காட்டிலும், புதிய நாடுகளைக் கண்டு பிடிக்க வேண்டுமென்ற ஆவலினால் ஆழந் தெரியாத சமுத்திரத்தில் திசை தெரியாமல் பனி மலையையும் புயற் காற்றையும் எதிர்த்துச் செல்லும் ஒரு கப்பலின் கொடி மரமாக இருக்க விரும்புகிறோம். அமைதியைக் காண வேண்டுமென்பதற்காக இருளடர்ந்த குகையை நாடி ஓட மாட்டோம். திறந்த மைதானத்தில், காய்கிற வெயிலில், பொழிகிற மழையில், ஜன சமூகத்தின் மத்தியில் அமைதியைக் காண விழைகிறோம்.

பொருளாதார உலகத்தில் காணப்படும் புதிர்களைக் கவனிப்போம். ஒரு பக்கம் உயர்ந்த செழிப்பு! மற்றொரு பக்கத்தில் தாழ்ந்த வறுமை! ஏராளமான பொருளுற்பத்தி ஒரு நாட்டில்! பக்கத்து நாட்டில் ஜனங்கள் பட்டினியால் மடிகிறார்கள்! அஜீர்ணத்தினால் ஒரு சிலர் அவஸ்தைப் படுகிறார்கள்! இன்னுஞ் சிலர் வயிற்றுக்குப் போதிய உணவில்லாமல் வாடிக் கிடக்கிறார்கள்! என்ன பரிதபிக்கத்தக்க முரண்பாடு!

விஞ்ஞான சாஸ்திரத்தின் அபிவிருத்தி காரணமாக, பொருளுற்பத்தி முறை எவ்வளவு தூரம் முன்னேற்றமடைந்திருக்கிற தென்பதைச் சில உதாரணங்களைக் கொண்டு பாருங்கள்.

மின்சார விளக்கு உற்பத்தி செய்யும் யந்திரம் இருக்கிறதே, அது, தற்போது, ஒரு நிமிஷத்திற்கு 422 விளக்குகள் விகிதம் உண்டு பண்ணுகிறது. அதாவது, பதினாயிரம் மனிதர்கள் சேர்ந்து ஒரு நிமிஷத்தில் செய்யக் கூடிய வேலையை இந்த ஒரு யந்திரம் செய்து வருகிறது. முன்னம், எட்டு மணி நேரத்தில் ஒரு தொழிலாளி 450 செங்கற்களைச் செய்ய முடிந்தது. தற்போதைய செங்கல் அறுக்கும் யந்திரம், அதே எட்டு மணி நேரத்தில் 320,000 செங்கற்களை உற்பத்தி செய்கிறது. 1879ம் வருஷம் அமெரிக்காவில் 41,685 பேர், 3,070, 875 டன் நிறையுள்ள காரீயத்தைத் தோண்டியெடுத்தார்கள். ஆனால் 1929ம் வருஷத்தில் அதே அமெரிக்காவில் 24, 960 பேர், யந்திர உதவியைக் கொண்டு 42, 6 3, 983 டன் நிறையுள்ள காரீயத்தைத் தோண்டியெடுத்திருக்கிறார்கள். பெரிய காரியாலயங்களில் இப்பொழுது பேரேடு பதிவதற்கென்று ஒரு வகை யந்திரத்தையே உபயோகிக்கிறார்கள். இந்த யந்திரமானது, ஒரு மணி நேரத்தில் ஒரு பிழை கூட இல்லாமல் அறுபதினாயிரம் கணக்குகளைப் பதிந்து விடுகிறது. இப்படியாகப் பொருள்கள் அதிவேகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனால் அதே வேகத்துடன் அழிக்கவும் படுகின்றன. ப்ரேஜிலில் விளைகிற 2[illegible]0 லட்சம் மூட்டை காபி கொட்டை, பசிபிக் மகா சமுத்திரத்தில் எறியப்பட்டன. ஸ்பெயின் தேசத்திலே உற்பத்தி செய்யப் படுகிற கப்பல் கணக்கான ஆரஞ்சுப் பழங்கள் ஐரிஷ் கடலிலே கொண்டு வந்து எறியப் படுகின்றன. அதாவது, கடவுள் அளித்த பொருள்களைக்

கடவுள் முகத்திலேயே திருப்பி எறிகிறோம். அந்தக் கடவுளின் பிள்ளைகளுக்கு விநியோகிக்க மனங்கொள்கிறோமில்லை. இதற்குக் காரணமென்ன? தற்போதைய பொருளாதாரத் திட்டத்திலே ஏற்பட்டிருக்கிற முரண்பாடுதான். உலகத்திலே இப்பொழுது பெரும்பாலும் தேவைக்கான பொருள் உற்பத்தி செய்யப்படுவதில்லை; லாபத்துக்கான பொருளே உற்பத்தி செய்யப்படுகிறது. இதனாலேயே, பொருளாதார உலகம் ஒரு புதிராயிருக்கிறது. இந்தப் புதிரை விடுவிப்பது, 'ஜோதி' யின் கடமை.

பிணக்குகளே இல்லாதிருக்க வேண்டிய சமய உலகத்திலே கூட எவ்வளவு விஷமத்தனமான மாறுபாடுகள் இருக்கின்றன பாருங்கள். 'எல்லோரிடத்திலும் அன்பு செலுத்து' என்று உலகத்திலுள்ள எல்லா மதங்களும் ஒரே தொனியில் முழக்கம் செய்கின்றன. ஆனால் தீவிர சமயவாதிகள் என்று சொல்லிக் கொள்வோரிடத்திலேயே எவ்வளவு பொறாமையும் எவ்வளவு துவேஷமும் நிரம்பியிருக்கின்றன! 'உலகத்திலுள்ள மக்களனைவரும் ஒரு குடும்பம்; அந்தக் குடும்பத்திற்கு ஒரே தந்தை; அவர்தான் கடவுள்' என்ற உயரிய கோட்பாட்டுக்கும் இன்றைய உலகத்திற்கும் மேட்டுக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசம் இருக்கிறது. ஐரோப்பா கண்டத்திலுள்ள ஏறக்குறைய எல்லா நாட்டாரும் கிறிஸ்தவர்கள். ஆயினும் ஒருவரை மற்றொருவர் அழிக்க என்னென்ன முயற்சிகள் செய்கிறார்கள்? ஒரே கிறிஸ்து நாதரைத் தொழுது கொண்டுதான் பிரிட்டிஷாரும் ஜெர்மானியரும் சண்டை போடுகிறார்கள். இருசாராரும் தங்கள் தங்களுடைய வெற்றிக்குக் கிறிஸ்து நாதரின் துணையைத்தான் நாடுகிறார்கள். என்ன ஆச்சரியம்! இந்த மாதிரியுள்ள சமய முரண்பாடுகளை அகற்றி எல்லோரிடத்திலேயும் சகோதர உணர்ச்சியை யூட்டுவது 'ஜோதி' யின் பணியாகும்.

பாரத நாட்டை எடுத்துக் கொள்வோம். நாம் சுதந்திரத்தைப் பற்றி அதிகமாகப் பேசுகிறோம். ஆனால் அதற்காக எவ்வித தீவிர முயற்சியும் எடுத்துக் கொள்வதில்லை. நமது சிந்தனா சக்தி கூட, பழைய ரோதையிலேதான் போய்க் கொண்டிருக்கிறதே தவிர, புதிய பாதையில் செல்ல மறுக்கிறது. தேசிய சுதந்திரத்தைப் பெற அஹிம்சைக் கொள்கையையே பின்பற்றுவோம் என்று நமது தலைவர்கள் சொல்கிறார்கள். ஆனால் அதே மூச்சில், சுதந்திரம் பெற்ற இந்தியாவில், தற்காப்பு நிமித்தம் அஹிம்சையை அநுஷ்டிக்க முடியாதென்றும் கூறுகிறார்கள். இந்த விநோதமான பாகுபாடு அல்லது முரண்பாடு சாதாரண ஜனங்களுக்குப் புரியவே மாட்டேனென்கிறது. ஒரு நாட்டின் சுதந்திரத்தை, அஹிம்சைக் கொள்கையை அநுஷ்டித்துப் பெற்றுவிட முடியுமானால், அந்தச் சுதந்திரத்தை அதே அஹிம்சை முறையினாலேயே வைத்துக் காப்பாற்ற முடியாதா? சுதந்திரத்தை வைத்துக் காப்பாற்றுவதற்கு அஹிம்சை முறை பயன்படாதிருக்குமானால், சுதந்திரத்தைப் பெறுவதற்கு மட்டும் அந்த அஹிம்சை முறை பயன் படுமா? என்னவோ, நமக்கு இவையெல்லாம்

புதிர்களாகத்தான் இருக்கின்றன. இந்தப் புதிர்களை விளக்கிக் காட்ட வேண்டுவதும் 'ஜோதி'யின் கடமை யாயிருக்கிறது.

இலக்கியத் துறையில் மறு மலர்ச்சி ஏற்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். இது பாராட்டத் தக்க விஷயந்தான். தமிழில் வசன நடைக்கு ஒருவித உத்வேகம் ஏற்பட்டிருக்கிற தென்பதை நாம் ஒப்புக் கொள்கிறோம். ஆனால் இந்த உத்வேகமோ, வளர்ச்சியோ போதாதென்று நாம் கருதுகிறோம். தமிழ் மொழி வளர்ச்சிக்கு, இலக்கியக் களஞ்சியச் சேமிப்புக்கு நாம் செய்ய வேண்டிய வேலைகள் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. ஜனங்களின் அறிவுக்கு உரமூட்டுகிற நூல்கள் பல வெளி வர வேண்டும்; உள்ளுணர்ச்சியைக் கிளப்பி, கர்ம க்ஷேத்திரத்தில் கொண்டு சேர்ப்பிக்கக் கூடிய கவியாறுகள் பல உற்பத்தியாக வேண்டும்; பழைய காவியங்களுக்குப் புதிய ஆடை அணிவித்து ஜனங்களுக்குச் சௌகரிய மான முறையில் வழங்கச் செய்ய வேண்டும். இவையனைத்தையும் தமிழர்களின் கவனத்திற்கு 'ஜோதி' கொண்டு வந்து காட்டும்.

இங்ஙனம் 'ஜோதி' செய்ய வேண்டிய தொண்டுகள் எத்தனையோ இருக்கின்றன. இவை ஒவ்வொன்றையும் 'ஜோதி' விடாமல் செய்து கொண்டு வரும். நமக்கு வாய்ப்பேச்சு வீரர்களைக் காட்டிலும் கர்ம வீரர்களிடத்தில்தான் அதிக மதிப்புண்டு. இத்தகைய கர்ம வீரர்கள் லட்சக் கணக்கில் தற்போதைய பாரத நாட்டுக்குத் தேவை. அப்படிப்பட்டவர்களை உற்பத்தி செய்வதும், ஏற்கனவே சிருஷ்டிக்கப்பட்டிருப்பவர்களை ஊக்குவதும் 'ஜோதி'யின் தலையாய கடமை.

'ஜோதி'யின் தொண்டு எதிர்காலத் தொண்டு. அதனால்தான் நமது நிகழ்காலம் இறந்த காலமாக இருக்கிறது. எதிர் காலம், நிகழ் காலமாக இருக்கும் என்ற திட நம்பிக்கைதான் இதற்குக் காரணம்.

'ஜோதி'யானது தேசிய திருஷ்டி கொண்டுதான் உலகத்தைப் பார்க்க விரும்புகிறது. அப்படித்தான் தன் கடமையைச் செய்ய முடியுமென்று அது கருதுகிறது. இதற்கு தமிழன்பர்கள் அத்தனை பேருடைய ஆதரவையும் அது எதிர் பார்க்கிறது.

இந்த நம்பிக்கையோடுதான் தனது நான்காவது வருஷத்தின் ஆரம்ப எல்லையை அது மிதிக்கிறது.

வந்தே மாதரம்.

—"பால போதகர்"

தேடி யெடுத்த திரவியங்கள்

> தேடி யெடுத்த திரவிய மெல்லாம்
> ஈடி லெந்தாய் இணையடிக் காகுக!

அன்பே ஆண்டவன்
ஆலயம் அகிலம்
இல்லறம் நல்லறம்
ஈட்டல் பதத்துண்

உடற்கணி தொண்டு
ஊரோ டோடு
என்றும் நன்று செய்
ஏற்றது ஆற்று
ஐக்கியம் சக்தி

ஒழுக்க மறிந் தொழுத
ஓர்தின முலத
ஔவிய முதலகல்
அஃதெனத் திரியேல்
கடமையிற் தன்றேல்

காலமது கைவிடேல்
கிளைபிற உயிர்கள்
கீர்த்தி விழைந் திடேல்
குடி நலம் உயர்த்து
கூட்டுக உடல்வலி

கெடுமொழி விளம்பேல்
கேட்டிற் இடங் கொடேல்
கைவினை கைக்கணி
கொள்க கூர்மதி
கோழைமை கொடிது

ஙப்போ லொத்து வாழ்
சலிப்பிற் சலியேல்

சாரண ரினத்திரு
சினந் தவிர்த் தொழுகு
சீர்விரிந் தோங்கு

சுகவழி மறவேல்
சூதுவா தகற்று
செவிக்கணி கேள்வி
சேர்ந்தாரைச் சேர்த்து வாழ்
சைவம் கைக் கொள்

சொல்லே செயலும்
சோர்வே தாழ்வு
ஞய மொழி இயம்பு
இடம்பம் அகற்று
இணங்கிக் கெடுக்கேல்

தலைக்கணி வணக்கம்
தாய் தந்தை போற்று
திருமுகத் திருத்து
தீராப் பழிப் படேல்
துயர்கண் டயரேல்

தூயன துணிந்து செய்
தெய்வம் பலவல
தேசத் தொண்டு செய்
தைரியம் மார்பணி
தொழில் முறை கல்

தோழமை மறவேல்
நல்லணி கல்வி
நாட் குறிப் பெழுது
நிதானம் பெரிது
நீங்கிப் புணரேல்

நுண்ணிதும் எண்ணுக
நூலோத லொழியேல்
நெறியிற் பிரியேல்
நேரல தகற்று
நைந் தொன்று நல்கேல்

(தொடரும்)



1940

ஜூலை

1 ஜெர்மனியிலுள்ள கீல் கால்வாயில் பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் வெடி குண்டுகள் போட்டன.

வட ஆப்ரிக்காவிலுள்ள இத்தாலியப்படைகளுக்கு தளபதி பால்போவுக்குப் பதில் தளபதி கிராஸியானி சேனாபதி பதவியை ஏற்றுக் கொண்டார்.

ஆங்கிலோ—பிரெஞ்சு சிநேக ஒப்பந்தத்தை ருமேனியா ரத்து செய்து விட்டது. பிரிட்டிஷ் கால்வாயிலுள்ள ஜெர்ஸி, நியு கெரென்ஸி என்ற தீவுகளில் ஜெர்மானியப் படைகள் வந்திறங்கின.

2 யுத்தம் முடிந்ததும் பர்மாவின் அரசியல் அந்தஸ்து நிர்ணயிக்கப் படுமென்று பர்மா கவர்னர் தமது ரேடியோ பிரசங்கத்தில் கூறினார்.

3 ஜெர்மானிய, இத்தாலிய யுத்தக் கைதிகளை கானடாவுக்கு அழைத்துச் சென்ற அரோண்டாஸ் டார் என்ற கப்பலை ஜெர்மன் நாசகாரிப் படகு ஒன்று மூழ்கடித்து விட்டது.

4 பிரெஞ்சுக் கப்பல்கள் ஜெர்மானியர் வசம் சிக்கிக் கொள்ளாதபடி பிரிட்டிஷ் அரசாங்கத்தார் எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொள்வர் என்று ஸ்ரீ சர்ச்சில் பார்லிமெண்டில் பேசினார்.

ருமேனிய மந்திரிச் சபை ராஜீநாமா செய்து விட்டது.

நியூயார்க் நகரத்தில் நடைபெற்ற உலகப் பொருட் காட்சியில் ஒரு வெடி குண்டு விபத்து ஏற்பட்டது.

5 ஐர்லாந்து, இறுதி வரை நடு நிலைமையே வகிக்குமென்று டிவேலரா கூறினார்.

பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் அரசியல் தொடர்பை அறுத்துக் கொள்வதாக பிரெஞ்சு அரசாங்கம் அறிவித்து விட்டது.

ஜிப்ரால்டர் மீது இன்று முதன் முதலாக இத்தாலிய ஆகாய விமானங்கள் வெடி குண்டுகள் எறிந்தன.

சீன அரசாங்கத்தின் தலை நகரான சூங்கியாங்கில் பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் வெடி குண்டுகள் எறிந்தன.

6 ஸ்வீடன் வழியாக ஜெர்மனி, தனது துருப்புகளையும் யுத்தச் சாமான்களையும் எடுத்துச் செல்லலாமென்று ஸ்வீடன் அரசாங்கம் உத்திர விட்டிருக்கிறது.

7 பெர்லின் நகரத்தில் ஹிட்லரும் கவுண்ட் சியானோவும் இன்று சந்தித்துப் பேசினார்கள்.

சீன—ஜப்பானிய யுத்தம் ஆரம்பித்த மூன்றாவது வருஷக் கொண்டாட்டம் இன்று சீனாவிலும் ஜப்பானிலும் கொண்டாடப்பட்டது.

8 பர்மா வழியாகச் சீனாவுக்கு யுத்த தளவாடங்கள் அனுப்புவதைப் பற்றிப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இன்று ஜப்பானிய அரசாங்கத்திற்குப் பதில் அளித்திருக்கின்றனர்.

9 மத்திய தரைக் கடலில் பிரெஞ்சுப் படைக்கும் பிரிட்டிஷ் கப்பற் படைக்கும் யுத்தம்.

வின்ட்ஸர் கோமகன் பஹாமா தீவுகளின் கவர்னராக நியமனம் பெற்றிருக்கிறார்.

10 பிரிட்டிஷ் கால்வாயில் பிரிட்டிஷ் ஆகாய விமானங்களுக்கும் ஜெர்மன் ஆகாய விமானங்களுக்கும் பெரிய யுத்தம்.

11 ருமேனியா சர்வ தேச சங்கத்திலிருந்து விலகிக் கொண்டு விட்டது.

பிரான்சின் புதிய அரசியல் திட்டப்படி தளபதி பெடேய்ன் பிரதம அதிகாரியாக நியமிக்கப் பட்டிருக்கிறார்.

12 பர்மா கவர்னரின் மூன்றாவது ஆலோசனையாளராக மாங்ஜீ நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்.

பிரெஞ்சு மந்திரிச் சபை ராஜீநாமா செய்து விட்டது.

போதிய கப்பல் போக்கு வரத்து வசதிகளில்லாமையால் பிரிட்டனிலிருந்து அமெரிக்காவுக்குக் குழந்தைகளை அனுப்பும் திட்டம் கைவிடப் பெற்றது.

13 பிரான்சில் புதிய மந்திரிகளை, தளபதி பெடேய்ன் நியமனம் செய்து விட்டார்.

14 ஜெர்மனியின் படையெடுப்புக்கு இங்கிலாந்து எவ்விதத்திலும் தயாரா யிருக்கிறதென்று ஸ்ரீ சர்ச்சில் ரேடியோவில் பேசினார்.

15 ஜப்பானுடைய ஆதினத்திற்குட் படாத சீனத் துறை முகங்களின் மீது தாங்கள் நடவடிக்கை யெடுத்துக் கொள்ளப் போவதாக ஜப்பான் அரசாங்கம் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை செய்திருக்கிறது.

16 ஜப்பானில் மந்திரிச் சபை ராஜீநாமா செய்து விட்டது.

18 பர்மாவழியாகச் சீனாவுக்கு மூன்று மாதங்கள் வரை எவ்வித ஆயுதங்களும் அனுப்பவதில்லை யென்று பிரிட்டிஷ் அரசாங்கத்தார் ஜப்பானிய அரசாங்கத்திற்குத் தெரிவித் திருக்கின்றனர். ஜப்பானில் புதிய மந்திரிச்சபை அமைந்து விட்டது.

19 ஹிட்லர் இன்று ஜெர்மன் பார்லி மெண்டில் நீண்டதொரு பிரசங்கம் செய்தார்.

21 லாட்வியா, லிதுவேனியா, எஸ்டோனியா ஆகிய மூன்று நாடுகளும் சோவியத் குடியரசு முறையைத் தழுவிக் கொண்டன.

சர்வ அமெரிக்கா மகா நாடு இன்று க்யூபாவில் கூடியது.

22 ஹிட்லர் ஜெர்மன் பார்லிமெண்டில் பேசிய பேச்சுக்கு, பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரியான லார்ட் ஹாலிபாக்ஸ் பதில் அளித்திருக்கிறார்.

25 நடு நிலைமை நாடுகளின் வழியாக ஜெர்மனிக்கும் இத்தாலிக்கும், சில எண்ணெய்ப் பொருள்கள் அனுப்புவதில்லையென்று அமெரிக்கா தீர்மானித் திருக்கிறது.

இந்தியாவில் ஒரு ரூபாய் நோட்டுகள் செலாவணிக்குக் கொண்டு வரப்பட்டன.

பெட்ரோலியம் தொழிலைப் புதிய முறையில் நிர்மாணஞ் செய்யும்படி மெக்ஸிகோ குடியரசுத் தலைவர் உத்திர விட்டிருக்கின்றார்.

26 ருமேனியா மந்திரிகளும் ஹிட்லரும் இன்று சந்தித்துப் பேசினார்கள்.

பர்மா அரசாங்கத்தில் முன்னர் ஒரு மந்திரியாக இருந்த டாக்டர் தெய்ன்மாங் கைதி செய்யப் பட்டார்.

27 போர்ட் செயிட் துறை முகத்தில் மூன்று ருமேனியக் கப்பல்கள் தடை செய்து நிறுத்தப் பட்டிருக்கின்றன.

28 ஜப்பானில் ஒன்பது பிரிட்டிஷ்காரர் கைது செய்யப் பட்டிருக்கின்றனர்.

ருமேனியா, சமீபத்தில் ஜெர்மனிக்குச் சாதகமாக நடந்து கொண்டிருக்கிற மாதிரியை பிரிட்டன் கண்டித் திருக்கிறது.

29 பர்மா சட்ட சபையில் எதிர் கட்சித் தலைவரா யிருந்த டாக்டர் பாமோ சட்ட சபையினின்று ராஜீநாமா செய்து விட்டார்.

டோவர் துறை முகத்தில் இன்று ஜெர்மன் ஆகாய விமானங்கள் குண்டுகள் எறிந்தன.



கனகாம்பரம்

முதலிய கதைகள்

ஆசிரியர்: ஸ்ரீ கு. ப. ராஜ கோபாலன் பி. ஏ; வெளியிட்டோர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை; டபிள் கிரவுன் அளவு 1X16; 213 பக்கங்கள்; விலை: பன்னிரண்டணு.

சிறு கதைகளில் எப்பொழுதுமே நமக்கு அதிகமான மோகம் கிடையாது. ஏனென்ருல், நமது நாட்டின் தற்காலத் தேவைகளை, நமது ஆதுநிக இலக்கிய வளர்ச்சியை, அவை பூர்த்தி செய்ய வில்லை. நமது தேவையை எது பூர்த்தி செய்ய வில்லையோ அது தேவை யல்லாததுதானே. ஆனல் சிறு கதைகள், இலக்கியக் களஞ்சியத்தில் ஒரு முக்கியமான அமிசம். இதை நாம் மறுக்கவில்லை. யாரும் மறுக்க முடியாது. ஆனல் இதை விட முக்கியமான பல அமிசங்கள் பூர்த்தி செய்யப் படாமலேயே இருக்க, இந்தச் சிறு கதை அமிசத்திற்கு மட்டும் ஏன் இவ்வளவு அவசரம் என்ற ஒரு காரணத்திற்காகவே, சிறு கதைகளில் நமக்கு அதிகமான மோகமில்லை யென்று கூறுகிறேம். அதிலும், தமிழ்ப் பாஷையில் சிறு கதைகள் என்ற பெயரைத் தாங்கிக் கொண்டு வெளியாகும் வாக்கியக் கோவைகளை நாம் பார்க்கிறபோது, தமிழர்களின் ரஸனுநுபவத்திற்குச் சில ஆசிரியர்கள் எவ்வளவு குறைவான மதிப்பு வைத்திருக்கிருர்கள் என்றே விசனப்படுகிறேம். ராமாயண கதையைப் பூராவும் தெரிந்து கொள்ளாத ஒருவன், எப்படி ராம நாடகத்தில் ராமனுக வேஷந் தரித்துக் கொண்டு அரங்கத்தில் தோன்றி, 'ராம நீ சமான மெவரு' என்ற கீர்த்தனையைப்பாடி சபையோர்களின் கை தட்டுதலை ஜீவனுடன் எதிர்பார்க்கிருனே, அதைப் போல் ஒரு கதா பாத்திரத்தைச் சரியாகச் சிருஷ்டிக்கக் கூடத் தெரியாத சில ஆசிரியர்கள், சிறு கதைகள் எழுதி வெளியிட்டு, தமிழர்களின் அங்கீகாரத்தை எதிர்பார்க்கிருர்கள். என்ன ஆச்சரியம்! தமிழர்களை இப்படித்தானு அவமானப் படுத்த வேண்டும்!

இவ்வளவு தூரம் ஏன் பீடிகை போடுகிறீர்கள்? கனகாம்பரம் என்ற இந்தக் கதை உங்களுக்குப் பிடிக்க வில்லையா என்று நண்பர்கள் அவசரப்

பட்டுக் கேட்கலாம். இல்லை, இல்லை. கனகாம்பரம் நிரம்பப் பிடித்திருக்கிறது. இதற்காகவே இவ்வளவு தூரம் பீடிகை போட்டுக் கொண்டோம்.

ஸ்ரீ ராஜகோபாலன் தமது கதாபாத்திரங்களைச் சிருஷ்டித்து, அவர்களைச் சுயமாக வளர விட்டிருக்கிற திறமை அபூர்வமானது. அந்தப் பாத்திரங்களைப் பார்த்து மட்டும் திருப்தியடைய முடியாது. அநுபவித்துத்தான் திருப்தியடைய முடியும். அவ்வளவு லளிதமாக வாசகர்களின் கவனத்தை தம்முடைய சிருஷ்டிகளுடன் இணைத்து விட்டிருக்கிறார் ஸ்ரீ ராஜகோபாலன். இவருடைய கதைகளை வெறுமனே படித்தால் மட்டும் போதாது; அநுபவிக்கவும் வேண்டும்.

தவிர, ஸ்ரீ ராஜகோபாலன், உலக அநுபவங்கள் சிலவற்றை அபூர்வமாக எடுத்துக் காட்டுவதோடு, அவற்றிற்கியைந்தாற் போல் சில உபமான உபமேயங்களையும் திறமையாகக் கையாண்டிருக்கிறார். சில உதாரணங்களைப் பாருங்கள் :—

'மோக வெயிலிலிருந்து அப்பொழுதுதான் வாழ்க்கை வீட்டிற்கு நுழைந்திருந்தோம். எதிரே இருந்தவொன்றும் கண்ணில் படவில்லை. இப்பொழுது கொஞ்சங் கொஞ்சமாக எல்லாம் தென்படுகிறது. பழத்தின் இனிப்பு வாயில் குறைந்தவுடன் தோலின் கசப்புத் தென்படுகிறது.'

பக். 32

ஃ ஃ ஃ

'என் தாய் இருந்தபொழுது, நாங்கள் தனியாக இல்லாத பொழுது, 'சண்டை' இல்லை! தாய்கூட இருந்த பொழுது இருந்த நிர்ப்பந்தத்தில் இருவருக்கும் 'சண்டை' போடச் சாவகாசங்கூட இல்லை. தளைகளிலேதான் தனிமையின் சுயேச்சை நன்கு பரிமளித்தது. மறைவிலேதான் மகிழ்ச்சி இருந்தது; நிர்ப்பந்தத்தில், கட்டுப்பாட்டில்—இன்பம்! விடுதலையில் வெறுப்பு!'

பக். 35

ஃ ஃ ஃ

'அவளுடைய ரோஜா அழகு வறுமை முள்ளில் கிடந்தது.'

பக். 46

ஃ ஃ ஃ

'ஒருவரையொருவர் பார்க்க ஏங்குவதிலும், பார்த்து ஏங்குவதிலும், பார்க்காமல் ஏங்குவதிலும் காலம் சென்றது.'

பக். 141

ஃ ஃ ஃ

'இருவர்களுடைய இருதயங்களையும் ஒன்று சேர்க்கும் இரவு வருமா என்று ஏங்கிய காலம் போய் நரக வேதனையைப் போக்கும் பகல் போகிறதே என்ற காலம் வந்தது. 'ஒரு வார்த்தை சொல்ல மாட்டாயா' என்ற காலம் போய் 'பேசாமலிரு' என்ற காலம் வந்தது.'

பக். 146

ஃ ஃ ஃ

'மேலே வானம் கறுத்து மழை எந்த நிமிஷம் வருமோ என்று இருந்தது. பக்கத்தில் ரோட்டின் ஓரத்திலிருந்த மேடைமேல், வீடற்ற ஏழைகள் ஈசல்கள் போல நிறைந்திருந்தார்கள். மழை வந்தால் அந்த அநாதைகள் என்ன செய்வார்கள் என்று யோசித்தவாறு நின்று கொண்டிருந்தேன்.

இரவும் பகலும் அவர்கள் அங்கேதான் வாசம் செய்வார்கள். ரோட்

டின் எல்லையாக இருக்கும் அந்தச் சுவரோரத்தில் கல்களை வைத்து ஏதாவது கிடைத்ததைச் சமைத்துச் சாப்பிடுவார்கள்; கிடைக்கா விட்டால் மரத்தடியிலோ வானத்தடியிலோ படுத்துக்கொண்டு விடுவார்கள்; பஸ் பிரயாணிகள் கொடுக்கும் சில்லறைக்கு ஆப்பமோ, தோசையோ வாங்கிச் சாப்பிடுவார்கள். கிழிந்து சிக்குப் பிடித்த உடைகள் அவர்கள் உடலைப் பொத்திக் கொண்டிருக்கும். வறுமையின் கொடுமை அதற்குமேல் அவர்களை என்ன செய்ய முடியும்? மானத்தைக் கூட இழக்கும் தறுவாயில் அவர்களை வைத்துப் பிறகு என்ன தான் செய்யக்கூடும்? அந்த வெறும் நிர்க்கதியில் அவர்களுக்கு ஒரு கோரமான சிரிப்பும் சந்தோஷமும் இருந்தன. கேலி பேசுவார்கள்; வம்பளப்பார்கள்; ஒருவருக்கொருவர் சிக்குத் தலையில் பேன் பார்த்துச் சொடுக்குவார்கள். அசங்கியமான வார்த்தைகளும் செய்கைகளும் அவர்களுக்குக் கொஞ்சங்கூடச் சிரமமாக இல்லை.'

பக். 153-54

ஃ ஃ ஃ

'நான் பலாத்காரமாக அவள் ஹிருதயத்தைப் பறிக்க முயன்றேன். கமலம் கஞ்சி கொடுத்து என்னைச் சோதித்தாள். நான் தோல்வி அடைந்தேன். அவள் இனிமேல் என் அருகில் வரமாட்டாள்!

ஒரு வேளை, அவள் ஹிருதயத்தின் கதவைக் கொஞ்சம் திறந்து வைத்திருந்தாலும் இப்பொழுது மூடிக் கொண்டு விடுவாள், நிச்சயம்!

அவள் பார்வை இனிமேல் என் முகத்தில் பாயாது; அவள் மூச்சு இனிமேல் பரவாது, அவள் கை என் துதியைத் தூரத் தள்ளும்.'

பக். 210

கனகாம்பரத்திலே அடங்கியுள்ள இருபத்தோரு கதைகளும் மிக ரஸமாயிருக்கின்றன. சிறப்பாக 'தாய்' என்ற கதையும் 'திரை' என்ற கதையும் நமது இருதய நாடியை உலுக்கி விட்டு விட்டன. ஸ்ரீ ராஜகோபாலனுடைய சிருஷ்டியில் நாம் மயங்கி, மெய் மறந்து விட்டோம். இதற்காக ஸ்ரீ ராஜகோபாலனுக்கு நமது மனமார்ந்த வாழ்த்து.

சக்ரவாகம்

முதலிய கதைகள்

ஆசிரியர் ஸ்ரீ. ந. சிதம்பர சுப்ரமணியம்; வெளியிட்டோர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை; டபிள் கிரவுன் அளவு 1X16; 193 பக்கங்கள்; விலை பன்னிரண்டு அணா.

ஸ்ரீ சிதம்பர சுப்பிரமணியம் சிறந்த ஓர் எழுத்தாளர் என்பதை நாம் நன்கு அறிவோம். இதற்கு முன்னர், இவருடைய சிறு கதைகளில் சிலவற்றைப் படித்து அநுபவித்திருக்கிறோம். ஏற்கனவே அநுபவித்திருக்கிற ஒரு காரணத்தினாலேயோ என்னவோ, இந்த 'சக்ரவாகம்' என்ற கதைத் தொகுதி நம்மை அதிவேகமாக ஆகர்ஷிக்க வில்லை. அஃது எம்முடைய குறைதான்; ஸ்ரீ சிதம்பர சுப்ரமணியத்தின் குறையன்று. இவருடைய எழுத்துக்களை—சிறு கதைகளை—பத்தரை மாற்றுத் தங்கத்தினால் செய்யப்பட்ட ஆபரணங்களின் வரிசையில் வைத்தே

மதிப்பிட விரும்புகிறோம். ஒரு நகை தலையிலே அணியக் கூடியதா யிருக்கலாம்; இன்னொன்று கையிலே போட்டுக் கொள்ளக் கூடியதா யிருக்கலாம். இதற்காக இவற்றின் மதிப்பு ஒரு சிறிதும் போகவில்லை.

'ஊர்வலத்தில்' என்ற கதை மிகவும் உயர்தரத்தது.

'வாழ்க்கைச் சிக்கலில் அகப்பட்டுக் கொள்ளாத ஞானியைப் போல நாகராஜன் கூட்டத்தில் நுழைந்து கலந்து கொள்ளாமல் மத்தாப்புக்காரன் பக்கத்தில் நின்று கொண்டிருந்தான். உலக வேடிக்கைகளைக் கண்டு மந்தஹாஸம் செய்யும் தத்வதர்சியைப் போன்றிருந்தான் அவன். ஆனால் அவன் மனம் உலகத்திலிருந்து விடுபட்டுச் சூன்யமாகி விடவில்லை. அவன் மனமும் கண்களும் காருக்குப் பக்கத்திலிருக்கும் ஒரு பெண்ணின் கருவிழி வட்டங்களைத் தேடிக் கொண்டிருந்தன. அவனைக் கேட்டால், 'ப்ரும்மம் சூன்யமன்று. அந்த இரு வட்டங்களே' என்றிருப்பான்.'

பக். 12

என்று ஆசிரியர், நாகராஜனை வருணித்திருப்பது எவ்வளவு ரஸிக்கக் கூடிதா யிருக்கிறது!

'லக்ஷ்யவாதி' என்ற கதையில் ராமநாதன் என்பார், பத்திரிகாசிரியத் தொழிலை ஏற்று அவஸ்தைப் படுவதைப் ஸ்ரீ சிதம்பர சுப்பிரமணியம் அழகாகச் சித்திரித்திருக்கிறார்.

'அன்னதான சமாஜம்' என்ற கதையில். பிச்சைக்காரர்களின் கோஷ்டியை ஆசிரியர் எப்படி வருணித்திருக்கிறார் பாருங்கள் :—

'அங்கமெல்லாம்குறைந்து விரல்கள் போனவரும், மூக்குப் போனவரும், காதுகள் கரைந்து போனவரும் பலர். செவிட்டுக் கோஷ்டி ஒன்று. உடம்பு முழுவதும் சொறி சொறியாக இருப்பவர் சிலர். ஒருவனுக்கு, முகம் காது எல்லாம் வீங்கி உடம்பில் பாதி தலையாயிருக்கும். ஒருத்தி, நெருப்பில் விழுந்திருப்பாள் போலிருக்கிறது; உடம்பு முழுவதும் வெந்து, வெள்ளை வெளேரென்று மேடும் பள்ளமுமாகச் சொர சொரப்புடன் விளங்குவாள். சதையே யில்லாமல் வெறும் எலும்புக் கூட்டைத் தூக்கிக் கொண்டு வருவாள் மற்றொருத்தி. சதா பச்சிலையோடு இருக்கும், மடக்க முடியாத ஒரு கையைத் தூக்கிக் கொண்டு வருவாள் வேறொருத்தி. இருக்க வேண்டிய இடத்தில் இல்லாமல் எங்கெங்கேயோ முளைத்திருக்கும் கைகால்களை யுடைய ஜந்து ஒன்று. இன்னும் எவ்வளவோ சொல்லத் தொலையாது.'

பக். 115

'தாய் நட்சத்திரம்' என்ற கதையில் தாயுள்ளம் அப்படியே படம் பிடித்துக் காட்டப் பட்டிருக்கிறது; இந்தக் கதைத் தொகுதிக்கே ஒரு சிகரம் போன்றிருக்கிறது.

ஸ்ரீ சிதம்பர சுப்பிரமணியம், ஸ்ரீ கு. ப. ராஜ கோபலன் போன்ற இளமை மனமுடைய முதிய அறிஞர்கள், தமிழ்ச் சிறுகதை யுலகத்தில் நிரந்தரமாக வாழ்ந்து கொண்டிருப்பார்கள். அவர்களுடைய சிரஞ்சீவி வாழ்க்கையானது, ரஸானுபவிகளை என்றும் சிரஞ்சீவிகளா யிருக்கச் செய்யும் என்பதில் என்ன சந்தேகம்?

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தீர்மானம்

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டம் 1940ம் வருஷம் ஜூலை மாதம் 27ந் தேதி புனாவில் மௌலானா அபுல் கலாம் அஸாத்தின் தலைமையில் நடைபெற்றது. அப்பொழுது கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது:—

1940ம் வருஷம் ஜூன் மாதம் 21ந் தேதி காரியக் கமிட்டியார் வெளியிட்ட அறிக்கையை* அ. இ. கா. கமிட்டியார் பரிசீலனை செய்துபார்த்து அதனை ஊர்ஜிதம் செய்கின்றனர். மேற்கண்ட அறிக்கையில் விளக்கப்பட்டிருக்கிறபடி, காங்கிரஸானது, சுதந்திரப் போராட்டத்திற்காக அஹிம்சைக் கொள்கையைக் கண்டிப்பாக அநுஷ்டிக்க வேண்டுமென்ற கொள்கையைக் கடைப் பிடிக்கிறதாயினும், அதனை—அஹிம்சைக் கொள்கையை—சுதந்திர இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு விஷயத்தில் விஸ்தரித்துக் கொள்ள முடியாதென்று அ. இ. கா. கமிட்டி அபிப்பிராயப்படுகிறது.

எல்லாக்காங்கிரஸ் ஸ்தாபனங்களும் அஹிம்சைக் கொள்கையின் மீதுதான் நடத்தப்பட வேண்டுமென்பதையும், எல்லாக் காங்கிரஸ் தொண்டர்களும் தங்கள் கடமையைச் செய்யும் விஷயத்தில் அஹிம்சையையே அநுஷ்டிக்க வேண்டுமென்பதையும், இந்த அஹிம்சைக் கொள்கையை அடிப்படையாகக் கொள்ளாமல், எந்தக் காங்கிரஸ் தொண்டர் படை ஸ்தாபனங்களும் நிறுவப்படக் கூடாதென்பதையும் அ. இ. கா. கமிட்டி வற்புறுத்த விரும்புகிறது. காங்கிரஸ்

* இது 'ஜோதி'யின் சென்ற இதழில் வெளியாகியிருக்கிறது.—ஆசிரியர்.

ராம்கார் காங்கிரஸ்

வைபவம்

தொகுத்தவர்: ஸ்ரீ ஆர். நாராயணையங்கார், பி. ஏ. பி. எல்; வெளியிட்டோர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை; டபிள் கிரவுன் அளவு 1X16; 158 பக்கங்கள்; விலை: பத்து அணா.

ராம்கார் காங்கிரஸ் நடவடிக்கைகளைத் திரட்டி இந்த நூலில் தரப்பட்டிருக்கின்றன. பிற்காலத்தில், ராம்கார் காங்கிரஸில் என்னென்ன நடந்ததென்று பார்க்க விரும்புவோர்க்கு உபயோகமாயிருக்கும். ஆனால், இந்த ஆசிரியரின் கை வன்மையை, இந்த நூலைக் கொண்டு மதிப்பிட்டுவிட முடியுமா? ஆயினும், ஸ்ரீ நாராயணையங்கார் எடுத்துக் கொண்ட காரியத்தைச் சரியாகச் செய்து முடித்திருக்கிறார்.

காரர்கள் சம்பந்தப்பட்டு தற்காப்புக்காக ஸ்தாபிக்கப்படும் வேறெந்த தொண்டர் படை ஸ்தாபனமும் அஹிம்சைக் கொள்கையையே அநுஷ்டிக்க வேண்டும்.

7–7–40ல் காங்கிரஸ் காரியக் கமிட்டியார் டெல்லியில் கூடி நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை இந்த அ. இ. கா. கமிட்டி அங்கீகரிக்கிறது.

காரியக் கமிட்டி தீர்மானம்

அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டி டெல்லியில் மௌலானா அபுல் கலாம் அஸாத்தின் தலைமையில் 7–7–40ல் கூடியது. அப்பொழுது கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப் பட்டது:—

இந்திய அரசியல் நிலைமையில் ஏற்பட்டிருக்கிற சிக்கலுக்குப் பரிகாரம் வேண்டுமென்று பல வேண்டுகோள்கள் விடப் பட்டிருப்பதற்கான பல விசேஷ சம்பவங்கள் நடை பெற்றிருப்பதையும், மற்றும், காங்கிரஸின் நிலைமையைத் தெளிவு படுத்தி விட வேண்டுமென்பதற்காக, உலக நிகழ்ச்சிகளை முன்னிட்டுச் சமீபத்தில் ஏற்பட்டிருக்கிற சம்பவங்களையும் காங்கிரஸ் கமிட்டியார் நன்கு பரிசிலனை செய்து பார்த்தனர்.

தற்போது இந்தியாவிலும் பிரிட்டனிலும் ஏற்பட்டிருக்கிற பிரச்னைகளுக்குப் பரிகாரந் தேட வேண்டுமானால், இந்தியாவுக்குப் பூரண சுதந்திரம் கொடுக்க வேண்டுமென்பதை பிரிட்டன் அங்கீகரிக்க வேண்டுமென்பதை கமிட்டியார் உணர்கின்றனர். ஆதலால் இது சம்பந்தமாக உடனே ஓர் அறிக்கையைப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் வெளியிட வேண்டுமென்று காரியக் கமிட்டியார் அபிப்பிராயப்படுகின்றனர். இதனை நடைமுறையில் கொணர்வதற்கு முன்னர், மத்திய அரசாங்கத்தில் ஒரு தற்காலிக தேசிய அரசாங்கம் ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும், இந்தத் தற்காலிக தேசிய அரசாங்கம், இந்தியா சட்ட சபையின் நம்பிக்கையைப் பெற்றுள்ளதாய் இருக்க வேண்டுமென்றும், அப்பொழுதுதான் எல்லா மாகாண அரசாங்கங்களின் ஒத்துழைப்பும் கிடைக்குமென்றும் காரியக் கமிட்டியார் அபிப்பிராயப் படுகின்றனர்.

மேற் கண்ட விதமாக அறிக்கை வெளியிடப் பட்டு, தாமதமின்றி மத்தியத்தில் ஒரு தேசிய அரசாங்கம் அமைக்கப் பட்டாலன்றி, பாதுகாப்புக்காகத் திரட்டப்படும் எல்லாப் பொருள்களும் ஒரு சுதந்திர நாட்டிலிருந்து சுயமாகப் பெறப்படுகிற பொருள்களாகக் கருதப்படா. இந்தத் திட்டங்கள் அமுலுக்குக் கொண்டு வரப் பட்டால், தேசத்தின் தற்காப்பு ஏற்பாட்டில் காங்கிரஸானது தனது பூரண பலத்தையும் உதவும் என்று கமிட்டி தெரிவிக்கிறது.

—"சங்கரகுமாரன்"

தமிழ் நாவல்கள்

மேனாட்டு நாகரிகம் பல வாயில்களால் நமது நாட்டினுட் புகுந்து பரவி வருகின்றதென்பது மறுக்கப் பாலதன்று. அவ்வாயில்களுள் "நாவல்" என்பதொன்று. நவீன நடையுடை பாவனைகள் நமக்குத் தெரிந்தும் தெரியாமலும் நம் நாட்டை ஆக்கிரமித்து வருவதைப் போல் நாவல்களும் எங்கும் வியாபித்து வருகின்றன. கண்ட நாவல்களை வாசித்து நம் சமூக வாழ்க்கையைக் கெடுத்து வருகின்றோம் என்று பலர் வருந்துகின்றனர். மேலும் நாவல்கள் பிறந்த மேனாடுகளிலும் சிறுவர்களும் சிறுமியர்களும் ஆடவர்களும் பெண்மணிகளும் கையினாலுந் தொடக்கூடாத நிலைமையிலுள்ள நன்னெறிக் கிடையூறுற்ற கற்பனைக் கதைகளைத் தலையணையின்கீழ் ஒளித்து வைத்துக் கொண்டு ரகசியமாய்ப் படிக்கின்றனர் எனினும், இங்ஙனஞ் செய்வது தங்கள் நாடுகளுக்குக் கேடு விளைக்கின்றதென்றும், பலர் கூக்குரலிடுவது நம்மவர்கள் அறிந்த விஷயமேயாகும்.

வங்காளம், மகாராஷ்டிரம், ஆந்திரம் முதலிய பாஷைகளில் தோன்றியிருக்கும் நாவல்களில்பெரும்பான்மையானவைகள் தேச பக்தியையும் பாஷையின் மேம்பாட்டையும் பயந்திருப்பதாய்ச் சொல்லப்படுகின்றன. ஆனால் நமக்குத் தெரிந்தவரை தமிழ் நாவல்கள் அநேகமாய் காளான்களைப் போல் தோன்றி யிருக்கின்றனவே யல்லாது புஷ்பச் செடிகளாகவாவது பலன் தரக் கூடிய மரங்களாகவாவது இல்லை யென்பது பலரபிப்பிராயம்.

தமிழ்ப் பாஷையில் வரையப் பட்டிருக்கும் அநேக நாவல்கள் சரித்திர மத்திய காலத்திய ஐரோப்பிய "ரொமான்ஸ்" என்கிற கற்பனைக் கதைகளை ஒத்திருக்கின்றன; எங்ஙனமெனின், ரோமன் பாஷையும் லாடின் பாஷையும் கலந்த ரொமான்ஷியம் என்கிற பிராகிருத உப பாஷையில் முதலில் செய்யுள் ரூபமாயும் பிறகு வசன ரூபமாயும் சிற்றின்பத்தைப் பிரதானமாய்க் கொண்டு உயர்தர வகுப்பைச் சார்ந்த தலைமகன், தலைமகள், அவர்களைச் சார்ந்த பரிஜனங்கள் முதலியவர்களின் வீரசாகசச் செயல்களையும் சிருங்கார ரசத்தையும் வெளிப்படையாய் வர்ணிக்கும் நாவல்களைப் போல் தமிழ் நாவல்களும் ஆங்கில மொழிகளையுந் தமிழ் மொழிகளையும் மணிப்பிரவாளமாகக் கலந்து அவைகளைச் சாமானிய ஜனங்களுச்சரிப்பது போல் எழுத்துக்களால் குறிப்பிட்டுக் காட்டி உற்சாகத்தை யூட்டிப் படிப்பவர்கள் சித்தத்தை மட்டில் கவர்கின்றன. முற்கூறிய மணிப்பிரவாளம் பாத்திரா பாத்திர வித்தியாசமின்றி உபயோகப் படுத்தப் படுவதுடன் நூலாசிரியர்களது வசனங்களிலும் காணப்படலாம்.

மேலும் சில நாவல்களில் காலை மாலைப் போழ்துகளையும் சூரியனையும் சந்திரனையும் காடுகளையும் மரங்களை

யும் தோட்டங்களையும் புஷ்பங்களையும் வர்ணித்திருப்பதைப் பார்த்தால் அவைகளில் பல நமது ஆதிகாவியங்களில் சொல்லப் பட்டவைகளாகவாவது ஆங்கில நாவல்களில் சொல்லப் பட்டவைகளாகவாவது இருக்கின்றன. இவைகள் கால தேசங்களுக்குத் தக்கவாறு மாறி விடுகின்றமையால் எந்த சந்தர்ப்பத்திலோ யாரோ எந்த ஊரிலேயோ பாடினதைப் பாடுவது யுக்தமன்று. இவ்வாறு யான் கூறி வந்ததனால் நமது கற்பனு சக்தியை யடக்கிவிட வேண்டுமென்றுவது நாவல்களைப் படிப்பவர் உற்சாகத்தைக் குறைக்க வேண்டுமென்றுவது நாவலாசிரியர்களைக் குறைகூறியதாகவாவது இதைப் படிப்பவர்கள் நினைக்கக் கூடாது. கற்பனை சக்தி யென்பது மனிதனுக்கோர் விசேஷ சம்பத்து. அது ஆனந்தத்தை விளைக்கும். அதனால்தான் உலகில் பல நூல்கள் விரிந்திருக்கின்றன. ஆனால் கற்பனு சக்தியை எம்மட்டில் உபயோகிக்க வேண்டுமென்பதுதான் கேள்வி. மேனுடுகளில் கட்டுரைகள் என்பவை பற்பல பாகுபாடுகளுக் குட்பட்டவை. குழந்தைகட்கு பிரியமான "பேரி டெய்ல்ஸ்" அஃதாவது தேவதா ஸ்திரீகள் தேவதைகள் முதலியோர்களின் கதைகள் ராட்சஸர்களின்சாகசங்கள் என்பவைகளுமிருக்கின்றன. "பேபில்ஸ்" என்ற நீதி மொழிக் கட்டுக் கதைகளுக்கும், முந்தி கூறப் பட்டவைகட்கும் வித்தியாசங்களுண்டு. இவ்விரண்டு தினுசுகளுக்கும் வித்தியாசப் பட்டவை "ரொமான்ஸ்" என்பவைகள். அவைகட்கும் நாவல்களுக்கும் சில பேதங்களுண்டு. இவைகளெல்லாம் இலக்கியங்களில் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

ஆனால் எத்தகைய நூல்கள் அப்பதவியை யடைகின்றன. என்பதற்கு வரன்முறைகளிருக்கின்றன. பொழுதுபோக்குக்காக மட்டில் ஏற்பட்டிருக்கின்ற நாவல்களும் ஜன சமூக வாழ்க்கையையும் ஆட்சி முறைகளையும் வரன்முறையின்றிக் கண்டிக்கும் நாவல்களும் சிற்றின்ப ரசத்தை மட்டும் போதிக்கும் கதைகளும் பெயர் மட்டில் துப்பறியும் நாவலெனவும் உண்மையில் புத்திசாலித் தனமான செயல்களல்லாத வம்புகளும் உயர்தர இலக்கியங்களில் சேர்க்கப் படுகிறதில்லை. அபூர்வமான நாவல்கள் எனப்படும் ரெயினல்ட்ஸ் கற்பனைக் கதைகளும் ஆங்கிலேய இலக்கியங்களில் சேர்க்கப்படவில்லை. கற்பனைக் கதைகள் இலக்கிய நிலைமை யடைய வேண்டுமெனின் நல்ல நடையில் எழுதப்பட வேண்டும். அவைகள் வரையப் பட்டிருக்கும் பாஷையின் மேம் பாட்டுக்குக் காரணங்களாயிருக்க வேண்டும். அவைகளின் நோக்கம் பரிசுத்தமாய் இருக்கவேண்டும். தேசா சாரம், மதா சாரம், ஆட்சி முறை முதலிய சீர்திருத்தங்களுக்குத்தக்க மார்க்கங்களைக் காட்ட வேண்டும். குற்றங்களை வெளிப்படுத்து வதில் இழிவான முறையை யனுஷ்டிக்காம லிருக்க வேண்டும். சிருங்கார ரசத்தைப் பச்சையாய்ப் பேசாமல் பக்குவமாய் வெளிப்படுத்த வேண்டும. வீர ரசம் அற்புத ரசம் முதலியவைகள் கூடிய மட்டில் நம்பத்தக்கதாயும் நடக்கக் கூடியனவாயுமிருத்தல் நன்று.

சதா

விக்கிரமன்

எல்லாவற்றிற்கு மேலாய் இலக்கியங்கள் என்பவை இவைகளின் சமகாலத்திய சரித்திர நிதியா யிருக்க வேண்டும். அல்லது எக்காலத்திய விஷயத்தைப் பிரதானமாய் விளக்குகின்றனவோ அக்காலத்திய சரித்திரத்தை நன்கு விளக்க வேண்டும். ஆதலால்தான் ஊர்ப் பெயர், தெருப் பெயர், அறைகளின் விவரம், வருஷம், மாதம், தேதி, மணி, நிமிஷம் முதலிய கால தேசங்களைக் குறிப்பிடுகின்றன.

இவைகளெல்லாம் கற்பனைகளாயினும் உத்தேசிக்கும் பொருளது உண்மையை யுணர்த்துகின்றன. கற்பனைக் கதைகளில் காணப்படும் சம்பவங்கள் பொய்யா யிருக்கலாம். ஆனால் அவைகள் நடத்தக் கூடிய நிலைமைகளிலுள்ளவைகளாகத் தோன்றி விடும். கற்பனைகளாயினும் இயற்கைக்கு விரோதமாய் விகற்பமாகத் தோன்றக் கூடாது. பதினெட்டாவது நூற்றாண்டில் நடந்த ஓர் சம்பவத்தை விளக்குங்கால் ரயிலேறிச் சென்றான் அல்லது ஆகாயக் கப்பலில் யாத்திரை செய்தான் ஒருவன் என்பது, இருபதாவது நூற்றாண்டில் குபேரனுடைய புஷ்பக விமானத்தில் சென்றனன் ஒருவன் என்பதை யொக்கும். இம்மாதிரியான பல விஷயங்கள் எடுத்துக் காட்டலாம்.

இவையோர் பால் நிற்க, தமிழ் நாட்டு நாவலாசிரியர்கள் நாவல்களை எழுதுவதற்கு வேண்டிய சாதனங்களை நன்காராய வேண்டும். அவைகள் செவ்வனே தெரிந்தவைகளாயிருக்க வேண்டும். எந்தெந்த இனங்களினின்று நாவல்களின் பாத்திரங்கள் எடுக்கப் படுகின்றனவோ அந்த இனங்களின் நடை யுடை பாவனைகளை நேரில் அறிந்திருக்க வேண்டும். தமிழ்ப் பாஷையின் இலக்கியங்களின் பெருமை ஆங்காங்கு புலப்படுத்தப் பட வேண்டும்.

மேற் கூறப்பட்ட சமாசாரங்கள் யாவும் நாவல்கள் நல்ல நிலைமையைப் பெற்று இலக்கியங்களுள் சேர்க்கப் பட வேண்டும் என்கிற நோக்கத்துடன்தான் எடுத்துக் காட்டப் பட்டிருக்கின்றன. ஒரு நாவல் பலரால் படிக்கப் பெற்று பல பதிப்புகள் பதிப்பிக்கப் பெற்றாலும் அது நல்ல கண்டன முறைக்குட் படுத்தப் பட்டாலன்றி காவியங்களுடன் சேர்க்கப் படுவதற்கு இடம் ஏற்படாது. இது வரை வெளித் தோன்றி நிற்கும் நாவல்களுள், ஒவ்வொன்றும் பரிசோதிக்கப் பட்டும், இதர நாவல்களுடன் சீர்தூக்கிப் பார்க்கப் பட்டும் மதிக்கப் பெற்றாலன்றி நாவல்களின் பெருமையும் சிறுமையும் வெளியாகா. இனிவரும் நாவல்கள் உயர்தர நிலைமையை யடைய மேற் கண்ட முறை யோக்கியமானதாகும். ஆதலால் நாவலை வாசிப்பவர்கள் குணதோஷங்களைப் பட்சபாதமின்றி ஆராய்ந்து நிர்ப்பயமாய் அவைகளை வெளியிடின் இயற்றமிழ் எனக் கூடிய நன்னிலைமையை யடையும் நாவல்கள்.

சிறுவர் பகுதி

—அ. சி. செ.

வெளவால்

ஒரு காலத்தில் இருந்தால் போல் பறவைகளுக்கும் விலகுங்களுக்கும் சண்டை உண்டாயிற்று. சண்டையென்றால் சின்னஞ் சிறு சண்டையல்ல. மிகவும் பெரிய சண்டை.

இந்தச்சண்டையில் வெளவால் மாத்திரம் சேர்ந்து கொள்ளவில்லை. ஒருவர் பக்கத்திலும் சேராது சந்நியாசம் வாங்கிக் கொண்டது. வெளிப் பார்வைக்குத்தான் அப்படி இருந்ததே தவிர, அதன் அந்தரங்க எண்ணமெல்லாம், சண்டையில் யார் ஜயம் பெறுகிறார்களோ, அவர்கள் பக்கம் சேர்ந்துக் கொள்ள வேண்டும் என்பது தான்.

பல நாட்களாகக் கழிந்த சண்டையில் பறவைகள் வெற்றி பெற்றன. அதைக் கண்ட வெளவால் பறவைகளிடம் சென்று, 'எனது அருமைத் தோழர்களே! நான் உங்கள் இனத்தானல்லவா? நானும் உங்களைப் போல் பறந்து திரிகின்றேன். உங்களது வெற்றியில் எனக்கும் பங்குண்டு' என்று உறவாடிற்று. பறவைகளும் வெளவாலைத் தங்கள் பக்கத்தில் சேர்த்துக் கொண்டன.

சண்டையில் தோல்வி யடைந்த மிருகங்கள் பறவைகளுக்கு அடிபணிந்து சும்மா இருக்குமா? மறுபடியும் ஒரு சண்டையை ஆரம்பித்து, அதில் எப்படியாகிலும் இந்தப் பறவைகளைச் சிதற அடித்து விட வேண்டும் என்று வைராக்கியம் கொண்டன. அதற்கென்று, முன் கருதியே வேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் ரகசியமாகச் செய்து வந்த விலங்குகள், திடீரென்று, ஒருவித முன்னறிவும் கொடுக்காது, பறவைகளைத் தாக்கின. எதிர்பாராது சண்டை செய்யும்படி நேரிட்டதால், பறவைகள் படுதோல்வி யடைய வேண்டியதாயிற்று.

இதைக் கண்ட வெளவாலுக்கு என்னமோ போலாயிற்று. இப்படி நேரிடும் என்று முன்னமே தெரிந்திருந்தால் இப்பறவைகள் பக்கம் தலையையே காட்டியிருக்க மாட்டேன் என்று தன்னையே நொந்து கொண்டது. வருந்தி என்ன பயன்? மனதை ஒருவாறு தேற்றிக் கொண்டு, மிருகங்கள் வெற்றி பெற்ற மகிழ்ச்சியில் ஆடிப்பாடிச் சந்தோஷமா யிருக்கும் இடத்தைச் சேர்ந்தன.

அவைகளிடம் மிக்க பணிவுடன், 'எனது பிரிய அண்ணன் மார்களே! என்னையும் அந்த அற்பப் பறவைகள் பக்கம் தள்ளி விடாதீர்கள். நான் உங்கள் பரம்பரை அடிமை. உங்களது இனத்தவன் என்பதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன. எனக்கு உங்களைப் போல் பற்கள் உண்டு; உரோமம் இருக்கிறது; உங்களைப் போலவே நான் குட்டி போட்டு பால் கொடுத்து வளர்க்கின்றேன். எந்தப்

பறவையாவது இப்படிச் செய்கிறதா? ஆகையால் என்னை நீங்கள் அங்கீகரிக்க வேண்டும்' என்று வேண்டிக் கொண்டது. மிருகங்களும், 'போனால் போகுது' என்று, அதன் வேண்டு கோளை ஒப்புக் கொண்டு அதைத் தங்கள் பக்கம் சேர்த்துக் கொண்டன.

பறவைகளுக்கும் மிருகங்களுக்கு முள்ள விரோதம் இன்னும் தீர்ந்ததா யில்லை. மீண்டும் மீண்டும் இருதரத் தாருக்கும் சண்டை நடந்து கொண்டே வந்தது. சண்டைகளில், பக்ஷிகளும், மிருகங்களும், மாறி மாறி வெற்றியும் தோல்வியும் அடைந்தன. வௌவாலும் அப்போதைக் கப்போது, நய வஞ்சகமாகப் பேசி வெற்றி யடைந்த பக்கம் சேர்ந்துக் கொள்ளும்.

சண்டை செய்து, பெரும் நஷ்டமும் மனச் சோர்வும் அடைந்த இரு விரோதிகளுக்கும், கடைசியில், சண்டை நீங்கி, தம்முள் சமாதானம் செய்து கொண்டு, சந்தோஷமாய் வாழ்வோம் என்ற எண்ணம் உண்டாயிற்று. சமாதானமும் செய்து கொண்டன.

சமாதானம் செய்யும் பொழுது வௌவாலை யார் பக்கத்தில் சேர்த்துக் கொள்வது என்ற கேள்வி பிறந்தது. வௌவாலின் சமயத்திற் கேற்றபடி 'வேஷம் போடுதலை'க் கண்டு, முன்பே வெறுப்பும் கோபமும் கொண்டிருந்த பறவைகளும், மிருகங்களும் அதனைத் தங்கள் தங்கள் பக்கத்தில் சேர்த்துக் கொள்ள முன் வரவில்லை. எனவே, வௌவாலுக்கு ஒரு பக்கத்திலும் இடம் கிடைக்க வில்லை. அதனால், வௌவாலுக்கு ஏற்பட்ட நாணம் அவ்வளவு இவ்வளவு என்றில்லை. பகல் வேளையில் மற்ற பறவைகளைப் போல் பறந்து திரிய அதன் மனம் கூசிற்று. பகல் முழுவதும் மரங்களிலும், இருள் நிறைந்த கோயில் மண்டபங்களிலும் தலை கீழாகத் தொங்கிக் கொண்டிருந்து இரவில் இரை தேடப்புறப்பட வேண்டியதாயிற்று. தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொண்டதை நினைத்து நினைத்து இன்றும் அது வருந்திக் கொண்டிருக்கிறது.

சுதந்திரத்தின் தேவைகள் யாவை?

ஸன்-யாட்-ஸென்னின் பிரசங்கங்கள்

புத்தக வடிவில் கிடைக்கும்.

மதியாதார் தலைவாசல்

(இக் கதையில் வரும் பெயர்கள் யாவும் கற்பனையே)

‘என்ன சார், இவனை ஒரு மனுஷனென்று நினைத்து நாம் பார்க்க வந்தால், அவன் நம்மை உட்காரவாவது சொன்னானா? நேற்று வரைக்கும் தாசில்தாரா யிருந்தவன்தானே சார்? இன்று ஷெரஸ்ததார் ஆனவுடன் தலையில் கிரீடமா ஏறிவிட்டது! நானுந்தான் மாஜிஸ்திரேட்டாகப் போகிறேன். அப்புறம் ஷெரஸ்ததார் ஆவதற்கு எத்தனை நாளாகும்? மனுஷனை மனுஷன் மதிக்க வேண்டும், சார்’ என்றார் அப்பாதுரை முதலியார்.

ஸ்ரீ வில்லிபுத்தூர் தாசில்தாராயிருந்த கண்ணபிரான் முதலியார் அன்றுதான் இராமநாதபுரம் ஜில்லா கலெக்டர் ஹுஜூர் ஷெரிஸ்ததாராக வந்திருந்தார். அன்றைய தினம் காலையில் அப்பாதுரை முதலியாரும், நாராயணசாமி பிள்ளையும், எலுமிச்சம் பழம், பூமாலை முதலியவைகளுடன் அவரைப் பார்க்கச் சென்றிருந்தார்கள். அங்கு நடந்த சம்பவத்தைப் பற்றித்தான், அப்பாதுரை முதலியார் மேற் கூறியவாறு நாராயணசாமி பிள்ளையிடம் சொன்னார்.

‘என்ன விருந்தாலும் உத்தியோக கர்வம் இருக்கத்தானே செய்யும்?’ என்றார் நாராயணசாமி பிள்ளை.

“இந்தச் சிடுமூஞ்சி முகத்தில் நான் இனி விழிக்கப் போவதில்லை. நம் வேலை யுண்டு, நாமுண்டு. ஒருவனிடத்தில் போய் நாம் ஏன் சார் கையைக் கட்டிக் கொண்டு நிற்க வேண்டும்? மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்” என்றார் அப்பாதுரை முதலியார்.

ஆனால் நாராயணசாமிப் பிள்ளையின் சித்தாந்தம் வேறு. மிதிக்கும் காலை முத்தமிட்டால்தான் கலியுகத்தில் காரியம் சாதிக்கலாம் என்பது அவருடைய கொள்கை. கெட்டிக்காரத்தனத்தையோ, புத்தி சாதுர்யத்தையோ இந்தக் காலத்தில் யார் கவனிக்கிறார்கள், எல்லாம் ஆட்களைக் ‘குல்லா’ப் போடுவதிலும், ‘காக்காய் பிடிப்பதி’லுந்தான் காரிய மிருக்கிறதென்று அவர் அடிக்கடி சொல்லுவது வழக்கம்.

ஃ ஃ ஃ

மறுநாட் காலை ஷெரிஸ்ததார் ஆபீஸ் காகிதங்களைப் பார்த்துக் கையெழுத்திட்டுக் கொண்டிருந்தார். வேஷ்டியை இடுப்பில் கட்டிக் கொண்டு, கையில் ஒரு வெற்றிலைக் கட்டுடன் நாராயணசாமிப் பிள்ளை வீட்டிற்குள் நுழைந்தார். ஷெரிஸ்ததார் அவரைப் பார்த்து, “என்ன வோய், எங்கே வந்தீர்?” என்று கேட்டார். “ஒன்றுமில்லை-இ-இ-இ” என்று பல்லைக் காட்டினார் நாராயணசாமிப் பிள்ளை.

"எங்கு வந்தீர்! சும்மா சொல்லுமேன்!"

"ஒன்றுமில்லை. காய்கறி வாங்குவதற்காகச் சந்தைக்குப் போயிருந்தேன். நல்ல வெற்றிலையாயிருந்தது. எஜமானுக்காக ஒரு கட்டு வாங்கிக் கொண்டு வந்தேன்" என்றார். ஏறக் குறைய நாற்பது வயதாகி, மாதம் ரூபாய் 68 சம்பளம் வாங்கும் உயர்தரக் குமாஸ்தாவாயிருந்த போதிலும், மேல் உத்தியோகஸ்தர்களை 'எஜமான்' என்று அழைப்பதற்கு நாராயணசாமிப் பிள்ளை கொஞ்சமுங் கூசுவதில்லை. இன்று ஒரு 'எஜமான்' விதைத்தால், நாளை ஒன்பது 'எஜமான்' அறுக்கலாம் என்பது அவருடைய எண்ணம்.

"எங்கே! வெற்றிலை ரொம்ப நன்றாயிருக்கிறதே!" என்றார் ஷெரிஸ்ததார். அவருடைய முகத்தில் ஒரு புன்சிரிப்புத் தோன்றியது. கடிக்க வரும் நாய்க்குங் கருப்பட்டி போட்டால், வாலை யாட்டுவது வழக்கமல்லவா?

"எஜமானுக்கு ஸ்பெஷலாக........" என்று இழுத்தார் நாராயணசாமிப் பிள்ளை.

"நம்ம வீட்டு வேலைக்காரப் பயல்களுக்கு இம்மாதிரி வெற்றிலை வாங்கத் தெரியவில்லையே!"

"எஜமானுக்கு நானே தினந் தோறும்..............."

"அதெல்லாம் ஒன்றும் வேண்டாமய்யா. நீர் அந்தக் கடையை நம்ம பயலுக்குக் காட்டி விட்டால், அவன் வாங்கிக் கொண்டு வந்து விடுகிறான்" என்றார் ஷெரிஸ்ததார்.

அன்றைய தினத்திலிருந்து நாள் தவறாமல் ஷெரிஸ்ததார் வீட்டிற்கு வெற்றிலைக் கட்டு போய்க் கொண்டிருந்தது. அத்துடன் அந்தந்தப் பருவத்தில் என்னென்ன பழங்கள் விற்குமோ, அதுவும் அவ்வப்பொழுது கூடை கூடையாய்ப் போய்க் கொண்டிருக்கும். ஆ'ஸ் நேரங்களில் கண்ணபிரான் முதலியார் எங்காவது மலஜலவாதைக்கு வெளியே கிளம்பினால், 'எஜமான் வெய்யிலில் போகிறீர்களே!' என்று நாராயணசாமிப் பிள்ளை அவருக்குக் குடை பிடித்துக் கொண்டு செல்வார்.

இங்ஙனம் மாதங்கள் சில சென்றன. சாத்தூர் தாலுகா தாசில்தாராயிருந்த இராமகிருஷ்ண ஐயர் ராஜபிளவையினால் இறக்கவே, ஒரு மாஜிஸ்திரேட்டுப் பதவி காலி விழுந்தது. ரெவின்யூ, கிரிமினல், அக்கவுண்ட் பரீக்ஷைகளெல்லாம் தேறி, மாஜிஸ்திரேட்டு ஜாபிதாவில் சேர்க்கப்பட்ட அப்பாதுரை முதலியாருக்கே, அப்பதவி கிடைக்குமென்று குமாஸ்தாக்களெல்லாம் பேசிக் கொண்டார்கள். ஆனால் இரண்டு மூன்று தினங்களுக்கப்புறம், நாராயணசாமிப் பிள்ளையை அருப்புக் கோட்டை டெபுடி தாசில்தாராகவும், அருப்புக் கோட்டை டெபுடி தாசில்தாரை சாத்தூர் தாசில்தாராகவும் நியமித்து உத்தரவு வந்த பொழுது யாவரும் பிரமித்துப் போனார்கள். நாராயணசாமிப் பிள்ளை கிரிமினல் பரீக்ஷை தேறா விட்டாலும் மிகவுந் திறமையான நிர்வாகஸ்தரென்றும், அப்பாதுரை முதலியாருக்கு நிர்வாகத் திறமை போதாதென்றும், கலெக்டருக்கு 'ஸ்பெஷல் நோட்' எழுதி,

நாராயணசாமிப் பிள்ளையை மாஜிஸ்திரேட்டு பதவிக்கு ஷெரிஸ்ததார் சிபார்சு செய்திருந்தார்.

ஃ ஃ ஃ

அருப்புக் கோட்டையில் நாராயண சாமிப் பிள்ளையின் வீட்டு வாசலில் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களும், ஆபீஸ் குமஸ்தாக்களும், நின்று கொண்டு வேலைக்காரனிடம் 'எஜமான் இருக்கிறார்களா?' என்று கேட்டார்கள். அவ்வார்த்தைகளைக் கேட்டவுடன் உள்ளிருந்த நாராயண சாமிப் பிள்ளை புன் சிரிப்புக் கொண்டார். அவர் விதைத்த விதை இப்பொழுது பலன் கொடுக்கவாரம்பித்து விட்டதல்லவா!

இதே சமயத்தில் அப்பாதுரை முதலியாரின் விஷயம் வேறு. ஒரு மோட்டார் லைசென்ஸ் பேப்பர் எழுதி வைப்பதற்கு இரண்டு நாட்கள் தாமதமாகி விட்டது. 'என்ன முதலியார்! உத்தியோகஸ்தர்கள் மாதிரி சரியாய்ப் பதினொரு மணிக்கு ஆபீசுக்கு வந்தால் வேலை நடக்குமா? என்ன விருந்தாலும் நீர் குமாஸ்தா தானே? எட்டு மணிக்கே ஆபீசுக்கு வந்தால்தான் காரியம் நடக்கும்' என்றார் ஷெரிஸ்ததார்.

சியாங்-கை-ஷேக்கினால் தொடங்கப்பெற்ற சீன நவ ஜீவன இயக்கத்தின் எட்டு கோட்பாடுகள்

1. நேற்றைய தினம் மரணகாலம்; இன்றுதான் வாழ்க்கைக் காலம்; ஆகையால் பழைய தீமைகளை அகற்றி, புதிய ஜாதியை நாம் அமைப்போம்.

2. தேசத்தைப் புனர் ஜீவனத்திற்குக் கொண்டு வரும் மகத்தான பொறுப்பை நாம் ஏற்றுக் கொள்வோம்.

3. நாம் விதிகளுக்குக் கட்டுப் பட்டு நடப்போம். நமக்கு நம்பிக்கை, நாணயம், அவமானம் ஆகியவை தேவை.

4. நமது உடை, உணவு, வாழ்க்கை முதலியன எளிமையாகவும், ஒழுங்காகவும், சுத்தமாகவும் இருக்க வேண்டும்.

5. நாம் கஷ்டங்களை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். நாம் சிக்கனத்தைக் கடைப் பிடிக்க வேண்டும்.

6. சீனப் பிரஜைகள் என்ற ஹோதாவில் நாம் போதிய அறிவுடையவர்களாகவும் ஒழுக்கமுடையவர்களாகவும் இருக்க வேண்டும்.

7. நமது செயல்கள் வீரமுள்ளனவாகவும் துரிதமாகவும் இருக்க வேண்டும்.

8. நாம் சொன்னபடி செய்ய வேண்டும்; அல்லது சொல்லாமலே செய்ய வேண்டும்.

-வ-

விக்கிரமன்

—"ஆசிரமவாசி"

சமயத்தின் சிறப்பியல்புகள்

(சுவாமி விவேகானந்தரின் நூலிலிருந்து மொழி பெயர்த்தது)

பிராஞ்சு தேசத்தில் மனிதனின் உருத்துக்களே அச்சாதியாரின் இலட்சியமாகப் பல்லாண்டுகளாக இருந்து வந்தது; அமெரிக்க நாட்டிலோ பெண்களின் உருத்துக்களைப் பற்றி இன்றும் பிரமாதமாக எடுத்துப் பேசப் பட்டு வருகின்றன; இந்தியாவிலோ நாங்கள் தெய்வங்களின் உருத்துக்களிலே என்றும் எங்கள் கவனத்தைச் செலுத்துகின்றோம்.

வேதாந்தம் எல்லாச் சமயங்களையுந் தன்னகத்தே யடக்கி யுள்ளது. இந்தியாவிலே ஒரு நூதனமான கொள்கை யுண்டு. என்னிடத்து ஒரு குழந்தை யிருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். நான் அவனுக்கு ஒரு விதமான சமயபாடமும் படிப்பிக்கக் கூடாது. ஒரு சிறு தோத்திரமும், மனதை ஒரு வழிப்படுத்துவதற்குரிய சுவாச அப்பியாசத்தையும், அவனுக்குப் பழக்கிக் கொடுத்தால் போதுமானது. அத்தோத்திரம் மேல் நாட்டாரின் பிரார்த்தனையைப் போலன்று. 'உலகங்களின் சிருஷ்டி கர்த்தாவாகிய இறைவனை நான் தியானிக்கின்றேன்; அவன் என் உள்ளத்தில் உண்மையொளியைத் திறுவுவானாக' என்பதே அத்தோத்திரமாகும்.

அக் குழந்தை வளர்ந்து பக்குவமடைந்த பின், பல் வேறு தத்துவ சாஸ்திரங்களையும் போதனைகளையும் ஆராய்கின்றான். தனக்கு உண்மையென்று காணப்படும் சாஸ்திரத்தை அல்லது போதனையை அடையும்வரை அவ்வாராய்ச்சியைத் தொடர்ந்து நடத்துகின்றான். அதன் பின்னர், எந்தக் குருவின் போதனை அவனுக்கு உகந்ததா யிருந்ததோ, அந்தக் குருவின் சீடனாகின்றான்.

அவன் கிறிஸ்துவையோ, புத்தரையோ, அல்லது முகம்மதையோ தனது குருவாகத் தெரிந்தெடுத்துக் கொள்ளலாம். இவர்கள் ஒவ்வொருவரின் உருத்துக்களையும், ஒவ்வொரு மனிதனுந் தத்தம் இஷ்ட தேவதையைத் தெரிந்தெடுக்கும் உருத்தையும், நாம் அங்கீகரிக்கின்றோம். ஆகையினாலேதான், எனது மகன் பௌத்தனாகவும் எனது மனைவி கிறிஸ்தவளாகவும், நான் மகம்மதியனாகவும் இருக்க முடியும். அப்படி யிருந்தும் ஒவ்வொருவருக்கும் போதிய சுதந்திர மளிப்பதால் சண்டை சச்சரவின்றிச் சமரசமாக நாங்கள் வாழலாம்.

எல்லாச் சமயங்களும் ஆண்டவனிடத்துக்கு இட்டுச் செல்லும் பாதைகள் என்பதையுணர்ந்து நாம் சந்தோஷமடைகின்றோம். எல்லா மனிதரும் நமது சமயக் கண்களுக் கூடாகக் காண வேண்டு

மென்பதில் உலக முன்னேற்றந் தங்கி யிருக்கவில்லை. எனது கொள்கை உனது கொள்கையா யிருக்க முடியாது; உன்னுடைய கொள்கையும் என்னுடையதா யிருக்க முடியாது; இதுவே நமது அடிப்படையான நோக்கம். நான் ஒருவனே என்னுடைய சமயத்தவன். இந்தியாவில் நாம் ஒரு சமய சாஸ்திர முறையை யுண்டாக்கி யிருக்கிறோ மென்பது உண்மைதான். அது உலகிலுள்ள எல்லாச் சமய சாஸ்திரங்களைப் பார்க்கிலும் மனதுக்கு ஏற்றுக் கொள்ளக் கூடியதா யிருக்கிற தென்பதையும் நாம் நம்புகின்றோம். அந்த நம்பிக்கையானது சில நிபந்தனைகளில் தங்கி யிருக்கின்றது. பக்தர்களெல்லோரையுந் தன்னகத்தே சேர்த்தல், எல்லா வகையான வழிபாட்டிற்கும் மதிப்புக் காட்டுதல், கடவுள் உணர்ச்சியை யுண்டாக்கும் எந்தக் கொள்கையையும் எக்காலத்தும் சேமித்துக் கொள்ளல் என்பனவே அந்த நிபந்தனைகளாகும்.

எங்களுடைய சமய சாஸ்திர முறையிலுள்ள குறைபாடுகளை நாங்கள் ஒப்புக் கொள்ளுகின்றோம். ஏனெனில் உண்மையானது முறைகளை கடந்ததாகத் தானிருக்கும். சமயம், முறைகளில் கட்டுப்படாத தொன்று என்பதை நாம் ஒப்புக் கொள்வதினால் அதற்கு எதிர்கால வளர்ச்சியுண்டென்பது புலப்படுகின்றது. சமயங்கள், அநுஷ்டானங்கள், கிரியைகள், சாஸ்திரங்கள் என்பன ஒரு மனிதனின் உண்மை இயல்பை உணர்த்துவதற்கு ஏதுக்களா யிருக்கும் வரை அவற்றைக் கைக்கொள்வது நன்று. ஆனால் உண்மை இயல்பை அறிந்தவுடன் இவையெல்லாவற்றையும் அவன் கைவிடுகின்றான்.

'நான் வேதங்களையுந் தள்ளி விடுகிறேன்' என்பதே வேதாந்த சாஸ்திரத்தின் கடைசி வார்த்தையாகும். முத்தி நெறியில் பயிலும் போது கைக்கொண்ட கிரியைகள், தோத்திரங்கள், சாஸ்திரங்கள் எல்லாம் முக்தியென்னுங்கரை சேர்ந்தவுடன் மறைந்து போகின்றன. 'நானே அவன் (ஆண்டவன்) நானே அவன்' என்கிறான் ஜீவன் முக்தன். 'நீ' யென்று அவன் கடவுளைக் கூறுவது பொருத்தமாகாது; ஏனெனில் அவன் கடவுளோடு இரண்டறக் கலந்து விட்டான்.

என்னைப் பொறுத்த வரையில் வேதத்தின் எந்தப் பாகங்கள் எனது பக்திக்கு இசைந்ததாக விருக்கின்றனவோ அவற்றையே நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். வேதங்களின் சில பாகங்கள் ஒன்றுக் கொன்று முரணாயிருக்கின்றன. மேல் நாட்டார் கருதுவது போல வேதங்கள் அருள் மொழிகளல்ல; அவை எம்மிடத்துள்ள கடவுளைப் பற்றிய முழு அறிவையுங் குறிக்கின்ற தென்று நாம் கருதுகின்றோம். ஆனால் வேதங்கள் என்று கூறும் அந்தப் புத்தகங்கள் மட்டுமே கடவுள் ஞானத்தை அடக்கியுள்ளனவென்று கூறுவது மிகவும் பேதமையாகும். எல்லாச் சமய சாஸ்திரங்களும் அந்த அறிவை ஏறத் தாழப் பங்கு பற்றுகின்றன வென்பதை நாமறிவோம். வேதங்களின் எந்தப் பாகங்கள் நமது புத்திக் கிசைந்ததாக விருக்கின்றனவோ அந்தப் பாகங்கள்தான் வேதங்கள் என்று மனு கூறுகின்றார். நமது தத்துவ

சாஸ்திரிகள் பெரும்பாலோர் இந்த அபிப்பிராயத்தையே அங்கீகரிக்கின்றனர். எல்லாச் சமய சாஸ்திரங்களுள்ளும் வேதம் ஓதுதல் முதன்மையான தல்லவென்று கூறுகின்றன.

மாறுத இயல்புடைய பொருளை எதனால் உணருகின்றோமோ, அதுவே உண்மையான படிப்பாகும். அது, கல்வி, விசுவாசம், தர்க்கம், நியாயம், என்பனவற்றிலன்றி, சிந்தையும் மனமுஞ் செல்லாவிடத்து அந்தமிலின்பம் அநுபவிக்கும் சமாதி நிலையில்தான் கிடைக்கும். ஒரு மனிதன் இந்தப் பரிசுத்த நிலையை யடைந்தவுடன் இறைவனின் இயல்பைப் பெறுகின்றான். இந்த அத்வைத நிலையில்தான் 'நானும் எனது தந்தையும் ஒன்று' என்று யேசு நாதர் கூறியது. நிர்க்குணப் பிரம்மனும் தானும் ஒன்று என்பதை அவன் அறிவன்; ஆயினும் அவன் ஈஸ்வரனைப் போன்று தோற்றுகின்றான். அஞ்ஞானமாகிய (மாயை) திரைக் கூடாகத் தோற்றும் நிர்க்குணப் பிரம்மனே ஈஸ்வரன்.

நாம் பஞ்சேந்திரியங்களின் மூலம் ஆண்டவனை அணுகும் போது அவரை ரூபியாகவே காணக்கூடும். ஆத்மனை வெளிப் பொருளாகக் காண முடியாதென்பதே அதற்குக் காரணம் ஆகும் உணர்பவன் தன்னை உணர்வது எங்ஙனம்? ஆனால் அவன் தனது சாயலை ஒருவாறு விழச்செய்ய முடியும்! ஆத்மன் தன்னை வெளிப் பொருளாகக் காண்பிக்க முயலும் சிறந்த முயற்சியே ஈஸ்வரன். இந்த ஆத்மன் எக்காலத்தும் சர்வ சாட்சியாயிருக்கின்றது. நாங்கள் ஆத்மனை வெளிப் பொருளாகப் பார்ப்பதற்கு சதா பிரயாசப் படுகின்றோம். அந்த முயற்சியின் பலனாகத்தான் உலகிலுள்ள பல்வகைத் தோற்றங்களும் உண்டாயின. அந்தத் தோற்றங்களே ஜகத் எனப்படுவது. ஆனால் இந்த முயற்சிகள் பலவீனமான முயற்சிகளாகும். ஆகச் சிறந்த முயற்சியின் பலனாக நாம் பெறக்கூடிய ஆத்மனின் சாயல்தான் ஈஸ்வரன்.

'ஒரு உண்மையான கடவுள் மனிதனின் சிறந்த படைப்பு' என்று ஒரு பெரிய மேற்றிசை ஞானி கூறுகின்றார். மனிதன் எவ்விதமோ, கடவுளும் அவ்விதமே யிருக்கின்றார். மனிதன் கடவுளை மனிதத் தோற்றத்தின் மூலந்தான் காண வேண்டும். நீங்கள் எவ்விதம் முயன்றாலும், வாய்ப்பறை யறைந்தாலும், கடவுளை மனிதனாகத்தான் நினைக்க முடியும். நீ எப்படி யிருக்கின்றாயோ உனது கடவுளுமப்படியே யுள்ளார். ஒரு கல்வி யறிவில்லாத மனிதனைச் சிவபெருமானின் திருவுருவப் படத்தை வரையும்படி கேட்ட போது அவன் பல நாள் சிரத்தை யெடுத்து ஒரு குரங்கின் படத்தை வரைந்தான். அதே போன்று நாம் அகண்ட சச்சிதானந்த சிவத்தைத் தியானிக்க முயலும் முயற்சியானது வீணாகின்றது. நாம் இந்த உடம்புக் கூட்டுக்குள் கட்டுப்பட்டிருக்கும் வரை கடவுளை மனிதனாகவேதான் கருத முடியும்.

எருமைகள் கடவுளை வழிபட விரும்பினால், தம்மியற்கைக் கேற்றவாறு, கடவுளை ஒரு பெரிய எருமையாகவே கருதுகின்றன; மீன்கள் கடவுளை வழிபடின் அவர் ஒரு பெரிய மீனாகவே அவைகளுக்குக் காட்சியளிப்பார்; ஆகையினாலேதான் மனிதனுங்

கடவுளை மனிதனுகக் கருத வேண்டி யிருக்கின்றது.

மனிதன், எருமை, மீன் என்பன வெவ்வேறு பாத்திரங்கள் என்று வைத்துக் கொள்வோம். இவை கடவுளாகிய சமுத்திர ஜலத்தினுல் நிரப்பப்படுகின்றன. மனிதப் பாத்திரத்தில் அந்த நீரானது மனிதத் தோற்றத்தை யடைகின்றது; எருமைப் பாத்திரத்தில் எருமை உருவம் பெறுகின்றது; மீன் பாத்திரத்தில் மீனின் வடிவந் தோன்றுகின்றது; ஆனுல் ஒவ்வொரு பாத்திரத்திலுமுள்ள நீரானது ஆண்டவனுகிய சமுத்திரத்தின் நீராகும்.

சமயாநுஷ்டான மில்லாத மனித விலங்கும், இயற்கை சுபாவத்தின் எல்லையைக் கடந்த பரம ஹம்ஸர் என்னும் இருதிறத்தவருமே கடவுளை மனிதனுக வழிபடுவதில்லை. எவனொருவனுக்கு இயற்கைச் சுபாவம் ஆத்ம சுபாவமாக மாறி விடுகின்றதோ அவனே ஆண்டவனை உள்ளவாறு வழிபடுபவன் மனித விலங்கு தன் அறியாமையினுல் வழிபடா தொழிகின்றான்; ஜீவன் முக்தனோ தானிறவனோடு இரண்டறக் கலந்த தீர்க்க தரிசனத்தினுல் அவ்வழி பாட்டைக் கைவிடுகின்றான். 'நானே அவன்! நானே அவன்' என்று கூறும் அத்தகையோர் தம்மையே வழிபடுவதெங்ஙனம்?

நான் உங்களுக்கு ஒரு கதை சொல்லுகிறேன். ஒரு பெண் சிங்கமானது ஒரு குட்டியை ஆட்டு மந்தைக்குள் ஈன்று விட்டு இறந்து போயிற்று. ஆடுகள் அதற்கு உணவூட்டிப் பாதுகாத்து வந்தன. சிங்கக் குட்டி நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது. ஆடுகள் கனைக்கும் போதெல்லாம் சிங்கமும் அவற்றைப் போல் கனைக்கலாயிற்று. ஒரு தினம் மற்றொரு சிங்கம் அவ்வழியில் வந்தது. குட்டிச் சிங்கத்தின் கனைப்பைக் கேட்டதும், 'நீ இங்கு என்ன செய்கின்றாய்' என்று ஆச்சரியத்துடன் கேட்டது. குட்டி இன்னும் மிகுதியாகக் கனைத்து 'நான் ஒரு சிறு ஆட்டுக் குட்டி, நான் மிகவும் பயப்படுகின்றேன்' எனக் கூறியது. 'என்ன மதியீனம்! என்னுடன் வா; நான் உன்னுடைய சுபாவத்தைக் காட்டுகின்றேன்' என்று கர்ச்சனை செய்தது. பின்னர் அந்தக் குட்டியை ஒரு நீரோடைக்கு அழைத்துச் சென்று தெள்ளிய நீரில் தனது சாயலை அதற்குக் காட்டியது. 'நீ ஒரு ஆண் சிங்கம்; என்னைப்பார், ஆட்டை பார், உன்னைப் பார், அப்பொழுது உண்மை புலப்படும்' என்று கூறிற்று. ஆட்டுச் சிங்கம் அவதானித்துப் பார்த்ததும் உண்மைவிளங்கிற்று. உடனே 'என் பேதமை யிருந்தவாறென்னே! நான் ஆட்டைப் போல் தோற்றமுடையனல்லன்; நான் சிங்கம் என்பது உண்மைதான்' என்று மலைகளும் அதிரும் வண்ணம் வீர கர்ச்சனை செய்தது.

அதேமாதிரிதான் நாங்களும் ஆட்டுத் தோலாகிய பழக்கத்தினுல் போர்க்கப் பட்ட ஆண் சிங்கங்களாயிருக்கின்றோம். எமது கூட்டுறவின் காரணமாக நம்மைப் பலவீனர்களாகக் கருதுகின்றோம். ஆத்மாவினிடத்துள்ள இந்தப் பிழையான கருத்தை நிவர்த்திப்பதே வேதாந்தத்தின் முக்கிய நோக்கமாகும். முந்தியே நாம்

அடைய வேண்டிய லட்சியம். இயற்கை விதிகளுக்கு அமைதலே முத்தியென்னுங் கொள்கையை நான் ஏற்றுக் கொள்ள முடியாது. அந்தக் கொள்கையின் கருத்தென்னவென்பதும் எனக்கு விளங்கவில்லை. இயற்கை விதிகளுக்குமாறாக முயலும் முயற்சியே மனிதனின் முன்னேற்றத்துக்கு ஏதுவாயிருந்ததென்பது சரித்திர உண்மையாகும். உயர்ந்த நீதிகளால் தாழ்ந்த நீதிகளை வெல்லலாம் என்று ஒருவாறு கூறலாம்; ஆனால் உயர்ந்த நெறிகளில் முயன்ற போது வெற்றியை விரும்பும் மனமானது இன்னும் முக்தியையே நாடுகின்றது. தனது முயற்சியும் நீதிப்படிதான் நடக்கின்றதென்பதை உணர்ந்ததும் அந்த நீதியையுமே ஜெயிக்க முயல்கின்றது. ஆகையால் நமது இலட்சியம் முக்தியேயாம். மரங்கள் ஒரு கட்டுப் பாட்டையும் மீறுவதில்லை. ஒரு பசு திருடுவதை நான் ஒரு காலமுங் கண்டதில்லை. ஒரு முத்துச் சிப்பியானது ஒரு போதும் பொய் பேசியதில்லை. ஆயினும் இவையொன்றும் மனிதனிலுஞ் சிறந்தவையாகா.

சமூகத்துறையிலாயென், இராஜரீகத் துறையிலாயென், அல்லது சமயத் துறையிலாயென், நாம் கட்டுப்பாட்டுக்கு அமைந்து நடந்தால் வெறும் ஜடப் பொருளாவோம். இந்த வாழ்வு முத்தியை அதாவது விமோசனத்தை உறுதியாக வற்புறுத்துகின்றது; மித மிஞ்சிய சட்டங்கள் இறப்பைக் குறிக்கும். இந்துக்களைப் போன்று மிதமிஞ்சிய கட்டுப்பாடுள்ள சாதியார் வேறொருவரில்லை; அது காரணமாக நமது தேசிய வாழ்க்கை நாசமடைந்தது. ஆனால் இந்துக்களுள் ஒரு விசேஷமுண்டு. சமயத் துறையில் மட்டும் ஒருவிதமான கட்டுப்பாடும் அவர்கள் ஏற்படுத்தவில்லை. அதன்பயனாக சமயம் அபரிமிதமான வளர்ச்சியைப் பெற்றது. மேல் நாட்டார் எந்தத் துறையில் அநுபவமில்லாதிருக்கின்றார்களோ—அதாவது சமயத் துறையில்—அந்தத் துறையில் நாம் அநுபவ சாலிகளாயிருக்கின்றோம்.

அமெரிக்க நாட்டில் சில மனிதர் கூடி 'ஒரு வர்த்தக சமுதாயம் ஸ்தாபிப்போம்' என்று தீர்மானித்தால் அதை ஐந்து நிமிஷத்தில் தொடங்கி விடுவார்கள். இந்தியாவிலோ அநேகம் பேர் கூடி அவ்விஷயமாக ஐந்து வாரங்கள் சம்பாஷித்தாலும் காரியம் நடை பெறாது. ஆனால் ஒருவன் கையை உயர்த்திய வண்ணமாய் நாற்பது ஆண்டுகள் நின்று ஞானத்தையடையலாமென்று நம்பினால் அதை உடனே செய்ய ஆரம்பித்து விடுவான். மேல் நாட்டார் அவர்களுடைய துறையில் அநுபவசாலிகள்; நாமும் நமது துறையில் அநுபவத்தில் குறைந்தவரல்லர்.

அநுபூதியடைவதற்கு அன்புமார்க்கமே எல்லா வழிகளுள்ளுந் தலை சிறந்தது. ஒருவன் ஆண்டவனை நேசிக்கும் போது, அவருடைய சிருஷ்டியாகிய உலகமும் அவன் அன்பைப் பெறுகின்றது. 'எல்லாம் இறைவனுடையது; அவன் எனது அன்பன்; அவனையே நான் நேசிக்கிறேன்' என்று பக்தன் கூறுகின்றான். எல்லாம் ஆண்டவனுடைய பொருளானபடியால் அவையனைத்தும் அவனுக்குப் பரிசுத்தமாகவே தோன்றுகின்

றன. அப்படியாயின் நாம் எங்ஙனம் பிறருக்குத் தீங்கு செய்வது? நாம் பிறரை நேசியாமலிருப்பதெங்ஙனம்? கடவுளன்பின் பயனாக நாளடைவில் எல்லாரையும் நேசிக்கும் இயல்பு தோன்றும். ஆண்டவனை எவ்வளவுக்கெவ்வளவு நெருங்குகின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு எல்லாப் பொருள்களும் ஆண்டவனிடத்தில் நிலை பெற்றிருப்பது விளங்கும். அப்பொழுது நமது இருதயமானது அன்பு நீரூற்றாக மாறிவிடும். இந்த அன்புமயமான வெளிச்சத்தின் முன்னிலையில் ஒருவன் மனித இயல்பு மாறித் தெய்விக புருஷனாகின்றான். அத்தருணம், அன்பு, அன்பு செய்பவன், அன்பு செய்யப்படுபவன், எல்லாம் ஒன்றுதான் என்னும் சிறந்த உண்மை அவனுக்குப் புலப்படுகின்றது.

செலவினங்களுக்குச் சில உதாரணங்கள்!

இந்தியாவில் சுமார் 600 சுதேச சமஸ்தானங்கள் இருக்கின்றன. இந்தியாவின் மொத்த விஸ்தீரணத்தில் மூன்றில் ஒரு பங்கு விஸ்தீரணமுள்ள பிரதேசம் சுதேச சமஸ்தானங்களுடையது. இந்தியாவின் மொத்த ஜனத்தொகையில் நான்கில் ஒரு பங்கினர் இந்தச் சமஸ்தானங்களின் தான் வசிக்கின்றனர். சமஸ்தானாதிபதிகளில் சிலர், தங்களுடைய பிரஜைகளின் நன்மைக்காக எவ்வளவு தொகை செலவழிக்கிறார்கள் என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமா? இரண்டு உதாரணங்கள் பாருங்கள். பிக்கானீர் சமஸ்தானத்தின் மொத்த வருமானத்தில் 100க்கு $1\frac{1}{2}$ விகிதம் ஜனங்களின் வைத்திய வசதிக்கும், $1\frac{3}{10}$ விகிதம் கல்விக்கும், $32\frac{1}{2}$ விகிதம் அரண்மனைச் செலவுகளுக்குமாகச் செலவழிக்கப் படுகின்றன. காஷ்மீர் சமஸ்தானத்தில், 100க்கு $3\frac{1}{2}$ விகிதம் ஜனங்களின் வைத்திய வசதிகளுக்கும், $\frac{2}{10}$ விகிதம் விவசாய வசதிகளுக்கும், 19 விகிதம் சமஸ்தானப் படைகளுக்கும், 16 விகிதம் அரண்மனைச்செலவுகளுக்கும் செலவழிக்கப்படுகின்றன. ஆம்; அரண்மனையிலுள்ளவர்கள் சௌக்கியமாயிருந்தால் தானே, ராஜ்யத்திலுள்ள பிரஜைகள் சௌக்கியமாயிருக்க முடியும்!

—கம்

விக்கிரமன்

—" ஒரு காங்கிரஸ்வாதி "

மௌலானு முகம்மது அலி

ஜனனம் 1878
மரணம் 1930

'மௌலானு முகம்மது அலி இஸ்லாத்திற்காக உயிர் வாழ்ந்தார்; பாரத தேசத்திற்காக உயிர் துறந்தார்' என்று ஒரு வாசகம் உண்டு. இதைக் கொண்டு மௌலானு சாஹிபுவின் மத பக்தியும் தேச பக்தியும் நன்கு புலனுகும.

வட இந்தியாவிலுள்ள ராம்பூர் சமஸ்தானத்தில் அப்துல் அலிகான் என்ற ஒரு பிரதான அதிகாரி இருந்தார். இவருக்கு இரண்டு குமாரர்கள் பிறந்தார்கள். மூத்தவர் ஷவுகத் அலி; இளையவர் முகம்மது அலி.

முகம்மது அலி 1878ம் வருஷம் டிசம்பர் மாதம் ராம்பூரில் பிறந்தார். பாலிய வயதிலேயே, தந்தையாரை இழந்து விட்டதனுல், தாயார் பீ அம்மனுடைய பாதுகாப்பிலும் போஷணையிலும் வளர்ந்து வந்தார். ஹைஸ்கூல் படிப்பு வரை ராம்பூரிலும் பேரெல்லியிலும் படித்தார். பின்னர் அலிகார் காலேஜில் சேர்ந்து படித்தார். காலேஜ் படிப்பை முடித்துக் கொண்டு ஐ. சி. எஸ். பரீட்சைக்குப் படிக்க வேண்டுமென்பதற்காக 1898ம் வருஷம் இங்கிலாந்து சென்ருர். ஆனுல் பரீட்சையில் தேறவில்லை. இந்தியா திரும்பி வந்தார். மீண்டும் இங்கிலாந்து சென்று பி. ஏ. பரீட்சையில் தேறினுர். 1902ம் வருஷம் இந்தியா திரும்பி வந்து, ராம்பூர் சமஸ்தானத்துக் கல்வி இலாகா அதிகாரியாகநியமிக்கப்பட்டார். சிறிது காலங் கழித்து பரோடா சமஸ்தானத்திற்குச் சென்று 1910ம் வருஷம் வரை அங்கு அரசாங்க உத்தியோகத்தில் ஈடுபட்டிருந்தார். இப்படி இவர் அரசாங்க சேவையிலீடுபட்டிருந்த போதிலும், பொது ஜனத் தொண்டிலும் அடிக்கடி கலந்து கொண்டு வந்தார். 1903ம் வருஷம் முஸ்லீம் லீக் ஸ்தாபிக்கப்பட்டதல்லவா? அதன் ஸ்தாபகர்களுள் மௌலானு சாஹிபுவும் ஒருவர். 1911ம் வருஷம் கல்கத்தாவுக்கு வந்து 'காம்ரேட்' என்ற ஒரு பத்திரிகையை ஆரம்பித்து நடத்தினுர். இதற்கு அதிகமான செல்வாக்கு ஏற்பட்டது. ஆனுல் இந்தச் செல்வாக்கை வளர்த்து வர, இவருக்குச் சந்தர்ப்பம் ஏற்படவில்லை. இந்தக் காலத்தில், பல சுதேச சமஸ்தானங்

களில் இவருக்கு உத்தியோகம் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால் இவர் இவற்றை யெல்லாம் நிராகரித்து விட்டார். பொதுஜன சேவை செய்ய வேண்டு மென்பதில் இவருக்கு அதிகமான ஆவல் ஏற்பட்டது. அலிகார் காலேஜை ஒரு சர்வ கலா சாலையாக்க வேண்டு மென்பதில் இவர் அதிகமான முயற்சிகள் எடுத்துக் கொண்டு அதில் வெற்றியும் பெற்றார்.

1912ம் வருஷம் இந்தியாவின் தலை நகரம் கல்கத்தாவிலிருந்து டெல்லிக்கு மாற்றப்பட்டதல்லவா? இதனால் மௌலானா சாஹிபுவும், தமது 'காம்ரேட்' பத்திரிகாலயத்தை டெல்லிக்கு மாற்றிக் கொண்டார். டெல்லிக்குச் சென்றதும் 'ஹம்தர்த்' என்ற பெயருடன் ஓர் உருது தின சரியையும் தொடங்கி நடத்தினார். அந்த வருஷம் நடைபெற்ற பால்கன் யுத்தத்தில் துருக்கி சம்பந்தப்பட்டிருந்ததல்லவா? துருக்கிக்கு உதவி செய்யுமுகத்தான் இந்தியாவிலிருந்து ஒரு நிதி திரட்டி அனுப்பினார். 1914ம் வருஷம் ஐரோப்பிய மகா யுத்தம் தொடங்கியது. துருக்கி, ஜெர்மனி பக்கம் சேர வேண்டாமென்று கேட்டுக் கொள்வதாக மௌலானா முகம்மதலியைக் கொண்டும் டாக்டர் அன்ஸாரியைக் கொண்டும் இந்தியா அரசாங்கத்தார் துருக்கிக்கு ஒரு தந்தி கொடுக்கச் செய்தார்கள். ஆனால் துருக்கி, ஜெர்மனியோடு சேர்ந்து விட்டது. நமது மௌலானா அவர்கள், துருக்கியை ஆதரித்துப் பத்திரிகையில் எழுதி வந்தார். இதனால் இந்தியா அரசாங்கத்தார் இவரையும் இவருடைய சகோதரர் மௌலானா ஷவுகத் அலியையும், இந்தியப் பாது காப்புச் சட்டத்தின் கீழ் காப்பில் வைத்தார்கள்.

பின்னர், மாண்டேகு—செம்ஸ்போர்ட் சீர்திருத்தங்கள் அமுலுக்கு வந்த காலத்தில் அலி சகோதரர்கள் காப்பிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்கள். விடுதலை யடைந்ததும் சகோதரர்கள் இந்தியாவின் முக்கியமான நகரங்களுக்குச் சென்று வந்தார்கள். பொது ஜனங்கள் இவர்களை உற்சாகமாக வரவேற்று உபசரித்தார்கள்.

1920-21ம் வருஷங்களில் இந்தியா வெங்கணும் கிலாபத் கிளர்ச்சி ஏற்பட்டது. இதில் அலி சகோதரர்கள் பூரணமாகக் கலந்து கொண்டார்கள். 1921ம் வருஷம் கராச்சியில் நடைபெற்ற கிலாபத் மகாநாட்டில், மௌலானா முகம்மது அலி பேசிய காலத்தில், 'இஸ்லாமுக்கு விரோதிகளிடத்தில் முஸ்லீம் சிப்பாய்கள் சேவை செய்யக் கூடாது' என்று கூறினார். இதனால் இவரும், மௌலானா ஷவுகத் அலி, ஜகத் குரு சங்கராச்சாரியார், டாக்டர் கிச்லு முதலியோர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குக் கொண்டுவரப் பட்டனர். மௌலானா முகம்மதலி இரண்டு வருஷச் சிறை வாசத்தை அநுபவித்து விட்டு வெளியிலே வந்தார். அப்பொழுது காந்தியடிகள் சிறையிலே இருந்தார். காங்கிரஸுக்குள்ளேயே, மாறுதல் வேண்டுங் கட்சியார், மாறுதல் வேண்டாக் கட்சியார் என்று இருவகைக் கட்சியினர் தோன்றி விட்டனர். இதனால் 1923ம் வருஷம் காகினாடாவில் நடைபெற்ற காங்கிரஸுக்கு, எல்லாக் கட்சியினருடைய நம்பிக்கையைப்

பெற்ற ஒரு தலைவர் தேவையா யிருந்தது. மௌலானா முகம்மதலி தெரிந்தெடுக்கப் பட்டார். இந்தக் காங்கிரசில் இவர் நிகழ்த்திய சொற்பொழிவு மிக நீண்டது; முக்கியமானது. பின்னர் 1927ம் வருஷம் சென்னையில் நடைபெற்ற காங்கிரசில் சில அபிப்பிராய வேற்றுமைகள் ஏற்பட்டதன் காரணமாக இவர் காங்கிரசிலிருந்து விலகிக் கொண்டார். 'காம்ரேட்' 'ஹம்தர்த்' ஆகிய பத்திரிகைகளை மீண்டும் தொடர்ந்து நடத்த முயற்சி செய்தார். ஆனால் தேக அசௌக்கியங் காரணமாக இவற்றைத் தொடர்ந்து நடத்த முடியவில்லை.

1930ம் வருஷம் லண்டனில் நடைபெற்ற வட்ட மேஜை மகாநாட்டிற்கு மௌலானா முகம்மதலி ஆஜராயிருந்தார். அப்பொழுது இவர் உடம்பு அசௌக்கியமாயிருந்தது. தமது மரண காலத்தை இவர் உணர்ந்திருந்தது போலவே அப்பொழுதெல்லாம் இவர் பேசிக் கொண்டிருந்தார். 'நான் இறப்பதற்குள் பாரத நாடு சுதந்திரம் அளிக்கப்படா விட்டால் என் தேகத்தை இங்கேயே அடக்கம் செய்து விடுங்கள்' என்பது இவருடைய திருவாக்கு.

கடைசியில் 1930ம் வருஷம் ஜனவரி மாதம் மூன்றாந் தேதி இவர் லண்டனில் காலமானார்.

காகினாடா காங்கிரசில் ஒரு சம்பவம்

மௌலானா முகம்மதலியின் தலைமையில் 1923ம் வருஷம் காகினாடாவில் காங்கிரஸ் கூடியது. அப்பொழுது மகாத்மா காந்தி சிறையில் இருந்தார். மௌலானா முகம்மதலி முதலில் தமது தலைமைப் பிரசங்கத்தைப் படிப்பதற்காக மேடை மீதேறி நின்று கொண்டார். பிரசங்க ஆரம்பத்தில் மகாத்மா காந்தி இந்தக் காங்கிரசில் இல்லாமை குறித்து வருந்துவதாக இருந்த பாகத்தைப் படிக்கத் தொடங்கினார். அப்பொழுது உணர்ச்சி மேலிட்டால் தேம்பித் தேம்பி யழுதார். அதைக் கண்டு காங்கிரஸுக்கு வந்திருந்த ஜனங்களும் கண்ணீர் விட்டு விட்டார்கள். காந்தியடிகளிடத்தில் மௌலானா முகம்மதலிக்கு இருந்த அன்புதான் என்னே!

—மா. சர்மா B. A. (Hons.)

சிலப்பதிகாரம்

இந்தக் கட்டுரை எழுதியுள்ள ஸ்ரீ சர்மா, ஆங்கிலத்திலும் தமிழிலும் நிரம்பிய புலமை யுடையவர். சிறப்பாகத் தமிழ்ச் சங்க இலக்கியங்களை எல்லாரும் எளிதில் புரிந்து கொண்டு அநுபவிக்க வேண்டு மென்ற ஆர்வ முடையவர். தமிழ்க் கலையும் தமிழ் நாகரிகமும் தனிப் பெருமையுடையன வென்ற கொள்கையுடைய இந்த அன்பரின் கட்டுரை இப்பொழுதே முதன் முதலாக 'ஜோதி'யில் வெளி வருகிறது.

"நெஞ்சை யள்ளுஞ் சிலப்பதிகார மென்றோர்மணி யாரம் படைத்த தமிழ் நாடு"—பாரதியார்.

தமிழில் உள்ள காவியங்களுக் கெல்லாம் காலத்தில் முற்பட்டது சிலப்பதிகாரம். இதில் கூறப் பட்ட சேரவரசன் செங்குட்டுவன், இலங்கை வேந்தன் கயவாகு, இவர்கள் காலத்தைக் கொண்டு, இது கி. பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த நூல் எனக் கூறலாம்.

இதன் ஆசிரியர் இளங்கோவடிகள். இளங்கோவடிகள் செங்குட்டுவனுடைய தம்பி. 'அடிகள்' என்பது பெரும்பாலும் சமண முனிவர்களையே குறித்து வந்திருப்பதாலும், இவர் வாழ்ந்தது 'குணவாயிற் கோட்டம்' என்றிருப்பதாலும், இவர் எல்லாத் தெய்வங்களையும் சிறப்பித்துக் கூறிய போதிலும் சமணமதக் கொள்கைகளை அதிகமாகக் கதையில் கூறுவதாலும், இவரைச் சமணர் என்றே கொள்ளலாம். 'கோட்டம்' என்னும் சொல், கோயில் என்ற பொருளுடையதே யானாலும் தமிழ் நூல்களில் அநேகமாக அருகன் கோயிலையே குறித்து வருகிறது.

கற்பிற் சிறந்த கண்ணகியின் சரித்தை இனிய நடையில் எடுத்து இயம்புகிறது இந்நூல். செங்குட்டுவன் கண்ணகிக்குக் கட்டிய கோயில் இன்றும் இருக்கிறது. 'மணிமேகலை'யின் ஆசிரியரான மதுரைச் சாத்தனார், மதுரையில் நிகழ்ந்த சிலப்பதிகாரக் கதையின் சம்பவங்களைத் தாம் பார்த்ததாகச் சொல்லுகிறார். ஆகவே இது உண்மைக் கதை என்பதில் ஐயமில்லை.

நோக்கம் :

அரசநீதிக் கடங்காதவர்களை அறக் கடவுளே அழிப்பான். புகழ்பெற்ற பத்தினியைப் புரையோர்போற்றுவர். நல்வினை தீவினைகளின் பயன், மறுபிறப்பில், செய்தவரைச் சென்றடைதல் திண்ணம். இம்மூன்று கொள்கைகளையும் மக்களுக்கு அறிவுறுத்துவதற்கே இந்நூலை ஆசிரியர் ஆக்கினர்.

அரைசியல் பிழைத்தோர்க் கறங்
கூற்றாவ தூஉம்

உரைசால் பத்தினிக் குயர்ந்தோ
ரேத்தலும்

ஊழ்வினை யுருத்துவந் தூட்டு
மென்பதூஉஞ்

சிலம்பு காரணமாகப் பிறந்தவைகள் என ஆசிரியர் சித்திரிப்பதால், இதற்குச் 'சிலப்பதிகாரம்' எனப் பெயரமைத்தார்.

மூன்று உண்மைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வந்த இந்நூல் முத்தமிழும் விரவியது. மூன்று காண்டங்களை யுடையது. மூவேந்தரைச் சிறப்பிக்கின்றது. கதை நிகழ்ச்சிகள் மூன்று நாட்டிலும் நிகழ்கின்றன. நகை, அவலம், வீரம் ஆகிய முச்சுவைகளையே மேம்படத் தருகிறது. முக்கிய பாத்திரங்களும் மூவரே. அமைப்பிலேயே எல்லாம் மூன்றாக விருப்பதும் ஒரு சிறப்பே.

புகார் :

"பூவர் சோலை மயிலாலப் புரிந்து
குயில்க ளிசைபாடக்
காமர் மாலை யருகசைய"

நடக்குங் காவிரி கடலோடு கலக்கும் இடத்தில் அமைந்தது காவிரிப்பூம் பட்டினம். இதைப் புகார் என்றுங் கூறுவர். கலத்திலுங் காலினும் உலகத்தின் பல நாடுகளிலுமுள்ள பொருள்களையுங் கொண்டு வந்து, அந்நகரில் விற்கின்றனர் பல நாட்டு மக்கள். அவற்றைக் காணும் போது இது பல தேசங்களும் ஒன்று சேர்ந்த ஓர் இடமோ என எண்ணுகிறோம். உலகில் உள்ள மக்கள் எல்லாரும் ஒருங்கே திரண்டு வந்தாலும் ஒடுங்காது உணவளிக்கும் வளமுடையது. உயர்ந்தோர் விரும்பி யுறையும் பொதியிலோடும் இமயத்தோடும் ஒத்த பெருமை யுடையது.

கண்ணகி :

மழைபோல்வழங்கும் மாநாய்க்கன் மகள். பன்னீராண்டுக் குட்பட்ட பிராயத்தாள். அழகில் இலக்குமி. கற்பில் "குற்றமில்லா அருந்ததி" எனப் பெண்களாலேயே போற்றப் படுபவள். இவள்தான் கண்ணகி.

அருந்ததிக்கும் அறியாது செய்த குற்றமுண்டு: அதனால் அவதியும் அடைந்தாள். கண்ணகியின் கற்புத் திறன் அருந்ததியின் திறனைக் காட்டிலும் உயர்ந்தது. இச்சிறப்புடனே ஆசிரியர் அமைய வில்லை. அவள் கற்பின் திறனைப் பெண்களே மகிழ்ந்து போற்றுகிறார்கள் எனக் கூறுகிறார். இயல்பாக, மக்கள் தம்மை மேம்படுத்திக் கொள்ளுவதை விரும்புவாரே யன்றி மற்றவரைப் புகழ்ந்துரையார். இவ்வியற்கை மனோ பாவத்திற்கு மாறாகப் பெண்களே தம்மினத்தவளான கண்ணகியைப் போற்றுகின்றனர் என்றதும், அதிலும் குற்றமற்ற அருந்ததிக்கு ஒப்பு இவள் என்று போற்றியதாகக் கூறுவதும், இவள் திறனுக்கும் குணத்துக்கும் மக்களிலன்றித் தெய்வ நிலை யடைந்தவர்களிலும் ஒப்பு இல்லை என ஆசிரியர் உயர்த்திக் கூற விரும்பியதே.

"போதிலார் திருவினாள் புகழுடை
வடிவென்றுந்
தீதிலா வடமீனின் திறமிவ
டிறமென்று
மாதரார் தொழுதேத்த வயங்கிய
பெருங்குணத்துக்
காதலாள் பெயர்மன்னுங் கண்ணகி
யென் பாள்மன்னோ"

கோவலன் :

'செல்வத்துப் பயனே ஈதல்' என்ற கொள்கையைக் கடைப்பிடித்து வறியோர்க் களிக்கும் வாழ்க்கையைக் கொண்டவன் மாசாத்துவான். வணிகர் குலதிலகன். கொடுத்துத் தொலையாத செல்வந்தன். அவன் மகன் தான் கோவலன். பதினாறு வயதி

னன். மதியை ஒத்த முகமுடைய பெண்கள், 'முருகன்' எனப் புகழும் அழகன். முருகன் தமிழர்க்குத் தெய்வம். அப்பதத்திற்கே 'அழகன்' என்ற பொருள் உண்டு. கடவுள் பெயரையே யிட்டு அழைத்ததால், அழகில் மட்டுமன்றி, ஆண்மையிலும், அருளிலும் முருகனுக்குச் சமானன் என்று விளங்குகிறது.

அழகோடு அமையாது புகழும் படைத்தவன். அவன் புகழை அளக்க ஆசிரியரே இசையவில்லை. 'மண்டேய்த்த புகழினன்' எனச் சிறப்பிக்கிறார். அவன் புகழ் வளர வளரப் பூமி சுருங்குகின்றதாம். பூமி சுருங்க வேண்டுமென்றே இவ்வளவு புகழும் படைத்தானே அவன்?

மாநகர்க் கீந்தார் மணம்:

கண்ணகி உவமை கூறவியலாத கற்புடையவள். கோவலன் எல்லை கூறவியலாத புகழ் படைத்தவன். அவள் வடிவத்தில் இலக்குமி. இவன் அழகில் முருகன். இவ்விருவரையும் மணஞ் செய்விப்பது எவ்வளவு பொருத்தமானது! இவ்வெண்ணம் மாநாய்க்கனையும் மாசாத்துவானையும் மகிழ்ச்சிக் கடலில் அமிழ்த்தியது. மணம் நிச்சயமாயிற்று. யானை ஒன்றைச் சிங்காரித்தனர். அதன் கழுத்தில் அழகான பெண்களை ஏற்றி நகரத்திற்கு மணம் அறிவித்தனர். சந்திரன் உரோகிணியைச் சேர்ந்த சுபதினம்.

நகர முழுவதும் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. மக்களெல்லாரும்மகிழ்ச்சி பொங்கும் முகத்தராய் இருக்கின்றனர். அவ்வூருக்கே இம்மணம் மணமும் பொலிவும் தருகிறது. வெளியே முரசு இயம்புகிறது. மத்தளம் முழங்குகிறது. சங்குகள் சப்திக்கின்றன. எங்கும் மங்கள சப்தமே நிறைந்திருக்கிறது. உள்ளே வைரங்களும் மாணிக்கங்களும் பதித்த தூண்களின் மேல் நீலப் பட்டை விதானமாகக் கட்டி, அதன் கீழ் முத்துப் பந்தல் அமைத்திருக்கின்றனர். மறை ஓதிய பார்ப்பான் சடங்கு காட்டுகிறான். கோவலனும் கண்ணகியும் தீவலம் வருகின்றனர். கண் கொள்ளாக் காட்சியது. பார்ப்பவர்கள் என்ன தவஞ் செய்தவர்களாக விருக்க வேண்டும்?

'மாலைதாழ் சென்னி வயிரமணித்
தூணகத்து
நீல விதானத்து நித்திலப்பூம்
பந்தர்க்கீழ்
வானூர் மதியஞ் சகடணைய
வானத்துச்
சாலி யொருமீன் தகையாளைக்
கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி
காட்டிடத்
தீவலஞ் செய்வது காண்பார்க
ணோன்பென்னை'

பெண்கள் மலர் தூவி வாழ்த்துகிறார்கள். அவ்வாழ்த்துதான் எவ்வளவு அன்புடன் தொனிக்கிறது! கண்ணகி, கணவனைக் கண்ணாலும் மனத்தாலும் பிரியக் கூடாதாம். கோவலன் மனையைத் தழுவிய கையை நழுவ விடக் கூடாதாம். இருவரும் மனமொத்த அன்புடையராய் குற்ற மற்ற வாழ்க்கையை நடத்திப் புகழ் பெற வேண்டுமாம்.*

நீசு

விக்கிரமவேலு

போரொடு விரிகூந்தற் பொலனறுங் கொடியன்னார்

காதலற் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல்

தீதறு கெனவேத்திச் சின்மலர் கொடுதுவி'

வாழ்க்கை:

சுற்றத்தினரைக் காப்பாற்றல். துறந்தவர்க்கு உதவி புரிதல். விருந்தினரை உபசரித்தல். தருமஞ் செய்தல். அன்புடைமை. அருளுடைமை. இனியவை கூறல். இவை இல்லற தருமங்கள். இவற்றைக் கோவலனுங் கண்ணகியும் வழுவாது செய்து புகழும் பயனும் எய்தலைக் காண மகிழ்ச்சியுடையவளாய் மாநாய்க்கன் மனைவி மக்களைத் தனி வீட்டில் குடியேற்றினள்.

'வாரொலி கூந்தலைப் பேரியற் கிழத்தி

மறப்பாருரல் கேண்மையோ டறப்பரி சாரமும்

விருந்து புறந்தரூஉம் பெருந்தண் வாழ்க்கையும்

வேறுபடு திருவின் வீறுபெறக் காண

வுரிமைச் சுற்றமோ டொருதனி புணர்க்க'

இளவேனிற் காலம். குளங்களிலும் சோலைகளிலும் நறுமணங் கமழும் மலர்கள் மலர்ந்திருக்கின்றன. அவற்றின் தேனையும் தாதையும் உண்டு, வண்டுகள் ஓடியாடிப் பாடுகின்றன. தென்றல் காற்று பூக்களின் மணத்தை வாரிக் கொண்டு, கடல் நீரை முகந்த மேகம் மழையாகப் பெய்து நிலத்தை வளம்படுத்துவது போல, நெருங்கிய வீதிகளுடைய பட்டினத்தை மணங் கமழச் செய்கிறது. தென்றல் பட்ட தேமொழியுங் கணவனும், நிலவின் பயன்கொள்ள வெளிமுற்றத்திற்குச் சென்றனர். மணம் வீசும் மலர்களாலாய சேக்கையில்,

"முதிர்கடன் ஞால முழுவதும் விளக்குங்

கதிரொருங் கிருந்த காட்சி போல"

இருந்தனர். கோவலனையும் கண்ணகியையும், உலகுக்கு ஒளி தரும் சூரிய சந்திரர்க்கு ஒப்பிடுகிறார் ஆசிரியர். பூமடந்தை போன்ற கண்ணகியும், செவ்வேளின் செவ்வியுடைய கோவலனுஞ் சேர்ந்து ஒளிதருதல், திண்ணமே. உவமை இம்மட்டோடு நில்லாது இல்லறத்தவர் இயல்பை எடுத்துக் காட்டுகிறது.

சூரியன் ஒளியுடையவன். சந்திரன் சூரிய ஒளியைக் கொண்டு பிரகாசிப்பவன். இன்றியமையாததா யிருந்தாலும் சூரிய கிரணம் வெப்பமுடையது. சந்திரன் ஒளியே குளிர்ச்சி மிகுந்து தாய் மக்களை மகிழ்விக்கிறது. புருஷன் வீரமுடையவன். புகழ் படைப்பவன். செயற்கரிய செயல்களைச் செய்துப் புகழ் எய்துகிறான் புருஷன். பெண் இல்லற நிலையில் புருஷனோடு சேர்ந்திருப்பதாலேயே சோபிக்கிறாள். மனத்தை மயக்கும் அன்பும் அருளுமே குணமாகக் கொண்டவள். அன்பைப் பொழிந்தே சீரும் சிறப்பும் அடைகிறாள். இல்லற வாழ்க்கையின் இயல்புகள் இவ்வுவமையில் எவ்வளவு அழகுடன் அடங்கிக் கிடக்கின்றன!

மகிழ்ச்சியில் மூழ்கிக் கிடக்கும் கோவலன், மனைவியைப் புகழ்கிறான். பிறை போன்ற நுதலும், வில்லை ஒத்த புருவங்களும், வேல் போன்ற வெடித்த கண்களும் கொண்ட கண்ணகியின் இனிய சாயலைக் கண்டு மயில்கள் வெட்கத்தால் காட்டில் சென்று மறைகின்றன. அவள் நடைக்கு நாணினவாய் அன்னங்கள் தாமரைப் பூக்களில் ஓடி ஒளிகின்றன. குழலும் யாழும் அமிர்தமும் கலந்த அவள் மழலைச் சொல்லைத் தாமும் கற்றுக்கொள்ள விரும்பிய கிளிகள் அவள் கையை விட்டு அகலாது உறைகின்றன.

இயற்கை அழகு நிறைந்தவள் கண்ணகி. இருப்பினும் தோழிகள் ஆபரணங்களை அணிவித்து செயற்கை யழகும் செய்திருக்கின்றனர். இயற்கை அன்னை அருள் இல்லாதவர்க்கு அணிகள் அணி செய்யும். அவை கண்ணகிக்கு ஏன்? அவள் நலனை அவை குறைவு படுத்துவதாகக் கோவலன் கருதுவது சரியே. இவ்வளவு புகழ்ந்தும் அமையாமல்,

"மாசறு பொன்னே வலம்புரி
முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
அரும்பெறற் பாவா யாருயிர்
மருந்தே
பெருங்குடி வாணிகன் பெருமட
மகளே
மலையிடைப் பிறவா மணியே
யென்கோ
அலையிடைப் பிறவா அமிழ்தே
யென்கோ
யாழிடைப் பிறவா யிசையே
யென்கோ
தாழிருங் கூந்தல் தையால் நின்னை"

என்று அவள் அழகை ஐம்பொறிகளாலும் அனுபவித்த நலத்தைக் கூறுகிறான். பொன்னை போல் கண்ணுக்கு மகிழ்ச்சியளிக்கிறாள். முத்தைப் போல் ஊற்றின்பம் தருகிறாள். நல்ல மணம் பொருந்தியவள். கரும்பின் சுவையையும் தேன் போன்ற இனிய மொழியையும் உடையவள். இவ்வளவு அழகுள்ளவளை, அன்புடையவளைக் கோவலன் 'பாவாய்' என்கிறான். பாவை மக்களுக்கு வருத்தம் தரும் 'கொல்லியற் பாவை.' கண்ணகியும் வருத்தம் தரும் இயல்புடையவளோ? அது அவள் குணமே யல்ல. அவள் கடை கண்ணோக்கைக் கண்ட கோவலன் காமவிகாரத்தால் பீடிக்கப் படுகிறான். தன் மனதில் ஏற்பட்ட மாறுதலினால் தனக்கேற்பட்ட துன்பத்தை அவள் செய்ததாகக் கொண்டு 'பாவாய்' என அழைக்கிறான். தன் நோக்கால் கோவலன் நோய் கொள்ளச் செய்தவள் அந்நோயைத் தீர்க்கும் மருந்தாகவும் அமைகிறாள். அவள் அன்பு கனிந்த பார்வை அவனுக்கு மகிழ்ச்சி யூட்டுகிறது. தான் கொண்ட நோய் தீர்க்கப் பெறுவதோடு, அதற்கு மாறுபட்ட சந்தோஷத்தையும் அடைகிறான். அதனால் 'ஆருயிர் மருந்தே' என அழைக்கிறான்.

நவமணிகளைப் போல் ஒளி பொருந்திய வடிவினள் கண்ணகி. இருந்தாலும் மலையிடைப் பிறந்தவள் அல்ல. அவள் கோவலன் நோயைத் தீர்ப்பதால் மருந்து ஆகிறாள். ஆகவே நோயைப் போக்கி ஆனந்தத்தைத்

தரும் அமிர்தம் போன்ற தன்மை யுடையவள். இருப்பினும் அவள் கடலில் பிறக்காததால் அமிழ்தினும் வேறு பட்டவள். அவள் மழலைச் சொல் வீணையினின்றும் பிறக்கும் இன்னிசையை ஒத்திருக்கிறது. ஆனால் அவள் வடிவு வீணையின் வடிவுக்கு மாறுபட்டது. இப்படி ஒப்பும் விரோதமும் உள்ள உவமைகளைக் கையாள்கிறான் கோவலன். மயக்க முடையவன் செயல்கள் அவை. இவற்றைக் கூறும் போது கோவலன் காம மயக்கத்தினின்றும் விடுபட்டவன் அல்லவே!

குரங்கு போன்றது மனம். அதை ஒரு நிலைப்படுத்தலே மக்கள் நோக்கம். இங்கே கோவலன் மனம் ஒரே நிலையில் இருக்கிறது. அது கண்ணகியின் அழகைத் தவிர வேறொன்றையும் நினைக்கக் கூடிய தாயில்லை. அதனாற்றான் அவள் நலத்துக்கு உவமை கூறும்போது, ஒப்பும் விரோதமும் உடைய வுவமைகளைக் கையாள்கிறான். அவள் வடிவிற்கு மணியின் ஒளி ஒக்கும் என நினைக்கிறான். 'மணியே' என அழைக்கப் போகும் சமயத்தில் அவள் மலையிடைப் பிறவாத விரோதம் குறுக்கிடுகிறது. அவ்வுவமையை விட்டு வேறு வுவமை சிந்திக்க மனோவலிமை யில்லை. ஆகவே 'மலையிடைப் பிறவா மணியே' என்கிறான். இப்படியே 'அமிழ்து' 'இசை' யெனும் போதும் இடர்ப்படுகிறான்.

"தூமப் பணிகளொன்றித்
தோய்ந்தா லெனவொருவார்
காமர் மணிவியெனக் கைகலந்து—
நாமந்
தொலையாத வின்பமெலாந்
துன்னினார் மண்மே
னிலையாமை கண்டவர்போ
னின்று"

நிலையாமையை யுணர்ந்து, பந்தத்தினின்றும் நீங்கிய பெரியோர், அந்தமில் இன்பத்து அழுந்திக் கிடப்பது போல, காதலர் இருவரும் புகைக் கூட்டங்கள் ஒன்றுபட்டுச் சேர்ந்ததைப் போல் என்றும் இணை பிரியாராய், சொல்லிலடங்காத இன்பத்தை அநுபவித்திருந்தனர். உலகமும், அதிலுள்ள பொருள்களும் அழியுந் தன்மையுடையன எனத் துணிந்த பெரியோர் அழியா வின்பமாகிய வீட்டையடைய முயன்று, அடைந்ததும் நித்யானந்த சுகத்தில் நிலைத்திருப்பார். கண்ணகியுங் கோவலனும் மண்ணின் நிலையாமை, யாக்கை நிலையாமை முதலியவைகளை அறிந்தவர்களல்ல. இருந்தாலும் அவர்கள் அநுபவிக்கும் இன்பம், ஞானிகள் அநுபவிக்கும் இன்பம் போன்றதே என ஆசிரியர் கூறுகிறார்.

பலமான அஸ்திவார மில்லாமல் கட்டடம் நிற்காது. நிலையாமை தெரிந்து, உலகத்தியல்பை ஆராய்ச்சி செய்து, பின் வைராக்கியம் என்னும் அஸ்திவாரம் நாட்டி, ஆனந்தம் என்னும் வீட்டை அமைக்கின்றனர். இந்தப் பலமான அஸ்திவார மில்லாமலேயே இன்ப வீட்டைக் கட்டி விட்டனர் கோவலனுங் கண்ணகியும். இப்பொழுதுதான் கட்டி முடிந்த வீடாகையால் அழகுடன் சோபிக்கிறது. ஆனால் நிலைத்து நிற்குமா? நில்லாது என்பது வெளிப்படை. சொல்லிலடங்காத இன்பத்தைத்

துய்க்கிறார்கள் என்றாலும், அது நிலை பெற்றதல்லவே என்பதை நமக்கு எடுத்துக் காட்டுவதற்காகத்தான் ஆசிரியர், அவர்கள் அநுபவித்த இன்பத்தை, நிலைபெற்று நிற்கும் தன்மை வாய்ந்த ஞானிகளின் இன்பத்தோடு ஒப்பிட்டுக் கூறுகிறார். இவ்வுவமை, பின், கண்ணகிக்கும் கோவலனுக்கும் வரப்போகும் கஷ்டங்களை முன் கூட்டியே குறிப்பாய்க் காட்டுகின்றது.

இப்படி வரப்போகும் கஷ்டங்களை முன் கூட்டிக் கதையில் பெய்துரைத்தல் ஆழ்ந்த கருத்துடைய ஆசிரியர்களின் வழக்கமே. காவியங்களைப் படிக்கும் போது படிப்பவர்கள் பாத்திரங்களைத் தம்மோடு சேர்ந்தவராகக் கொள்வது சாதாரணமே. ஆகவே கதா பாத்திரங்களுக்கு நேரும் பொறுக்க முடியாத கஷ்டத்தை முன்னறிவிப்பின்றிப் படிக்கும்போது படிப்பவர் உள்ளம் அழுங்கும். அதைத் தடுத்துப் படிப்பவர் உள்ளத்தை ஒரே நிலையில் வைத்திருக்க ஆசிரியர்கள் இவ்வழியைக் கையாளுகின்றனர்.

இந்தியாவைப் பற்றி

இந்தியாவின் மொத்த விஸ்தீரணம் 1,808,000 சதுர மைல். மொத்த ஜனத் தொகை 3530 லட்சம். இவர்களில், தொழில் செய்து பிழைக்கிறவர்கள் 1540 லட்சம் பேர். இந்தத் தொழிலாளர்களில் 500 லட்சம் பேர் ஸ்திரீகள். தொழில் செய்து பிழைப்போரில் 100க்கு 66 பேர் விவசாயத்திலும், 18 பேர் வியாபாரத்திலும், 7 பேர் வீட்டுத் தொழிலிலும் 3 பேர் அரசாங்க உத்தியோகம், ஆசிரியர், எழுத்தாளர் முதலிய தொழில்களிலும், 5 பேர் சில்லரைத் தொழில்களிலும் ஈடுபட்டிருக்கின்றனர்.

—பி. சுப்ரமண்யம்.

ஒரு வீரனுடைய வாழ்க்கையில் சிறு சம்பவம்

ஸ்விட்ஜர்லாந்து என்பது ஐரோப்பா கண்டத்திலுள்ளது. இத்தேயத்தைத் தெளிந்த நீரையுடைய ரூசஸ் நதியானது பாய்ந்து வளம்படுத்தும். ரூசஸ் நதியின் கரைமருங்கிலே யூரி என்னும் கிராமம் ஒன்றுண்டு. அக்கிராமம் நான்கு திசைகளிலும் அழகிய பூஞ்சோலைகளாலும், நீர்வாய்க்கால்களாலும் சூழப்பட்டு ஒரு பெரிய நந்தவனம் போல் விளங்கும். இத்தகைய கிராமத்திலே ஓர் சிறு குடிசையில் வில்லியம் டெல் (William Tell) என்பவனும் அவனருமைக் குமாரனும் வசித்து வந்தார்கள். இந்த வில்லியம், ஸ்விட்ஜர்லாந்தின் சுதந்திரத்திற்காகப் போராடியவன். இவனுடைய வாழ்க்கையில் ஒரு சம்பவத்தை மட்டும் இங்குக் குறிப்பிடுகிறோம்.

நமது வீரன் வில் வித்தையில் அதிக சமர்த்தன். எதையும் குறி தப்பாமல் எய்யும் திறமை யுடையவன். இவற்றோடு அன்பு, அடக்கம், தேசபக்தி, முதலிய அருங்குணங்கள் வாய்ந்த அஞ்சா நெஞ்சன். அக் காலத்தில் ஸ்விட்ஜர்லாந்தை கெஸ்லர் (Gessler) என்பவன் ஆண்டு வந்தான். அவன் மிகக் கொடிய நெஞ்சினன். மகா துஷ்டன். எக்காரியத்தையும் யோசியாமல் செய்பவன். ஒரு நாள் கடைத் தெருவில் ஒரு கம்பத்தை நாட்டி, அதன உச்சியில் ஆஸ்திரிய தொப்பியை மாட்டி அங்குவரும் ஜனங்களை வணங்கச் சொன்னான். ஸ்விட்ஜர்லாந்து மக்கள் அதற் கொப்பிடாராயின் தன் கத்திக்கு இரையாவார்கள் என்று கட்டளை யிட்டிருந்தான்.

இச்சமயத்தில் ஒரு நாள் நமது வீரன் வில்லியம், கம்பீரமாக நடந்து வந்து கவர்னர் (கெஸ்லர்) முன்நின்று வணங்காதிருந்தான். உடனே கவர்னருக்குக் கோபம் பொங்கி 'கம்பத்திற்கும், எனக்கும் உடனே வணக்கம் தெரிவிப்பாயாக' என்று கூறினன். அப்பொழுது வீரன், தனது மார்பையும், தோளையும் திருப்பிக் காண்பித்து 'கடவுள் ஒருவனுக் கல்லாது வேறுயாருக்கும் பணிய மாட்டேன்' என்று கம்பீரமாகக் கூறினன். மறுபடியும், 'என் இருதயத்தைத் துண்டு துண்டாகப் போட்டாலும் தங்கள் எண்ணத்தைப் பூர்த்தி செய்யவே மாட்டேன். தங்கள் வாளால் என்னைக் கொல்லலாமே தவிர, என் உள்ளத்தில் பதிந்து கிடக்கும் உன்னதமான சுதந்திர உணர்ச்சியை தடை செய்யத் தங்கள் வாளாலும், ஈட்டியாலும் முடியாத காரியம்' என்று அழுத்தமாகச் சொன்னன்.

கெஸ்லருக்கு உடனே கோபம் கரைபுரண்டு ஓடியது. உடனே வில்லியம் மகனை அழைத்துக் கம்பத்தில் கட்டினன். பின் ஓர் ஆப்பிள் பழத்தை அவன் தலையில் வைத்து வீரனைப் பார்த்து, 'நீ எண்பதடி தூரத்திலிருந்து, உன் மகன் தலையிலிருக்கும் ஆப்பிள்

பழத்தைக் குறிபார்த்து அம்பெய்து அதைத் துண்டுகளாகச் செய்தால் உன்னை விடுதலை செய்வேன்' என்று கூறினான்.

ஐயோ! இதனிலுங் கொடுமை எங்கும் கிடையாதே. சிறு குறிதப்பினும் வில்லியம் மகனின் உயிர் போகும். இச் செயலுக்கு யார்தான் சம்மதிப்பார்? வில்லியம் மிகவும் தயங்கினான். அது சமயம் அவனருமை மகன் தந்தையைப் பார்த்து 'விடுதலை அல்லது மரணம்; இரண்டிலொன்று செய்து முடியுங்கள்' என்று கூறினான்.

உடனே வில்லியம் வில் வளைத்து நாணேற்றினான். உடனே அங்குக் குழுமி யிருந்த ஜனங்கள் 'வீராதி வீரன் வில்லியமுக்கு ஜே' என்று கரகோஷம் செய்தனர். குறி அடித்தாய் விட்டது. பழம் இரண்டு துண்டாகக் கீழே விழுந்தது. உடனே வில்லியம் தன் மகனை மார்புடனணைத்து கெஸ்லரை நோக்கி 'நான் விட்ட அம்பு என் மகனைத் துளைத்திருந்தால், அடுத்த அம்பு உங்கள் மார்பைத் துளைத்திருக்கும்' என்று ஆக்ரோஷத்துடன் கூறினான். உடனே ஜனங்களிடையே ஆரவாரமும், ஜய கோஷமும் எழுந்தன.

இந்தச் சுதந்திரதியாகியால் ஸ்விட்ஜர்லாந்து ஆஸ்திரிய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றது.

சராசரி வருமானம்

இந்தியாவில் வருஷத்தில் ஏறக்குறைய 2150 ரூபாய் சராசரி வருமான முடையோர் சுமார் பத்து லட்சம் பேர் இருக்கின்றனர். அதாவது அரசாங்கத்திற்கு வருமான வரி செலுத்தக் கூடியவர்கள். இந்தப் பத்து லட்சம் பேருடைய மொத்த வருஷ வருமானம் 4500 கோடி ரூபாய் என்று உத்தேச மதிப்பிடப் பட்டிருக்கிறது. அதாவது எல்லா ஜனங்களுடைய மொத்த வருமானத்தில் ஆறில் ஒரு பங்கு இவர்களுக்குக் கிடைக்கிறது.

ஜேம்ஸ் வாட் —நீராவி யந்திரத்தின் தந்தை.

ஸ்காத்லாந்திலே க்ரீனுக் (Greenock) என்ற ஓர் ஊரில் ஒரு தச்சன் இருந்தான். இவனுக்கு ஜேம்ஸ் வாட் என்ற ஒரு மகன் 1736ம் வருஷம் ஜனவரி மாதம் 18ந் தேதி பிறந்தான். இவன் சிறு பிராயத்திலிருந்தே நோயாளி மாதிரி இருந்தான். இதனால் பெற்றோர்கள் இவனைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பாமல் வீட்டிலேயே படிப்புச் சொல்லிக் கொடுத்தார்கள். ஜேம்ஸ். வீட்டில் படித்த நேரம் போக, மற்ற நேரங்களில் தன் தகப்பனுருடைய உளி, சுத்தி முதலிய சாமான்களை எடுத்து ஏதேனும் வேலை செய்து கொண்டிருப்பான். அல்லது வேறு ஏதேனும் ஒரு பொருளை உற்றுக் கவனித்து அதில் என்னென்ன ரகசியங்கள் அடங்கி யிருக்கின்றன வென்று ஆராய்ச்சி செய்வான். ஒரு நாள் இவன் வீட்டில் அடுப்பின் மீது ஒரு பாத்திரத்தில் தண்ணிர் கொதித்துக் கொண்டிருந்தது. அதை ஜேம்ஸ் உற்றுப் பார்த்துக் கொண்டிருக்க, இவன் அத்தை, 'என்ன ஜேம்ஸ், இப்படிச் சோம்பேறித் தனமாக இருந்தால் எப்படி? அரைமணி நேரமாக நானும் பார்த்துக்கொண்டிருக்கிறேன். நீ எதையோ உற்றுப் பார்த்துக் கொண்டு சும்மா யிருக்கிறாயே. நன்றாயில்லை' என்று கோபித்துக் கொண்டாள். ஆனால், பிற்காலத்தில் போக்கு வரவு வசதிகள் சௌகரியமா யேற்படுவதற்கு இந்த ஜேம்ஸ் வாட்தான் காரணமா யிருக்கப் போகிறான் என்பது அவளுக்கு என்ன தெரியும்?

ஜேம்ஸ், சிறிது பெரியவனானதும் பள்ளிக்கூடத்திற்குச் சென்றான். இவனுக்குக் கணித சாஸ்திரத்தில்தான் அதிகமான ஆசை ஏற்பட்டிருந்தது. ஆனால் மேலே தொடர்ந்து இவனால் படிக்க முடியவில்லை. வறுமைதான் காரணம்.

பள்ளிக் கூடத்தை விட்டதும், லண்டனுக்குச் சென்று, கணித பாடத்திற்காகக் கருவிகள் பல செய்து கொடுக்கும் ஒரு தொழிற் சாலையில் கணிதக் கருவிகளைச் செய்யக் கற்றுக் கொண்டான். கிளாஸ்கோ சர்வ கலா சாலையில் கணிதக் கருவிகள் செய்ய ஓர் ஆள் தேவையா யிருந்தது. இதற்கு ஜேம்ஸ் விண்ணப்பித்துக் கொண்டான். 1757ம் வருஷம் வேலையும் கிடைத்தது. புதிய கருவிகள் செய்து கொடுத்தும் பழைய கருவிகளைப் பழுது பார்த்தும் வந்தான். பழுது பார்ப்பதற்காக ஒரு நீராவி இஞ்சின் இவனிடம் கொண்டு வரப்பட்டது. இது சரியானபடி யில்லை யென்றும் இதனைப் பல வழிகளிலும் அபிவிருத்தி செய்ய முடியு மென்றும் ஜேம்ஸ் தீர்மானித்து, இதன் மீது பல பரிசோதனைகள் செய்யத் தொடங்கினான். வெற்றிகரமாக ஒன்றும் முடியவில்லை. ஆனால் வாட் விடா முயற்சியுடையவன். பல நண்பர்களிடமிருந்து பண உதவி பெற்று தன் ஆராய்ச்சியை நடத்தி வந்தான். வருஷங்கள் பல சென்றன. இப்படி யிருக்கிற போது மத்தேயு போல்ட்டன் (Mathew Boulton) என்பவன், வாட்டினுடைய பரிசோதனையில் சிரத்தை கொண்டு, அவனுக்குப் பல வகையிலும் உதவி செய்தான். போல்டன், ஒரு தொழிற்சாலை அதிகாரி. அவனிடம் எல்லா வசதிகளும் இருந்தன. அந்த வசதிகளை வாட் உபயோகித்து, சத்தமாகவும் எவ்வித முட்டுப் பாடின்றியும் ஓடக் கூடிய ஒரு நீராவி இஞ்சினைக் கண்டு பிடித்தான்.

இந்தமாதிரி இஞ்சின்களை உற்பத்தி செய்வதற் கென்று வாட், மேற்படி போல்ட்டனுடன் கூட்டாகச் சேர்ந்து ஒரு கம்பெனி ஆரம்பித்தான். இங்கிலாந்தில் பர்மிங்ஹாம் நகருக் கருகாமையில் ஸோஹோ என்ற இடத்தில் போல்ட்டன் அண்ட் வாட் (Boulton and Watt) என்ற பெயருடனை ஒரு கம்பெனி திறக்கப்பட்டது. இதற்குப் பிறகு. வாட்டின் வாழ்க்கை சௌகரியமாக நடக்கத் தொடங்கியது. நல்ல வருமானம், நிரம்பிய புகழ் எல்லாம் ஒன்றன் மேலொன்றாக வந்தன.

இப்படி பணமும் சுகமும் கிடைத்த காலத்திலும் வாட் சும்மா யிருக்கவில்லை. யந்திர சம்பந்தமான பல கருவிகளைக் கண்டு பிடித்தான். 'காபியிங் பிரெஸ் (Copying Press) என்கிற மை அழுத்தும் யந்திரம், காபியிங் இங்கி (Copying ink) முதலியன இவன் கண்டு பிடித்தவைதான். இவற்றோடு தன்னுடைய 75வது வயதில் ஜெர்மன் பாஷையைக் கற்றுக் கொண்டான். விடா முயற்சிக்கும் தன்னம்பிக்கைக்கும் சிறந்த உதாரண புருஷனா யிருக்கிற ஜேம்ஸ் வாட் 1819ம் வருஷம் ஜுன் மாதம் 2ந் தேதி இறந்து போனான்.

சமுதாய ஒப்பந்தம்

—வெ. சா.

(ரூஸ்ஸோ எழுதியது)

அரசியல் தத்துவங்களைப் பற்றி மிக நுட்பமான முறையில் ஆராய்ச்சி செய்திருக்கிற அறிஞர் கூட்டத்தில் பிரெஞ்சுக்காரர்கள் பலர் முக்கிய ஸ்தானம் பெற்றிருக்கிறார்கள். வால்ட்டேர் என்ன, ரூஸ்ஸோ என்ன, மாண்டிஸ்கியு என்ன, இப்படி பல பிரெஞ்சு அறிஞர்கள், மானிட ஜாதியின் அரசியல் எண்ணத்திலேயே ஒரு புரட்சியை உண்டு பண்ணி விட்டார்கள். ஏன்? இவர்கள் விதைத்த எண்ணங்களின் விதை தான், பிரெஞ்சுப் புரட்சியாகப் பரிணமித்ததென்று சொல்லலாம்.

ரூஸ்ஸோ என்று சுருக்கமாக அழைக்கப் படுகிற ழேன் ழக்கே ரூஸ்ஸோ (Jean Jacques Rousseau) ஸ்விட்ஜர்லாந்தின் தலைநகரமான ஜினீவாவில் 1712ம் வருஷம் பிறந்தான். இவன் தகப்பன் கடியாரஞ் செய்து பிழைப்பு நடத்தி வந்தான். ஏழைக் குடும்பம். இதனால் ரூஸ்ஸோ முறைப்படி உயர்தரக் கல்வி பெறவில்லை. வயிற்றுப் பிழைப்பு நடக்க வேண்டுவது முக்கியமல்லவா? எழுத்துச் செதுக்கும் தொழில் கற்றுக் கொண்டு அதன் மூலம் ஜீவனம் நடத்த முயன்றான். போதிய வருமானம் கிடைக்கவில்லை. பாதிரியாகி, மதோபதேசம் செய்து பிழைக்கலாமென்று பார்த்தான். அதுவும் முடியவில்லை. ஏனென்றால் இவன் எதையும் சுயமாகச் சிந்திக்கிறவன். தன் அபிப்பிராயங்களைத் தாராளமாக வெளியிட்டுச் சொல்வான். இது பலருக்குப் பிடிக்கவில்லை. சுலபமாக ஜீவனம் நடத்த முடியுமா? பின்னர் இரண்டு பணக்கார ஸ்திரீகளின் நட்பும் ஆதரவும் இவனுக்குக் கிடைத்தன. இவர்களுடைய நிழலில் இருந்து கொண்டு அநேக சிறந்த நூல்களை எழுதினான். இவற்றில் பிரசித்தமானவை இரண்டு. ஒன்று கல்வியைப் பற்றியது; மற்றொன்று அரசியலைப் பற்றியது. குழந்தைகளின் இயற்கை வளர்ச்சியை யொத்தாற் போலவே அவர்களுக்குக் கல்வி போதிக்க வேண்டுமென்ற கோட்பாட்டை, இவன் தன்னுடைய 'எமிலி' (Emile) என்ற நூலில் விளக்கிச் சொல்கிறான். இதேமாதிரி அரசியல் விவகாரங்களையும் மிக நுணுக்கமாக ஆராய்ச்சி செய்து 'சமுதாய ஒப்பந்தம்' (Social Contract) என்ற ஒரு நூலாக வெளியிட்டான். இவனுடைய நூல்களில் இவை யிரண்டும் பிரசித்தமானவை யென்று இவனுக்குப் பிற்காலத்தில் போற்றப்பட்ட போதிலும், இவன் காலத்தில் இந்த இரண்டு நூல்களால்—சிறப்பாக 'சமுதாய ஒப்பந்தம்' என்ற நூலினால்—இவனுக்குப் பல சங்கடங்கள் ஏற்பட்டன. ஜனங்கள் இவனைத் துவேஷித்தார்கள். வாழ்க்கை நடத்துவது இவனுக்கு ரொம்ப சிரமமாகி விட்டது. எனவே, 1776ம் வருஷம் இங்கிலாந்துக்குச் சென்று விட்டான். அங்கு டேவிட் ஹ்யூம், பாஸ்வெல் முதலிய பல நூலாசிரியர்களின் நட்புக் கிடைத்தது ஆனால் இவன் நீடித்த காலம் இங்கிலாந்தில் தங்கி யிருக்கவில்லை. அங்கிருந்த நண்பர்களிற் சிலர் இவனிடம் மனஸ்தாபங் கொண்டு விட்டாகள். எனவே 1778ம் வருஷம் மீண்டும் பிரான்சுக்கு வந்து விட்டான். சாகிற பரியந்தம் வறுமை வாழ்க்கையையே நடத்தி வந்தான்.

ரூஸ்ஸோ எழுதிய 'சமுதாய ஒப்பந்தம்' (Social Contract) என்ற நூல் மிகவும் சிக்கலான ஒரு நூல். தன்னுடைய காலம் வரையில் உலகத்தில் அரசியல் கோட்பாடுகள் எப்படி வளர்ந்தும் சிதைந்தும் வந்திருக்கின்றன வென்பதை, இந்த நூலில் ரூஸ்ஸோ நன்றாக ஆராய்ச்சி செய்திருக்கிறான். தன்னுடைய முடிவுகளை தைரியமாகத் தெரிவித்திருக்கிறான். இவனுடைய முடிவுகளைப் பற்றி அபிப்பிராய பேதங்கள் இருக்கலாம். அது சகஜந்தான். ஆனால் இவன் என்ன கூறுகிறான் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டாமா? அதற்காகவே, 'சமுதாய ஒப்பந்தம்' இங்கு மொழி பெயர்த்துத் தொடர்ச்சியாகத் தரப்படுகிறது. நாமறிந்த வரையில் ரூஸ்ஸோவின் இந்த நூல் இப்பொழுதே முதன் முதலாகத் தமிழில் வெளி வருகிறது.

1. மனிதன் சுதந்திர முள்ளவன்

மனிதன், சுதந்திரமுள்ளவனாகவே பிறக்கிறான். ஆனால் அவன் எங்கும் கட்டுண்டு கிடக்கிறான். பிரதி மனிதனும், தான், மற்றவர்களுக்கு எஜமானன் என்று நினைக்கிறான். ஆனால் அவன் மற்றவர்களைக் காட்டிலும் பெரிய அடிமையாயிருக்கிறான். இந்த மாறுபாடு எப்படி உண்டாயிற்று? அஃதெனக்குத் தெரியாது. இந்த மாறுதல் நியாயமானதென்று சொல்ல என்ன ஆதாரம்? இந்தப் பிரச்னையை நான் தீர்த்து வைக்க முடியுமென்று கருதுகிறேன்.

பலாத்காரம், அதன் விளைவு இவற்றை மட்டும் நான் பரிசீலனை செய்து பார்ப்பேனாகில், (பலாத்காரத்தினால்) ஒரு ஜாதியார் கீழ்ப்படிந்து நடக்குமாறு கட்டாயப்படுத்தப்பட்டு, அப்படியே அவர்கள் கீழ்ப்படிந்து நடக்கிற வரையில் அவர்கள் நல்லதையே செய்கிறார்கள். ஆனால் அவர்கள், தங்களை பந்தத்தினின்று விடுதலை செய்து கொண்டு விடுவார்களானால், நிரம்ப நல்லதைச் செய்தவர்களாகிறார்கள். எந்த நியாயங் கொண்டு ஜனங்களுடைய சுதந்திரம் பறிக்கப்பட்டதோ அதே நியாயத்தைக் கொண்டு அந்த ஜனங்கள் தங்களுடைய சுதந்திரத்தை அடைவார்களானால், ஒன்று, அவர்கள் அப்படி அடைவது நியாயமாயிருக்க வேண்டும்; அல்லது அவர்களுக்குச் சுதந்திரமில்லாமற் செய்தது அநியாயமாயிருக்க வேண்டும். ஆனால் சமுதாய ஒழுங்கு என்பது ஒரு தெய்விக உரிமை; எல்லாவற்றிற்கும் அஸ்திவாரமாயமைந்திருப்பது. எனினும் இந்தச் சமுதாய ஒழுங்கு என்கிற தெய்விக உரிமை இயற்கையினின்று தோன்றுவதில்லை; சம்பிரதாயங்களைக் கொண்டுதான் இந்த ஒழுங்கு ஏற்படுகிறது. அப்படியானால் இந்தச் சம்பிரதாயங்கள் என்னவென்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அப்படித் தெரிந்து கொள்வதற்கு முன்னர், மேலே நான் கூறிய நியாயப் பிரமாணத்தை ஊர்ஜிதம் செய்ய வேண்டும்.

2. ஆதி சமுதாயங்கள்

உலகத்தில் தோன்றிய சமுதாயங்களில் மிகப் பழைய சமுதாயம் -இயற்கையான சமுதாயம்—குடும்பம். ஆயினும் ஒரு குடும்பத்திலே பிறந்த குழந்தைகள், தங்கள் தகப்பனிடத்தில், அந்தத் தகப்பன் தங்கள் போஷணைக்குத் தேவையாயிருக்கிற வரையில்தான் அன்பு செலுத்துகின்றன. தேவை முடிந்தவுடன் (தகப்பனுக்கும் குழந்தைகளுக்குமுள்ள) இயற்கை உறவு அற்றுப் போய் விடுகிறது. தங்கள் தகப்பனுக்குக் கீழ்ப்படிய வேண்டிய அவசியத்தினின்று குழந்தைகள் விடுதலை அடைந்தவுடனும், குழந்தைகளுக்காகத்தான் படுகிற கவலைகளினின்று தகப்பன் விடுதலை யடைந்தவுடனும், இரண்டு பேரும்—அதாவது தந்தையும் மக்களும்—சுதந்திரர்களாகி விடுகிறார்கள். அப்படி இரண்டு பேரும் சுதந்திரர்களாகி விட்ட பிறகு, ஒரே குடும்பத்தில் ஒன்று பட்டிருந்தால் அப்படி இருப்பது இயற்கையான உறவல்ல; பரஸ்பரம் ஒருவர்க்கொருவர் தாங்களே வலிய வைத்துக் கொண்ட உறவாகும். இருவரும் ஒரே குடும்பத்திலிருப்பது ஒரு சம்பிரதாயத்தின் பேரில்தான்.

தந்தையினின்று தனயன் பிறந்தவனாயிருந்தாலும், பின்னர் தந்தை வேறே தனயன் வேறே என்று பிரிந்து சம உரிமையோடு வாழ்கிறார்களல்லவா? இப்படி இரண்டு பேருக்கும் ஏற்பட்டிருக்கிற இந்தப்பொது உரிமையானது மனித சுபாவத்தின் விளைவு. மனிதனுடைய சுபாவமே என்னவென்றால், தன்னைத் தான் போஷித்துக் கொள்வதிலேதான், தன் கவனத்தையெல்லாம் அவன் செலுத்துகின்றான். தன்னுடைய போஷிப்புக்காக என்னென்ன கவலைகள் படவேண்டுமோ அவைகளைத்தான் படுகிறான். நன்மையிது, தீமையிது என்று நிர்ணயித்துக் கொண்டு, அதன்படி நடக்கக் கூடிய வயதடைந்தவுடன், தன்னுடைய போஷிப்புக்கு என்னென்ன சாதனங்களைக் கையாளலாம் என்பதை நிர்ணயித்துக் கொள்ளக் கூடிய ஒரு நிலைமைக்கு வந்து விட்டவுடன், அவன்—அந்த மனிதன்—தனக்குத் தானே எஜமானனாகிறான்.

அரசியல் காரணங்களினால் அமைந்த பிற்கால சமுதாயங்களுக்கு ஒரு பழைய நமூனா மாதிரி இந்தக் குடும்பம். சமுதாயத்திற்குத் தலைவன் அரசன்; குடும்பத்திற்கு எஜமானன் தந்தை. சமுதாயத்தில் எப்படிப் பிரஜைகளோ அப்படிப் போல் குடும்பத்தில் குழந்தைகள். எல்லோரும் பிறக்கும் போது சுதந்திரத்தோடும் சம அந்தஸ்தோடும்பிறக்கிறார்கள். பின்னர் தங்கள் நன்மைக்காகத்தான் தங்கள் சுதந்திரத்தை விட்டுக் கொடுக்கிறார்கள். வித்தியாசம் என்னவென்றால், குடும்பத்தில் தகப்பன் தன் குழந்தைகளின் பொருட்டுப் படுகிற கவலைகளுக்கு அந்தக் குழந்தைகளின் மீது அவன் செலுத்துகிற அன்பு ஈடுபடுத்தி விடுகிறது; ராஜ்யத்தில், அரசனுக்குத் தன் பிரஜைகளிடத்தில் ஏற்பட்டுள்ள அன்புக் குறைவை, ஜனங்களை நாம் ஆள்கிறோமென்று அவனுக் கேற்பட்டிருக்கிற மகிழ்ச்சியானது ஈடுபடுத்தி விடுகிறது.

ஆளப்படுவோருடைய நன்மைக்காகத்தான் மானிட அதிகாரமெல்லாம் வகுக்கப்பட்டிருக்கின்றனவென்பதை க்ரோஷியஸ்* மறுக்கிறான். இதற்கு உதாரணமாக அடிமை வழக்கத்தை அவன் எடுத்துக் காட்டுகிறான். உண்மையைக் கொண்டு உரிமையை நிலை நாட்டப் பார்ப்பதே அவனுடைய தர்க்க ரீதி. இதைவிட நியாயமான முறைகளை அவன் கையாளலாம். ஆனால் கொடுங்கோலர்களுக்கு அது சாதகமாயிருக்கும்.

அப்படியானால் க்ரோஷியஸினுடைய வாதத்தின் பிரகாரம், மானிட ஜாதியானது, ஒரு நூறு பேருக்குச் சொந்தமானதா, அல்லது இந்த நூறு பேரும் மானிட ஜாதிக்குச் சொந்தமானவர்களாவென்பது சந்தேகாஸ்பதமான விஷயம். அவன்—க்ரோஷியஸ்—முந்திய அபிப்பிராயத்தை—அதாவது மானிட ஜாதியானது ஒரு நூறு பேருக்குச் சொந்தமானது

* க்ரோஷியஸ்-Grotius 1583-1645, ஹாலந்து நாட்டிலே பிறந்த ஒரு சட்ட நிபுணன். டச்சு அரசாங்க சேவையில் ஈடுபட்டிருந்தவன். சர்வதேச சட்ட விவகாரங்களைப் பற்றிச் சிறந்த நூலொன்றெழுதி இவன் பிரசித்தி பெற்றான். இதற்கு De Jure Belli et Pacis என்று பெயர்.

என்கிற அபிப்பிராயத்தை—த் தழுவியே தன் நூலில் எழுதிக் கொண்டு செல்கிறான். இது தான் ஹாப்ஸ்‡ என்பவனுடைய கருத்துமாயிருக்கிறது. இந்த விதமாகப் பார்ப்போமானால் மானிட சமூகமானது, தனித் தனி எஜமானர்களுடைய கால் நடைக் கூட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அந்த எஜமானன் தன் கால் நடைக் கூட்டத்தைக் கண்காணித்து வருகிறான். ஏன்? அதனைக் கொன்று தின்பதற்காக.

எப்படி ஒரு கால் நடைக் கூட்டத்தின் எஜமானன், தன் கால் நடைகளை விட இயற்கையிலேயே மேம்பாடுடையவனாயிருக்கிறானோ, அப்படியே மனிதக் கூட்டத்தின் எஜமானனாகிய அரசனும், தனது ஜனங்களை விட இயற்கையிலேயே சிறந்தவனாயிருக்கிறான். கலிகுலா* என்ற ரோம சக்ரவர்த்தி யானவன் மேற்கண்ட உவமையை ஆதாரமாகக் கொண்டோ என்னவோ அரசர்களெல்லாரும் கடவுளர்கள்; அல்லது மனிதர்களெல்லோரும் மிருகங்கள் என்று வாதஞ் செய்ததாக பிலோ† என்பவன், தான் எழுதி வைத்துப் போன சரித்திரத்தில் குறிப்பிடுகிறான்.

கலிகுலாவின் தர்க்க நியாயமானது, ஹாப்ஸ், க்ரோஷியஸ் இவர்களுடைய தர்க்க நியாயத்தை ஒத்ததாகவே இருக்கிறது. இவர்களெல்லோருக்கும் முன்னரேயே அரிஸ்டாட்டல்¶ என்பவனும் இதே மாதிரிதான் சொல்லி விட்டுப் போனான். அதாவது, மனிதர்களிற் சிலர் அடிமைத் தொழில் செய்வதற்காகவே பிறந்திருக்கிறார்களென்பதும், மற்றவர்கள் ஆதிக்கஞ் செலுத்துவதற்காகவே பிறந்திருக்கிறார்களென்பதும் அரிஸ்டாட்டலின் கருத்து.

அரிஸ்ட்டாட்டல் சொன்னது சரிதான். ஆனால் அவன், காரியத்தைக் காரணமென்று தவறாகக் கொண்டு விட்டான். அடிமைத் தனத்திலே

ஹாப்ஸ்-Hobbs. 1588-1679. ஓர் ஆங்கிலேய தத்துவ ஞானி. கலீலியோ, ஜான்ஸன், பேகன், டெஸ்கார்ட்டெஸ் முதலிய பேரறிஞர்களின் நண்பன். இரண்டாவது சார்லஸ் மன்னன், இளவரசனாயிருந்த போது அவனுக்குக் கணித போதகாசிரியனாயிருந்தான். அரசியல் தத்துவங்களைச் சாஸ்திர ரீதியாக ஆராய்ச்சி செய்த ஆங்கில அறிஞர்களில் இவனுக்குப் பிரதம ஸ்தானம் உண்டு.

கலிகுலா—Caligula. கி. பி. 37லிருந்து 41 வரை, ரோம சக்ரவர்த்தியாயிருந்து ஆண்டவன். ரோமாபுரி வாசிகளைச் சித்திரவதை செய்தவன். ஜனங்கள், இவனுடைய கொடுமையைச் சகிக்க முடியாமல், இவனைக் கொலை செய்து விட்டார்கள்.

பிலோ—Philo. கிறிஸ்தவ சகத்திற்கு முந்தியே பிரசித்தியடைந்த ஒரு யூத ஞானி. கிரீஸ் தேசத்தில் பிறந்தவன். கி. பி. முதல் சகாப்தத்தில் கலிகுலா என்பவன் ரோம சக்ரவர்த்தியாக அரசாண்ட காலத்தில் தன்னைப் போல் ஓர் உருவச் சிலை நிர்மாணிக்கச் செய்து அதனையே யூதர்களனைவரும் வணங்க வேண்டுமென்று உத்திர விட்டான். இந்த உத்திரவை ரத்து செய்யுமாறு கேட்டுக் கொள்ள, பிலோ, ஒரு தூது கோஷ்டியின் தலைவனாக கி. பி 39-40ம் வருஷத்தில் ரோமாபுரிக்குச் சென்றான். ஆனால் இவன் முயற்சி பலிக்கவில்லை.

அரிஸ்டாட்டல்-Aristotle. கி. மு. 384-322. கிரேக்க தததுவ ஞானி. பிளாட்டோ என்பவனுடைய சிஷ்யன். மகா அலெக்ஸாந்தரின் போதகாசிரியன்.

பிறந்த ஒவ்வொரு மனிதனும், அடிமை வாழ்க்கையை நடத்தவே பிறக்கிறான். இது நிச்சயந்தானே. அடிமைகள், தங்கள் பந்தத்தில் எல்லாவற்றையும் இழந்து விடுகிறார்கள். பந்தத்தினின்று தப்பித்துக் கொள்ள வேண்டுமென்ற ஆசையைக் கூட இழந்து விடுகிறார்கள். எப்படி யுலிஸ்ஸெஸ்* என்பவனுடைய துணைவர்கள், தங்களுடைய மிருக சுபாவத்தைக் காதலித்தார்களோ அப்படிப் போல் இந்த அடிமைகளும் தங்கள் அடிமைத் தனத்தைக் காதலிக்கிறார்கிறார்கள். இயற்கையிலேயே சிலர் அடிமைகளாயிருக்கிறார்களென்று சொன்னால் அதற்குக் காரணம், இயற்கைக்குவிரோதமாகச்சிலர் ஏற்கனவே அடிமைகளா யிருந்ததுதான். முதன் முதலாக அடிமையானவர்கள், பலாத்காரத்தினால் அடிமைகளாக்கப் பட்டார்கள். அவர்களுடைய கோழைத்தனமானது, அவர்களை அந்த அடிமை பந்தத்திலேயே வைத்து விட்டது.

ஆதம் அரசனைப் பற்றியோ, அல்லது இந்தப் பூலோகத்தைத் தங்களுக்குள்ளேயே மூன்று பிரிவாகப் பகிர்ந்து கொண்ட மூன்று அரச குமாரர்களின் பிதாவான நோவா என்ற சக்ரவர்த்தியைப் பற்றியோ இங்கு நான் ஒன்றுஞ் சொல்லவில்லை. இப்படி நான் அடக்கமாயிருப்பது திருப்தி யளிக்குமென்றே நம்புகிறேன்.¶ ஏனென்றால், மேலே சொன்ன மூன்று அரச குமாரர்களில் மூத்த அரச குமாரனின் நேர் சந்ததியைச் சேர்ந்தவன் நான். எனது வமிசாவளியை நான் பரிசோதித்துப் பார்ப்பேனாகில் மானிட ஜாதியின் நியாயமான அரசனாக நான் ஏன் இருக்கக் கூடாது? இஃது எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும்.

---

* யுலிஸ்ஸெஸ்-Ulysses. கிரேக்கப் புலவனாகிய ஹோமர் என்பவன் எழுதி வைத்துப் போன ஒடெஸ்ஸே (Odyssey) என்ற காவியத்தின் கதாநாயகன். ஒடெஸ்ஸெஸ் (Odysseus) என்று கிரேக்கப் பெயரை, யுலிஸ்ஸெஸ் என்று ரோமர்கள் அழைத்தார்கள். இந்த யுலிஸ்ஸெஸ் என்பவனைச் சிறந்த வீரனாகவும் தேவர்களை விடச் சிறந்த அறிஞனாகவும் ஹோமர், தன் காவியத்தில் சிருஷ்டித்திருக்கிறான்.

¶ பில்மர் (Sir Robert Filmer 1589-1653) என்ற ஓர் ஆங்கிலேய அரசியல் வாதி, அரசர்கள் தெய்விக உரிமை படைத்தவர்கள் என்ற கொள்கையை நிர்த்தாரணம் செய்து ஒரு நூலெழுதியிருக்கிறான். இந்தத் தெய்விக உரிமையைத்தான் இங்கு ரூஸோ ஜாடையாகப் பரிகசிக்கிறான். பில்மரின் சித்தாந்தப் படி, ஆதம் என்கிற ஆதி மனிதனிடமிருந்து அரசியல் அதிகாரம் பிறந்தது. இந்த அதிகாரத்தை ஆதமுக்குக் கடவுளே அளித்தார். ஆதமிடமிருந்து அரசியல் அதிகாரமானது, தலைமுறை தலைமுறையாக வந்து கொண்டிருந்தது. இதனால் அரச உரிமையானது, தெய்விக சம்பந்தமுடையது என்பது பிலமரின் சித்தாந்தம். கிறிஸ்தவ வேதமாகிய பைபிளின் படி யுகப் பிரளயதிற்குப் பிறகு, உலகத்தில் நோவா என்ற மன்னனும் அவன் மூன்று மக்களுமே உயிரோடிருந்தார்கள் இந்த மூன்று மக்களுடைய சந்ததியார்தான் அரசர்கள். ஆகையால் அரசர்களுக்கு ஆளும் உரிமை எப்பொழுதும் உண்டு என்றும், மற்ற ஜனங்கள் இந்த இந்த உரிமையோடு பிறக்கவில்லையென்றும் பலவிதமாகத்தான் கட்சியை நிலைநாட்ட முயன்றான் பில்மர். இவன் கொள்கையைக் கண்டித்துப் பல நூல்கள், இவனுக்குப் பிற்காலத்தில் வெளிவந்தன.

ராபின்ஸன் † எப்படி, தான் வசித்த தீவில் தானே அரசனா யிருந்தானோ அப்படியே ஆதமும்—இந்த உலகத்தில் அவன் ஒருவன் மட்டுமா யிருந்த போது—இந்த உலகத்திற்கு அரசனா யிருந்தானென்பதை மறுப்பதற்கில்லை. அப்படிப்பட்ட அரசன், தன் சிங்காதனத்தின் மீது ஸ்திரமாக உட்கார்ந்திருந்ததோடு, எந்த விதமான கலகங்கள், யுத்தங்கள், சூழ்ச்சிக்காரர்கள் முதலியவைகளினால் பயப்படாதவனாகவுமிருந்தான் என்றால், அவனுடைய ஏகாதிபத்தியத்தின் நிலைமை திருப்திகரத்தக்க விஷயந்தானே.

† ராபின்ஸன் க்ரூஸோ—Robinson Crusoe. டேனியல் டீபோ(Daniel Defoe 1656-1731 என்ற ஆங்கிலப் புலவன் எழுதிய ஒரு நூலின் கதாநாயகன். இவனை ஒரு தனிக் காட்டு ராஜாவாகச் சிருஷ்டித்து, இந்த நூலை டீபோ எழுதி யிருக்கிறான்.

—

இவன்தான் ரூஸ்ஸோ

பிறந்தது-கி. பி. 1712

இறந்தது-கி. பி. 1778

—"தேவி தாசன்"

தமயனின் கடிதம்-12

(சென்ற வருடத்தோர் நாள் நமது வயல்புறம் போய்த் திரும்பினேன். விளைவற்றுக் கிடந்த வயலைக் கண்டு, பசிப்புயல் உந்த வந்து கொண்டிருந்தேன். இடையே ஒரு சூருவளி கிளம்பிற்று உள்ளத்தே ஓர் குஷி பிறந்தது, குஷி வெறியில் கீழ்க் கண்ட பாட்டைப் பாடிக் கொண்டு வழி நடந்தேன்),

சுற்றிச் சுழன்றடி சூறவளியே!
சோர்வற்றுத் தமிழரெழச் ,,
சற்றுழைப் பற்றுஇல்லைச் ,,
சார்ந்துள்ளார் அலறவடி ,, 1.

தப்பைகளாய்ப் போனவற்றைச் சூறவளியே!
கொண்டுதள்ளு வேலையிலே ,,
தப்புதண்டாக் காரர்களைச் ,,
தலைகீழாய் மாற்றியடி ,, 2.

லஞ்சம்லாங்தும் வஞ்சகரைச் சூறவளியே!
ஒரு லாகவமாய்த் தூக்கியெறி ,,
அஞ்சியஞ்சி வாழ்பவர்க்குச் ,,
ஆற்றலமு தளித்தாராய் ,, 3.

படார்படா ரென்றடி தூருவளியே
பகைவினை மாந்தர்வீழ ,,
தடார்தடா ரென்றுதாக்கு ,,
தன்னலத் தார்தவிக்கச் ,, 4.

பாழ்மனைகள் இடிந்து வீழச் சூறவளியே!
பாய்ந்து பாய்ந்து சுழன்றடி ,,
வாழ்மனைகள் சிறக்க வேண்டு ,,
வருவாயந்து தென்றலாகிச் ,, 5.

அச்சம் தீர்கவடி சூறவளியே!
ஆண்மை வளர்கவடி ,,
கொச்சைகள் நடுங்கவடி ,,
கோடையிடி யெனக்குமுறு ,, 6.

வறுமைத் துயர்ப் பிணியைச் சூறவளியே!
வாரிப்போ வாரிதிக்கே ,,
பெருமை நலன்களினி ,,
பெற்று நீ வந்து கொட்டு ,, 7.

மேலை நாட்டுச் செல்வங்களைச் சூறவளியே
மிகைபடக் கொண்டுவாராய் ,,
பாலிகர் தமிழ் மொழியைச் ,,
பாரிலெங்கும் பரப்பிடு ,, 8.

——வ. பார்த்தசாரதி.

நல்ல காரியத்துக்கு நாலாயிரம் விக்கினம்

மகனே! இப்பொழுது உலகத்தில் விஞ்ஞானம் எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி யடைந்திருக்கிற தென்பது உனக்குத் தெரியும். கட்டை வண்டியில் மணிக்கு நான்கு மைல் விகிதம் சென்று கொண்டிருந்த நாம், இப்பொழுது மணிக்கு 250 மைல் விகிதம் ஆகாய விமானத்தில் செல்கிறோம். விளக்கெண்ணெய் விளக்கில் குனிந்து படித்துக் கொண்டிருந்த நாம் இப்பொழுது பிரகாசமான மின்சார விளக்கின் கீழ் இரவு பகலாகப் படிக்கிறோம். இப்படி எத்தனையோ மாற்றங்கள் நமது தலைமுறையிலேயே ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் இந்த விஞ்ஞான வளர்ச்சிக்கு ஆதி காரணர்களாயிருந்தவர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறார்கள் தெரியுமா? தாங்கள் எண்ணியதை வெளியில் சொல்லவோ, அல்லது கண்டு பிடித்த நூதன விஷயங்களை அல்லது, கருவிகளை வெளியிற் காட்டவோ இவர்களுக்குச் சுதந்திரம் கொடுக்கப்படவில்லை அந்தக் காலத்தில். அப்படி பொது ஜன அபிப்பிராயத்தை மீறி இவர்கள் ஏதேனும் புதிய கொள்கைகளை அல்லது தத்துவங்களை வெளியிட்டால் அதற்காக இவர்கள் மரண தண்டனை யடைந்திருக்கிறார்கள். ஆனால் அதற்காக இவர்கள் கவலைப்படவே யில்லை. மரணத்தை ஒவ்வொரு நிமிஷமும் எதிர் பார்த்தே இவர்கள் காரியங்களைத் துணிச்சலாகச் செய்து கொண்டு வந்திருக்கிறார்கள்.

கி. பி. பதினாறாவது நூற்றாண்டில் கலீலியோ என்ற ஓர் இத்தாலிய வான சாஸ்திரி இருந்தான். இவன் தூரதிருஷ்டிக் கண்ணாடி யொன்றைக் கண்டு பிடித்து அதன் மூலமாக அநேக புதிய நட்சத்திரங்களை நிர்த்தாரணம் செய்தான். இன்னும், சூரியனைச் சுற்றி பூமி வலம் வருகிற தென்பன போன்ற அநேக நூதனக் கொள்கைகளை வெளியிட்டான். ஆனால் இந்தக் கொள்கைகள், அந்தக் காலத்து அறிஞர்கள் கொண்டிருந்த நம்பிக்கைக்கு விரோதமாயிருந்தன. இதனால் இவனை ரோமாபுரிக்கு வரவழைத்து விசாரித்தனர் பாதிரி மடத்துத் தலைவர்கள். என்ன கொடுமை! பாதிரிமார்களின் கோபத்துக்கும் தண்டனைக்கும் அஞ்சினவனாய்; தான் நிர்த்தாரணஞ் செய்த கொள்கையை வாபீஸ்வாங்கிக் கொண்டான் கலீலியோ. அந்தோ! என்ன அநியாயம்! ஆனால் இப்பொழுது கலீலியோவின் சித்தாந்தந்தான் சரியென்று சிறு குழந்தைகளும் ஒப்புக் கொள்ளுகின்றனவல்லவா?

கலீலியோவுக்குப் பிறகு கெப்ளர் என்ற ஒரு வான சாஸ்திரி இத்தலியில் இருந்தான். இவனும் வான சாஸ்திர சம்பந்தமாக அநேக நூதன விஷயங்களைக் கண்டு பிடித்தான். அநேக நூல்கள் எழுதினான். ஆனால் இவன் என்னென்ன துன்பங்களுக் குட்பட்டான்! இவன் நூல்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. எழுபத்தொன்பது வயது நிறைந்த இவனுடைய

தாயார் சிறையில் வைக்கப்பட்டுத் துன்புறுத்தப்பட்டாள். கடைசியில் இவன் மூளை வியாதியால் இறந்து போனான்.

கொலம்பஸின் கதைதான் உனக்குத் தெரியுமே! அமெரிக்காவைக் கண்டு பிடிக்கும் பொருட்டு அவன் எவ்வளவு கஷ்டப்பட்டான்!

ஒரு லட்சியத்திற்காகத் தங்களையே அர்ப்பணஞ் செய்து விடுகிறார்கள் அநேக மகான்கள். பழைய காலத்து விஞ்ஞானிகள், புதிய நாடுகளைக் கண்டு பிடித்தவர்கள், பிற நாடுகளில் நாகரிகத்தைக் கொண்டு புகுத்தியவர்கள், இவர்களெல்லோரும் யாரென்று நினைக்கிறாய்? மானிட சமுதாயமானது, தன்னம்பிக்கை இழந்து நிற்கிற காலையிலே 'ஏ, மானிட சமுதாயமே! இவ்வளவு சீக்கிரத்தில் நம்பிக்கை இழந்து விடலாமா?' என்று சொல்லிக் கொண்டே அதனைக் கை தூக்கி விடுகிறவர்கள். சத்தியத்திற்காகவும், தருமத்திற்காகவும், தேசாபிமானத்தை முன்னிட்டும் இவர்கள் உழைத்தார்கள். ஒரு லட்சியத்திற்காக உழைக்கிறோமென்பதில்தான் இவர்கள் திருப்தி யடைந்தார்கள். தங்களுடைய சுய நன்மையைப் பற்றி ஒரு விநாடியும் இவர்கள் சிந்தித்ததில்லை. சாதாரணமாக எல்லா மகான்களும் இந்தப் பிரபஞ்சத்திலே தாங்கள் செய்ய வேண்டிய வேலை யிது என்பதை மட்டும் தெரிந்து கொண்டு அதிலேயே தங்களை ஈடுபடுத்திக் கொண்டு விடுகிறார்கள். இதற்கிடையில் இவர்கள் அநேக அவமானங்கள் அடையலாம்; அநேக சங்கடங்கள் படலாம்; ஆனால் எல்லாவற்றையும் தைரியமாகச் சமாளிக்கிறார்கள். இவர்கள் இறந்து போகிறார்கள்; ஆனால் இவர்களுடைய ஆத்மா, கோடிசூரியப் பிரகாசம் போல் பிரகாசிக்கிறது. தங்களுடைய பின் சந்ததியாருக்கு அழியாத ஒரு பேரை வைத்துப் போகிறார்கள். அதனால் மானிட சமுதாயமே நன்மை யடைகிறது.

இவர்கள் கஷ்டப் படுவதிலே கூட அநேக நன்மைகள் இருக்கின்றன. ஏனென்றால் ஒரு மனிதன் கஷ்டப் படுகிற போதுதான் அவனிடத்திலே அடங்கியுள்ள அறிவு, சுய முயற்சி, ஊக்கம், தளராத நம்பிக்கை முதலியனவெல்லாம் வெளியே வருகின்றன. ஒருவன் அடைகிற புகழைக் காட்டிலும் அவனுக்கு ஏற்படுகிற துன்பங்களைப் பொறுமையோடு, மௌனமாகச் சகித்துக் கொள்கிறானே அதுதான் அவனுக்குப் பெருமையைக் கொடுக்கிறது. அவன் வயிற்றுப் பட்டினியால் சோர்ந்து போகலாம்; மற்றவர்கள் செய்யும் அவமானங்களினால் அவன் தற்காலிகமாகத் தலை குனிந்து கொண்டிருக்கலாம்; அவனுடைய குடும்ப வாழ்க்கையே சீரழிக்கப் பட்டு விடலாம். ஆனால் அவன் நம்பிக்கையை மட்டும் இழப்பதேயில்லை. மஹாராணா பிரதாபஸிம்மன் சுமார் இருபத்தைந்து வருஷ காலம் ஆரவல்லி மலைக் காடுகளில் நாடிழந்து வறுமைக் கோலத்துடன் மனைவி மக்களோடு வாழ்ந்திருந்தான். எத்தனையோ சங்கடங்களைப் பட்டான். ஆனால் நம்பிக்கையை மட்டும் அவன் இழந்தே விடவில்லை. நம்பிக்கையிலேதான் எந்த மகானும் தன் கவலைகளை மறக்கிறான். அந்த நம்பிக்கைதான் அவனுக்குப் புன் சிரிப்பைத் தருகிறது. கவலையாகிற பெருஞ்சுமை அவன் தலையை

இறுக்கிக் கொண்டிருந்த போதிலும் அவன் நிமிர்ந்துதான் நடக்கிறான். தெரியாமலா மில்ட்டன் என்ற கவிஞன் கூறுகிறான், "எவனொருவன் அதிகமான கஷ்டத்தையடைகிறானோ அவனால்தான் அதிகமான நன்மையைச் செய்ய முடியும்" என்று.

யுத்தகளத்தில் எவனொருவன் பொறுமையோடு தனக்கு நேரிடும் கஷ்டங்களைச் சகித்துக்கொண்டு மேல் நோக்கிச் செல்கிறானோ அவன்தான் வீரன். ஒருவனுக்குப் பத்து எதிரிகளைத் தாக்கிக் கொல்ல, சக்தியிருக்கலாம். ஆனால் அதே பத்து பேர் அவனை வந்து தாக்குகிற போது அவன் மிரண்டு போய் பின் வாங்கலாம். அப்படிப்பட்டவனை வீரனாக எப்படிச் சொல்ல முடியும்? அவனை வெறும் பலசாலி என்று மட்டும் சொல்லலாம். வீரனென்று சொல்ல முடியுமா? வீரர்கள் எப்பொழுதுமே தங்கள் லட்சியத்திற்காகப் போராடுகிறவர்கள். அவர்கள் போனாலும் அவர்களுடைய லட்சியம் காப்பற்றப்படும்.

முன்னொரு காலத்தில் பர்ஷியா தேசத்துப் பிரபல மன்னனாகிய ஜெர்க்ஸஸ் (Xerxes) என்பவன் கிரீஸ் தேசத்தின் மீது படையெடுத்தான். லியோனிதாஸ் (Leonidas) என்பவனுடைய தலைமையில் கிரேக்கர்கள் இந்தப் பர்ஷியப் படையை எதிர்த்தார்கள். இரு சார்பினருக்கும் தெர்மாபலி (Thermopylae) கணவாயில் ஒரு கோர யுத்தம் நடைபெற்றது. கிரேக்க இதிகாசத்தில் இந்த தெர்மாபலி யுத்தம் மிகப் பிரசித்தமானது. இதைப்பற்றி கிரேக்க அறிஞர்கள் அனேக நூல்கள் இயற்றியிருக்கிறார்கள்; காவியங்கள் பாடியிருக்கிறார்கள். இந்த யுத்தத்தில் லியோனிதாஸூம் அவனுடைய கிரேக்கப் படை வீரர்களும் அழிந்து போனார்கள். ஆனால் கிரீஸ் தேசம் காப்பாற்றப்பட்டது.

ஒரு தேசம் அதன் விஸ்தீரணத்தினால் பெருமையடைவதில்லை. அந்தத் தேசத்து ஜனங்களுடைய உயர்ந்த மனப் பான்மையினால்தான் அது பெருமையடைகிறது. சிலர், தங்களுக்குச் சுதந்திரம் வேண்டுமென்று கதறுகிறார்கள். ஆனால் அந்தச் சுதந்திரத்தை அடைவதற்கோ அல்லது அதனை அநுபவிப்பதற்கோ அவர்கள் எந்த விதத்திலும் தங்களைத் தகுதிப் படுத்திக் கொள்வதில்லை. சுதந்திரம், சுதந்திரம் என்று வெறுங் கூச்சல் போடுகிறார்கள். வெறுங்கூச்சல் போடுவதினால் மட்டும் சுதந்திரம் வந்து விடுமா? தியாகம் செய்ய வேண்டாமா? சத்திய வாழ்க்கையை நடத்த வேண்டாமா? சுதந்திரத்தின் மீது உண்மையான காதல் கொள்ள வேண்டாமா? அப்படி ஒரு தேசத்திலே சுதந்திரத்திற்காக, தரும வாழ்க்கையை, சத்திய மார்க்கத்தைக் கடைப் பிடிக்கிறவர்கள் ஒரு சிலர்தான். அவர்கள்தான் மகான்கள். அவர்களுக்குத்தான் அதிகமான கஷ்டங்கள் ஏற்படுகின்றன. அவர்கள் இந்தக் கஷ்டங்களைச் சகிப்புத் தன்மையுடன் ஏற்றுக் கொள்வதன் மூலமாகவே, அந்தத் தேசம் வாழ்கிறது.

நல்ல காரியத்திற்கு நாலாயிரம் விக்கினங்கள் என்பார்கள். மகான்கள் இந்த நாலாயிரம் விக்கினங்களையும் புன் சிரிப்போடு கடந்து செல்கிறார்கள்.

—"வராகன்"

மானிட சமுதாயத்தில் சில வளர்ச்சிகள்

மனித சமுதாயம் இந்த உலகத்திலே ஜீவித்திருக்க வேண்டுமானால், அதனுடைய உபயோகத்திற்குத் தேவையான சில பொருள்களை உற்பத்தி செய்து கொண்டிருக்க வேண்டியது மிக மிக அவசியமாகிறது. அவ்விதம் செய்யப்படும் பொருள்கள், அவை எந்தப் பொருள்களாயிருந்தாலும் சரியே, அவற்றை உற்பத்தி செய்வதற்கு வேறே இரண்டு வகையான பொருள்கள் தேவையாயிருக்கின்றன. ஒன்று, இயற்கையாகவே உண்டாகியிருக்கிற, பூமி, தண்ணீர், மரம் முதலியன. மற்றொன்று மனிதனுடைய உழைப்பு. இவைகள் இல்லையேல், எந்த உபயோகப் பொருளையும் உற்பத்தி செய்ய முடியாது. அவ்விதம் உற்பத்தி செய்ய முடியாத போது, மனித சமுதாயம் ஜீவித்திருக்கவும் முடியாதல்லவா? மேலே கூறப்பட்ட அந்த இரண்டு விதமான பொருள்களின் கூட்டுறவாலேயே, அதாவது இயற்கை சம்பந்தப்பட்ட பூமி, தண்ணீர், மரம் முதலியனவுடையவும், மனிதனுடைய உழைப்பினுடையவும் சம்பந்தத்தினாலேயே, மனித சமுதாயம் ஜீவித்திருப்பதற்குத் தேவையான பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவ்விதம் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை, மனிதன், அந்தந்தக் காலத்திலேயே உபயோகித்து முடித்து விடுகிறான்; அல்லது தன்னுடைய எதிர்கால வாழ்க்கைத் தேவைக்காக அவற்றில் சிலவற்றை மிச்சப் படுத்தியும் வைத்துக் கொள்கிறான். இவ்விதம் மிச்சப்படுத்தி வைக்கும் பொருள்கள், அந்த மனிதனுடைய எதிர் காலப் பொருள் உற்பத்தி முயற்சிக்கு உதவியாக அமைகின்றன. ஒரு மனிதன் தன்னுடைய கையின் உதவியால் ஒரு நாள் பூராவும் ஐந்து வீசை பழங்களைப் பறிக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். ஆனால் அந்த மனிதன், இப்போது தன்னுடைய கைகளோடு ஒரு தடியையும் சகாயமாக உபயோகிக்க ஆரம்பிப்பானாகில், முன்னைப் பார்க்கிலும் இப்போது நாள் ஒன்றுக்குப் பத்து வீசை பழங்களைப் பறிக்க முடிகிறது. அப்படியானால் தன்னுடைய கைகளின் உதவியால் மட்டும் ஐந்து வீசை பழங்களைப் பெற்ற மனிதன், இப்பொழுது ஒரு தடியின் உதவி கொண்டு பத்து வீசைப் பழங்களைப் பெற்றுவிட முடிகிறது என்பதை நாம் தெரிகிறோம். இங்கு நாம் கவனிக்க வேண்டியது யாதெனில், பழங்களைப் பறிப்பதற்கு அந்த மனிதன் உபயோகிக்கும் தடியானது, ஏற்கனவே அவனுடைய உழைப்பால் கிடைத்து, தன்னுடைய எதிர்கால வாழ்க்கையின் பொருள் உற்பத்திக்குச் சகாயமாய் மிச்சப்படுத்தி வைக்கப்பட்ட பொருள் ஆகும் என்பதே. இதனால், இவ்விதம் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களைப் பங்கிடும் போது ஒரு பங்கு அந்த மனிதனுடைய உழைப்புக்கும், மற்றொரு பங்கு அவன் சகாயமாய் உபயோ

கித்த தடிக்கும் கிடைக்குமாறு செய்ய வேண்டும். மேலே கூறப்பட்டிருக்கிற உதாரணப்படி, மனிதன், தான் உபயோகித்ததுபோக, தன்னுடைய எதிர்கால வாழ்க்கைத் தேவையின் உற்பத்திக்குச் சகாயமாய் மிச்சப்படுத்தி வைக்கும் பொருள், 'மூலதனம்' என்ற பெயரைப் பெறுகிறது. இவ்விதமாக மனிதனுடைய உழைப்பும், மூலதனமும், அவனுடைய எதிர்கால வாழ்க்கைச் சாதனங்களாய் அமைகின்றன.

உற்பத்திப் பொருள்களைப் பெருக்குவதற்கு மூலதனம் மனிதனுக்கு மிக மிக உதவியாயிருக்கிறது. இதனாலேயே மூலதனத்திற்கு அதிகப் பெருமை. பொருள் உற்பத்திக்குச் சகாயமாயிருக்கும் இந்த மூலதனத்தை மேலும் மேலும் விஸ்தரிப்பதற்கான முழு உரிமையும் அந்த மூலதனத்தை யுடைய முதலாளிக்கு இருக்க வேண்டியது அவசியம். ஒரு மனிதனுக்கு லாபத்தின் மூலமாகப் பணத்தைச் சம்பாதிப்பதற்கு உரிமையிருக்குமானால் அவன் மேலும் மேலும் அந்த வகையில் பெரும் பிரயாசையெடுத்துக் கொள்ள முடியும். சமூகத்தினுடைய லாபத்திற்காக அவன் புதிய தொழிற் சாலைகளைச் சிருஷ்டிக்கிறான்; புதிய புதிய வகையில் முயலுகிறான். மூலதனத்தைப் பெருக்குவதற்குச் சுதந்திரம் இருந்தால்தான் சமூகம் சுபிட்சமாயிருக்க முடியும். ஏனெனில் சமூகத்திற்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்வதற்குச் சகாயமாயிருப்பது மூலதனம் அல்லவா? இவ்விதம் தன்னுடைய தேசத்திலே மூலதனத்தை விஸ்தரிப்பான் வேண்டி, மற்ற அந்நிய தேசங்களில் வியாபாரம் செய்ய வேண்டியது அவசியமாகிறது. இந்த மூலதனத்தின் உதவியாலே, கலை, நாகரிகம் முதலிய துறைகளில் முன்னேறும் தேசமானது, தன்னுடைய தேச ஜனங்களின் பிழைப்பை முன்னிட்டு, அங்குத் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களைக் கொண்டு போய் மற்ற தேசங்களில் விற்க வேண்டிய தேற்படுகிறது. இப்படி விற்க வில்லையேல் அந்தத் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் ஆயிரக் கணக்கான தொழிலாளிகளுக்கு வேலை கிடைப்பது அரிதாகி விடும். இன்னும் ஒன்றையும் நாம் இங்குக் கவனிக்க வேண்டும். இவ்வித முதலாளித்துவ தேசங்களுக்கு, தங்களுடைய தொழிற்சாலைகளில் எந்த நேரமும் குறைவின்றி வேலை நடந்து கொண்டிருப்பதற்காக மூலப் பொருள்கள், அதாவது, பண்டமாகாத பஞ்சு முதலிய—மூலப் பொருள்கள் அவசியமா யிருக்கின்றன. இந்த மூலப் பொருள்கள் எந்த தேசத்தில் அதிகமாகக் கிடைக்கிறதோ அங்கு அவற்றைப் பெறுவதற்கு முயற்சிக்கப்படுகிறது. இவ்விதம் தங்களுடைய தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மூலப் பொருள்களைப் பெறுவதற்கும், அவற்றில் உற்பத்தி செய்த பண்பட்ட பொருள்களை விற்பனை செய்வதற்கும் இந்த முதலாளித்துவ தேசங்கள், இதர தேசங்களை தங்களுடைய குடியேற்ற நாடாகவோ, அல்லது அடிமை நாடாகவோ ஆக்கிக் கொள்ளுகின்றன. இந்த முதலாளித்துவ தேசங்களுக்கு தங்களுடைய லாபத்திலேதான் குறி. ஆதலால் அவைகள் தங்களுடைய ஆதினத்திற்குட் பட்டிருக்கும் நாட்டின்.

நாகரிகம், வியாபாரம் முதலிய முன்னேற்றத் துறைக்கு ஒரு எல்லை கட்டி விடுகின்றனா. அதாவது தங்களுடைய தேசத்தின் தொழிலுக்கும் வியாபாரத்திற்கும் ஹானி ஏற்படாத அந்த எல்லை வரை.

இந்த விதமாக, முதலாளித்துவ நாடுகள் தங்கள் தங்களுடைய வியாபாரத்தை விருத்தி செய்ய முனையுமேயானல் இங்கு ஒரு பிரச்னை கிளம்புகிறது. இவைகளினுடைய வியாபார விருத்தியால் உலகத்திற்கு சுபிட்சமுமில்லை. இதோடு மற்ற நாடுகள் தங்களுக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்து கொள்வதற்கும் வகையில்லாது போகிறது. இவ்விதம் மூலப் பொருள்களைப் பெறுவதற்கும், செய் பொருள்களை வியாபாரம் செய்வதற்கும் ஏற்ற ஸ்தலமாயிருக்கும் தேசங்களை, இந்த முதலாளித்துவ தேசங்கள், தங்களின் ஆதீனத்திற்குட் படுத்தும் வகையிலோ, அல்லது தங்களுக்குள் பிரித்துக் கொள்ளும் வகையிலோ யுத்தம் ஏற்படுவது தடுக்க முடியாததாக அமைகிறது. இதைத்தான் ஒரு பிரச்னை யென்று நாம் மேலே குறிப்பிட்டோம். எந்த முதலாளித்துவ நாடானது வியாபாரத் துறையில் கொஞ்சம் முன்னேற்றம் அடைந்து, தன்னுடைய வியாபார ஸ்தலங்களை அதாவது இதர தேசங்களைத் தன்னுடைய ஆதீனத்திற் குட்படுத்துவதில் முந்திக் கொண்டதோ, தன்னுடைய சாம்ராஜ்யத்தை விஸ்தரித்துக் கொண்டதோ அந்த நாடானது, தன்னுடைய நிலைமையில் எந்த விதமான மாறுதலையும் விரும்புவதில்லை. அப்படி யேதேனும் மாற்றுவதற்கான முயற்சிகள் நிகழுமானல், அது யுத்தத்திலும் கொலையிலுந்தான் முடிகிறது. இந்த முதலாளித்துவ தேசங்களில், எந்த நாட்டிற்கு, தன்னுடைய வியாபாரத்தைச் செய்யவும், மூலப் பொருள்களைப் பெறவும் வசதியாக அடிமை நாடுகள் இல்லையோ அந்த நாடானது என்ன கூறுகிறது தெரியுமா? நானும், என் நாட்டு மக்களும் இந்த உலகத்திலே வாழ வேண்டும்; நாங்களும் முன்னேற வேண்டும்; ஆனதால் எனக்கும் அதற்கு அதிகாரம் வேண்டும் என்று மார் தட்டுகிறது. இன்னமும் அந்தத் தேசம் தன்மக்களைப் பார்த்து என்ன கூறுகிறது? நாம் வாழ வேண்டுமானல் யுத்தந்தான் செய்ய வேண்டும் என்றும் கூறுகிறது! ஏற்கனவே தன்னுடைய சாம்ராஜ்யத்தை விஸ்தரித்திருக்கும் தேசமானது, தான் விஸ்தரித்திருக்கும் சாம்ராஜ்யத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக யுத்தம் செய்து தீரவேண்டியது அவசியமாக முடிகிறது. அது தன்னுடைய சாம்ராஜ்யத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, தன்னுடைய தேசத்திற்கும், தன்னுடைய சாம்ராஜ்ய தேசத்திற்கும் இடையிலுள்ள போக்கு வரவுப் பாதைகளையும் தன்னுடைய ஆதிக்கத்தின் கீழ் வைத்துக் கொள்ள வேண்டியது அதற்கு அத்தியாவசியமாகிறது.

முதலாளித்துவக் கொள்கையினுலும், உலகத்திலே சமாதானத்தை நிலை நாட்டி விடலாமென்று முதலாளித்துவக் கொள்கை யுடையவர்கள் நம்புகின்றனர். அதற்கு உபாயமாக பெரிய பெரிய சாம்ராஜ்யங்கள் தங்களுக்குள் ஒரு ஒப்பந்தத்தை யேற்படுத்தி, பலஹீனமான நாடுகளைத்

தங்களுக்குள் பங்கு போட்டுக் கொண்டு, அந்த ஒப்பந்தப்படி, பிரித்துக் கொண்ட தேசங்களில், தகுந்த வாறு இடமும், வசதியும் ஏற்படுத்தி விடலாமென அவர்கள் கூறுகிறார்கள். இவர்கள் இவ்விதம் தங்களுக்குள் ஒப்பந்தம் செய்து பங்கு போட்டுக் கொள்வதனால் உலகத்திலே யுத்தமே யில்லாமல் சமாதானத்தை நிலை நாட்டி விட முடியுமா? முடிகிறதா? இப்படி ஒப்பந்தம் செய்து கொண்ட பிற்பாடு, எந்த தேசத்தினுடைய பொருள் உற்பத்தி அதிகரித்து விடுகிறதோ, அல்லது ஜனங்கள் ஜாஸ்தியாகிறார்களோ அதற்குத் தகுந்தவாறு, அதாவது, அதைச் சமாளிப்பதற்காக, தனக்குக் கிடைத்திருக்கும் இடங்களைத் தவிர வேறே நாடுகளை அது தேட ஆரம்பிக்கிறது. அப்படியானால் திரும்பவும் யுத்த கோஷந்தான்!

யுத்தம் வராமல் தடுப்பதற்கு இன்னொரு முறையும் அவர்களால் கூறப்படுகிறது. அதாவது, தேசியம், தேசீயம் என்ற குறுகிய மனப்பான்மையை ஒழித்துவிடவேண்டும்; எல்லா முதலாளித்துவ தேசங்களுக்கும், எந்த ஒரு நாட்டிலும், வியாபாரம் செய்யவோ, பூரணலாபம் பெறவோ சுதந்திரம் வேண்டும் என்று கூறப்படுகிறது. இந்த முறையும் எதிலே கொண்டு போய் விடுகிற தென்பதை ஆராய்வோம். முதலாளித்துவக் கொள்கையில், லாபம் சம்பாதிப்ப தென்பது அடிப்படையான விஷயம். இந்த லாபம் பெறுவதில் போட்டி யேற்படுகிறது. இந்தப் போட்டியில் நிலைக்க முடியாத சின்ன வியாபாரிகள் நசுங்கிப் போகிறார்கள். பலமுள்ள தேசத்தின் முதலாளிகளாலும் வியாபாரிகளாலும் நடத்தப் படும் அந்த தேச சர்க்கார், தன்னுடன் போட்டியிடும் மற்ற முதலாளித்துவ தேசத்திற்குப் போக்குவரத்துப் பாதைகளை அடைத்து தன்னுடைய சர்வாதிகாரத்தை நிலை நாட்ட முயற்சிக்கிறது. இந்த முயற்சியின் பரிணாமம் என்ன? யுத்தந்தான். இதனால் நாம் என்ன தெரிகிறோ மென்றால் முதலாளித்துவக் கொள்கையின் வளர்ச்சி யுத்தமே. யுத்தமும் போராட்டமும் அந்தக் கொள்கையோடு பின்னிக்கிடப்பவை. சென்ற கால உலக சரித்திரம்—ஆம், நம்கண் முன்னேகிடக்கும் அந்த உலக சரித்திரத்திலிருந்து—நம்முடைய கண்களுக்கு இவைதான் காட்சியளிக்கின்றன. இந்த முதலாளித்துவ வாதிகள் ஓயாமல், 'மனிதத்தன்மை, சமூகம, தேசம், உலகம் இவற்றின் முன்னேற்றத்திற்காக, ஒவ்வொரு மனிதனுக்கும், தன்னுடைய வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்குச் சுதந்திரம் இருக்க வேண்டும். இவ்வித சுதந்திரமின்றேல் மனிதன் தன்னுடைய நாகரிகத்தை விருத்தி செய்ய முடியாது. தனி மனிதனுக்குச் சுதந்ரம் கட்டுப்படுத்தப்பட்டால், அவன் வேலை செய்வதற்கிருக்கும் இச்சை, பலம் இவை குறைந்து போகும்' என்று கூறுகிறார்கள்.

அபேதவாதம்

'எல்லா மனிதர்களுக்கும் இந்த உலகத்திலே வாழ உரிமை யுண்டு; ஆதலின் அவர்களுடைய வாழ்க்கைத் தேவைக்குரிய சாதனங்கள் சமமாக அவர்களுக்குக் கிடைக்க வேண்டும்' என்ற கொள்கை இன்று நேற்றுப் பிறந்ததன்று; அதுவும் ஒரு நாட்

டுக்கு மட்டும் உரியதுமன்று. அது ஒரு பழைய காலக் கொள்கை. பல தேசத்திற்கும் பொதுவானது. எந்த தேசத்தின் வாயினின்றும் இந்த உச்சரிப்பை நீங்கள் கேட்கலாம். இதனாலேதான் 'சம்பத்து ஒரு திருட்டு' என்று பிரெஞ்சு தேசத்தின் விஞ்ஞானி ப்ராவுடன் என்பவர் ஒரு சமயம் கூறினார்.

அறிஞர்களுடைய எண்ணத்திலே மிதந்து கொண்டிருந்த மேற்கண்ட சித்தாந்தத்தை, விஞ்ஞான ரூபமாக ஆராய்ச்சி செய்து ஒரு திட்டமான முறையை வகுத்தவர் கார்ல் மார்க்ஸ் என்னும் பேரறிஞர்தான். அவருடைய முடிவைக் கொஞ்சம் இங்கு ஆராய்வோம்.

சொத்து, அல்லது உடைமை என்று கூறுகிறார்களே அது என்ன? அது எப்படிக் குவிகிறது? சொத்து என்பது உழைப்பாளிகளுடைய உழைப்பின் பலன். அவர்களுடைய உழைப்பின் பலனைப் பூராவும் அவர்கள் அனுபவிக்க விடாது, உயிர் வாழ்வதற்கு அவர்களுக்கு எவ்வளவு தேவையோ அதைமட்டும் அவர்களுக்குக் கொடுத்து விட்டு பாக்கி பூராவையும் எடுத்து விடுவதனால்தான் சொத்து குவிகிறது. இந்தக் கொஞ்சமும் அவர்களுக்குக் கொடுக்கவில்லையானால் மறு நாளைக்கு அவர்கள் வேலை செய்ய லாயக்கற்றவர்களாகி விடுவார்களல்லவா! தேனீயை நாம் யாவரும் அறிவோம். அது தேனைச் சேகரிக்கிறது. ஆனால் அந்தத் தேனை அது மட்டும் குடிக்கிறதா? கொஞ்சத்தைக் குடிக்கிறது. பாக்கித் தேன் பூராவும் மனிதர்களிடம் சேர்கிறது. இதே மாதிரி உழைப்பாளிகளாகிய விவசாயிகளும், தொழிலாளிகளும் பொருள்களை உற்பத்தி செய்கிறார்கள். அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களில், உயிர் வாழ்வதற்காகக் கொஞ்சம் அவர்களுக்குக் கிடைப்பது போக பாக்கி பூராவும் முதலாளிகளுடைய கைக்குப் போய்ச் சேர்ந்து விடுகிறது. இந்த முறைப்படி லட்சக் கணக்கான உழைப்பாளிகளினுடைய உழைப்பின் பலன் சில பேருடைய கையில் போய்ச் சேருகிறது. இந்த முறை இந்த உலகத்திலே நீடித்திருக்கிற வரை லட்சக் கணக்கானவர்கள் பரம தரித்திரர்களாகவும், சில பேர் தனவந்தர்களாகவுமே இருப்பார்கள்.

லாபத்திலேயே குறியாயுடைய அந்த முதலாளிகள் மேலும் மேலும் அதிக லாபம் பெறுவதிலேயே திருஷ்டியுடையவர்களாயிருப்பார்கள். அதிக லாபம் கிடைக்க வேண்டுமானால் தங்களுடைய சாமான்கள் அதிகமாக விற்பனையாக வேண்டும். அப்படியானால் மற்றவர்களுடைய சாமான்களைப் பார்க்கிலும் தங்களுடைய சாமான் குறைந்த விலையுள்ளதாயிருக்க வேண்டும். இதற்கு வழியென்ன? தொழிலாளிகளுடைய கூலியைக் குறைக்க வேண்டும். எந்தச் சாமானுடைய விலையும் அதைத் தயார் செய்வதற்குச் செலவான கூலியைப் பொறுத்தல்லவா நிர்ணயிக்கப் படுகிறது? ஆடைகளைத் தயார் செய்விக்கும் ஒரு முதலாளி தன்னுடைய ஆடைகளைக் குறைந்த விலைக்கு விற்பதற்காக, நெசவுத் தொழிலாளிக்குக் குறைந்த கூலி கொடுக்கவும், குறைந்த தொகைக்கு நூல் வாங்கவும் விரும்புகிறார். இப்பொழுது நூல் வியாபாரி

என்ன செய்கிறார்? தன்னுடைய நூலைக் குறைத்து விற்க எண்ணுகிறார். இதனால், குறைந்த விலைக்குப் பஞ்சு வாங்கி, அதை நூலாக்கும் தொழிலாளிகளுக்குக் குறைந்த கூலி கொடுக்க எண்ணுகிறார். இனி பஞ்சு வியாபாரி என்ன செய்வார்? குறைந்த விலைக்குப் பஞ்சு வாங்க எண்ணுகிறார். பஞ்சை உற்பத்தி செய்யும் விவசாயி, சரியான விலை கிடைக்காமல் அல்லல் படுகிறான்.

இந்த விதமான போட்டியால் பல சிறிய வியாபாரிகளும் பாப்பராகி விடுகின்றனர். சிறிய மீனைப் பெரிய மீன் விழுங்குவதைப் போன்று, இந்த போட்டியினால் பல முதலாளிகள் நசித்துப் போவதால் அவர்கள் எண்ணிக்கையிலும் சுருங்கி விடுகின்றனர். இதனால், இந்த வியாபாரத்தில் லாபம் என்பது பெரிய, செல்வாக்குள்ள முதலாளிகளைப் போய்ச் சேருகிறது. அவர்கள் மேலும் மேலும் தங்களது முதலைப் பெருக்கிக் கொள்ள வழியேற்படுகிறது. இதிலிருந்து நீங்கள் என்ன தெரிகிறீர்கள்? பாவம், கதியற்ற உழைப்பாளிகள் ஒவ்வொரு படியாக இறக்கு முகத்திலேயே போய்க் கொண்டிருக்கிறார்கள்.

முதலாளித்துவக் கொள்கையை அவலம்பிக்கும் தேசத்திலுள்ள முதலாளிகளது லட்சியம் லாபம் ஒன்றே. இதனால் இவர்கள், பஜாரில் எந்தச் சாமானை விற்றால் அதிகமான லாபம் கிடைக்குமோ அப்படிப்பட்ட சாமான்களையே உற்பத்தி செய்ய ஆசை கொள்ளுகிறார்கள். இதனால் அந்தத் தேசத்திலே, லாபத்தை முன்னிட்டுப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றனவே தவிர ஜனங்களினுடைய வாழ்க்கைத் தேவைக்கு அவசியமான பொருள்களை உற்பத்தி செய்வதில் அவர்கள் அதிகக் கவலையெடுத்துக் கொள்வதில்லை.

பல தேசத்து இந்த முதலாளிகள், மூலப் பொருள்களுக்காகவும், பண்பட்ட பொருள்களை விற்பதற்காகவும் மார்கெட்டுகளுக்காக, அதாவது இடங்களுக்காக யுத்தம் செய்ய வேண்டியது தடுக்க முடியாத ஒரு சம்பவமாகி விட்டது. இதைக் கண்ணுற்ற, பிரெஞ்சு தேச அறிஞர் ரூஸ்ஸோ என்பவர், இந்தச் சொத்தினுடையவும், உற்பத்திச் சாதனங்களினுடையவும் (மில் முதலியன) சொந்தக்காரர்களாக சில பேர் இருப்பதைத் தவிர்த்து, பொருள்களை உற்பத்தி செய்கிற தொழிலாளிகள், விவசாயிகள் இவர்களுடைய கூட்டுறவின் ஆதிக்கத்திற்கு இவற்றைக் கொண்டு வாராதவரை, உலகத்திலே யுத்தத்தையும், போராட்டத்தையும் தடுக்க முடியாது, அது நடந்து கொண்டுதானிருக்கும் என்று கூறினார். அவ்விதம், தொழிலாளிகளுடையவும், விவசாயிகளுடையவும் கூட்டுறவு ஆதிக்கம் ஏற்பட்டால், லாபம் சம்பாதிப்பதற்காகப் பொருள் உற்பத்தி செய்வது அடியோடு மறைந்து, ஜனங்களுக்கு எது தேவையோ அந்தப் பொருள்கள் உற்பத்தி செய்யப் பெறும்.

அப்படியானால், தொழிலாளி, அல்லது விவசாயி என்று கூறுகிறோமே அவர்கள் யார் என்ற கேள்வி எழுவது சகஜம். அபேதவாதக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட சமூகத்திலே யாவரும் தொழிலாளிதான். அவர் கலப்பையைப் பிடித்து

உழுபவராயிருந்தாலும் சரி, கையினால் உழைப்பவரா யிருந்தாலும் சரி, அல்லது தன்னுடைய பேனாவினாலோ கையினாலோ உழைப்பவரா யிருந்தாலும் சரியே யாவரும் அங்குத் தொழிலாளிகள்தான். தேசம் பூராவினுடைய உடைமையையும், உற்பத்திச்சாதனங்களாகிய மில் முதலியவற்றையும் தொழிலாளிகளுடைய ஆதீனத்திலே ஒப்படைப்பதென்றால் அந்ததேசம் பூரா ஜனங்களினுடைய ஆதீனத்திலே ஒப்படைப்பதாகத்தான் அர்த்தம்.

அபேதவாதத்தின் அடிப் படையான கொள்கை, ஒவ்வொரு மனிதனுக்கும் வேலை செய்யச் சந்தர்ப்பம் இருக்கவேண்டும்; ஒவ்வொரு மனிதனுக்கும் அவனவனுடைய வேலைக்குத் தகுந்த கூலி கிடைக்க வேண்டும் என்பதே. உற்பத்திச் சாதனங்களைச் சில பேர் தங்களுடைய ஆதிக்கத்தில் வைத்துக் கொண்டு லாபம் பெறுவதென்பது அதில் நடை பெற முடியாது. உற்பத்திச் சாதனங்கள் பூராவும் சமூகக் கூட்டுறவில் நடைபெறும்; இதனால், இதிலிருந்து கிடைக்கும் சொத்து அந்தச் சமூகத்தையே சாரும்.

வர்க்கப் போராட்டம், அல்லது பொதுவுடைமை யென்று கூறப்படுகிறதல்லவா, அது அபேதவாதத்தின் கடைசி எல்லை. மனித சமூகம் இந்த அபேதவாதத்தின் வழியாகவே பொதுவுடைமை யென்ற எல்லையையடைய முடியும். வாசகர்கள் இங்கு கூர்ந்து கவனிக்க வேண்டும். அபேதவாதக் கொள்கையின் அடிப்படை ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய சக்திக்குத் தகுந்தவாறு வேலை செய்ய வேண்டும்; வேலைக்குத் தகுந்தவாறு அவர்களுக்குப் பொருள்கள் கிடைக்க வேண்டும் என்பது. ஆனால், பொதுவுடைமைக் கொள்கையிலே, கலை, நாகரிகம், வேலை இந்த வகைகளிலே பூரணமான முன்னேற்றம் ஏற்பட்டு, உற்பத்திச் சாதனங்களை நல்ல முறையில் நடத்தி அதிகப்படியான பொருள்களை உற்பத்தி செய்த மேல், மேற் கண்ட பொதுவுடைமைக் கொள்கையின் அடிப்படையான லட்சியம், ஒவ்வொரு மனிதனும், தன்னுடைய சக்திக்குத் தகுந்தவாறு வேலை செய்ய வேண்டும்; அவனுடைய தேவைக்குத் தகுந்தவாறு பொருள்கள் கிடைக்க வேண்டும் என்பதே. அபேதவாதத்தின் அடிப்படை, ஒவ்வொரு மனிதனும், சக்திக்குத் தகுந்த வேலை செய்து, வேலைக்குத் தகுந்த பொருளைப் பெற வேண்டும் என்பது. பொதுவுடைமைக் கொள்கையின் அடிப்படை, ஒவ்வொரு மனிதனும், சக்திக்குத் தகுந்த வேலை செய்து, தேவைக்குத் தகுந்த பொருளைப் பெற வேண்டு மென்பது. மனிதன் கலாஞானத்திலும், நாகரிகத்திலும் உன்னத நிலையை அடைய அவனுடைய தேவைகளும் வளர்ந்து கொண்டு போவது இயற்கையல்லவா?

அறிஞர்களுடைய எண்ணங்களிலே சஞ்சரித்துக் கொண்டிருந்த, இந்த அபேதவாதம், பொதுவுடைமை என்ற கொள்கைகளுக்கு விஞ்ஞான ரூபமாக ஒரு திட்டம் வகுத்து நடை முறையில் கொணர்வதற்கு ஏதுவாக ஆக்கி உலகத்தின் முன்னே வைத்தார் கார்ல் மார்க்ஸ் என்னும் மேதாவி. அவருடைய திட்டப்படி, ஜனங்களிடத்திலே, அவர்கள் துண்டு துண்டு

தேசத்தவரா யிருந்தாலும் சரி, பொருமை, வெறுப்பு, போட்டி இவைகள் இருக்க நியாயமில்லை. இதற்குப் பதிலாக இந்த உலகம், பொருமை, வெறுப்பு, போட்டி யற்ற ஜனங்களடங்கிய ஒரு பெரிய மேடையாக ஆகிறது. இதன் மூலமாக யுத்த பயம் ஒழிந்து உலகத்திலே சமாதானம், ஆம் நிலைத்த சமாதானம் நிலவ முடியும்.

ஆனால் ஏதோ ஒரு தேசத்திலே மட்டும் இந்த அபேதவாதக்கொள்கை அவலம்பிக்கப் படுமானல், அது, மற்ற முதலாளி தேசங்களுக்குப் பயத்தைக் கொடுப்பதாயிருக்கிறது. இதனால் அவர்கள் அபேதவாதக் கொள்கையை நடைமுறையில் அனுஷ்டிக்கும் நாட்டில் அந்தக் கொள்கை வெற்றி பெற முடியாதபடி முயற்சிக்கப் பார்ப்பார்கள். இந்த விஷயம் மார்க்ஸும் யோசித்ததுதான். இதனாலேயே அவர், ஒரு தேசத்திலே மாத்திரம் அபேதவாதக் கொள்கையை அனுஷ்டித்து வெற்றி காண முடியாது. வெற்றி எப்போது கிடைக்குமென்றால், உலகம் பூராவிலுமுள்ள தொழிலாளிகளும், விவசாயிகளும் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டால்தான் அது வெற்றி பெற முடியும் என்று கூறியிருக்கிறார்.

1917ம் வருஷத்திலே ருஷ்யாவிலே, தொழிலாளிகளும் விவசாயிகளும் புரட்சி செய்து அதிகாரத்தைக் கைப்பற்றி அபேதவாதத்தை அமுலுக்குக் கொண்டு வரும்போது மேற்கண்ட பிரச்னைதான் அங்கும் உதித்தது. அதாவது, நம்முடைய சக்தி பூராவையும்செலவிட்டு இந்தத் தேசத்திலே நாம் கைப்பற்றிய அதிகாரத்தை நிலைநாட்டி அபேதவாதத்தை வெற்றி பெறச் செய்வதா அல்லது, உலகத்தின் மற்ற தேசங்களிலே அபேதவாதம் அமுலுக்கு வரும் முயற்சியில் நம்முடைய சக்தியைச் செலவு செய்து, இங்கு ஸ்தாபித்த அதிகாரத்தையும் கை கழுவி விடுவதா என்ற பிரச்னை ருஷ்யர்களுக்கு முன்னே அன்று தோன்றியது.

லெனின் இறந்த பின்னர் இது விஷயமாகவே, ருஷ்யாவின் பிரசித்தத் தலைவர்களான, ஸ்டாலினுக்கும், ட்ராட்ஸ்கிக்கும் தகராறு வளர்ந்தது. ருஷ்யாவிலே முதலில் அபேதவாதத்தை நிலை பெறச் செய்ய வேண்டுமென்ற கொள்கை யுடையவர் ஸ்டாலின். ட்ராட்ஸ்கி, அதை உலகம் பூராவிலும் ஒரே யடியாகப் பரப்ப வேண்டுமென்ற எண்ண முடையவர். ஆனால் ருஷ்ய ஜனங்கள், ஸ்டாலினுடைய அபிப்பிராயத்தைத்தான் ஆதரித்தனர். இதனால் ட்ராட்ஸ்கி ருஷ்யாவை விட்டே போய் விட வேண்டிய தேற்பட்டது. உலகம் பூராவிலும் அபேதவாதக் கொள்கை நிலை பெற்று அதனுடைய விளைவு எப்படி யிருக்குமோ அந்த முறையில் ருஷ்யாவில் இல்லை யென்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். ஏனெனில் அதனுடைய எதிரிகள் அதை எந்த நேரமும் காலை வாரி விடத் தயாராயிருக்கிறார்கள். இதற்காக அவர்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் பல. ஆயினும் மற்ற முதலாளித்துவ தேசங்களைப் பார்க்கிலும் பொது உடைமை ருஷ்யாவானது எல்லாத் துறைகளிலும் எவ்வளவோ முன்னேற்றம் அடைந்திருக்கிற தென்பதை அத-

னுடைய எதிரிகளுங் கூட ஒப்புக் கொள்ள மறுக்கிறார்களில்லை.

ருஷ்யாவிலே, "ஜனங்களுக்குச் சுதந்திரமில்லை, தொழிலாளிகள், அல்லது தொழிலாளிகளின் பிரதிநிதிகள் தான் அங்கு சர்வாதிகாரிகள். எழுத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், கூட்டம் கூடும் சுதந்திரம் அங்கு எல்லோருக்கும் கிடையாது" என்று கூறப்படுகிறது. தர்க்க முறையிலே மட்டும் பார்த்தோமானால் இது உண்மையாகவே புலப்படும். ஆனால் அது அப்படியில்லை. அங்கு தொழிலாளிகளினுடைய சர்வாதிகார மென்றால், அதுவும் அவர்கள் இச்சையைப் பொறுத்ததே. ருஷ்யாவிலே முதலாளி என்பவர்கள் இல்லை. ஜனங்கள் யாவரும் தொழிலாளிகளே. (இதைப் பற்றி நாம் மேலே கூறியிருக்கிறோம்) இதனால் தொழிலாளிகளுடைய சர்வாதிகார மென்றால் ஜனங்கள் யாவருடைய சர்வாதிகாரம் என்றுதான் அர்த்தம். எல்லா ஜனங்களும் எதை விரும்புகிறார்களோ அது அமுலுக்கு வரும். பூரா ஜனங்களினுடைய க்ஷேமத்திற்கு எது உகந்ததோ அது கண்டிப்பான முறையில் அனுஷ்டிக்கப்படுகிறது. ஆனால் ஒன்று, இவ்வித அமுலை, கடுமையான அமுல் என்று வேணுமானால் கூறலாம். ஆனால் கொடுமையான அமுல் என்று கூற முடியாதல்லவா? இவ்விதக் கொடுமையான அமுலும் அங்கு நடைபெறுகிறது. யாரின் மீது? பொது ஜனங்களுக்கு விரோதிகள் யாரோ அவர்களின் மீது. அங்கு, பொதுவுடைமைக் கொள்கைக்கு விரோதமாக நடவடிக்கைகள் நடத்தவோ, பிரசாரஞ் செய்யவோ உரிமை அறவே கிடையாது.

இவ்விதமிருப்பினும், அங்கு, எந்த நடை முறையை அமுலுக்குக் கொண்டு வந்தால் அதிகமான பலன் கிடைக்கும் என்பதைப் பற்றி அபிப்பிராயம் கூற யாவருக்கும் உரிமையுண்டு. மற்றும், தொழிலாளிகள் தங்களுக்குப் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்துக் கொள்வதற்கும், எவ்வளவு வேலை செய்ய வேண்டும், அதையும் எத்தனை மணி செய்ய வேண்டும் என்பதை நிர்ணயிப்பதற்கும் அவர்களுக்கு உரிமையிருக்கிறது. உற்பத்தியை விஸ்தரிப்பதால் ஜனங்களுக்குத் தேவைக்குத் தகுந்தபடி பொருள்கள் கிடைத்து அவர்கள் சுகஜீவிகளாக வாழ முடியும் என்ற விஷயத்தை எந்த ஒரு அபேதவாதியும் தெரிந்திருப்பார். இதனால் ருஷ்யாவிலே புதிய புதிய தொழிற்சாலைகள் நிறுவப்படுகின்றன. புதிய புதிய உற்பத்தி முறைகள் கையாளப் படுகின்றன. வருஷா வருஷம் அங்கு உற்பத்திப் பொருள்கள் எவ்வளவோ மடங்காகப் பெருகிக் கொண்டு வருகின்றன. இதனுடைய பலன்தான் உலகத்திலேயே இன்று ருஷ்யா அதிக பலம் படைத்ததா யிருப்பதற்குக் காரணம். உற்பத்திப் பொருள்களைப் பெருக்குவதற்காக புதிய புதிய முறைகளை அனுஷ்டிப்பதால் முன்னைப் பார்க்கிலும் இப்போது மனிதர்களால் ஜாஸ்தியான வேலை நடை பெறுமே; அப்படியானால் அங்கு எத்தனையோ தொழிலாளிகளுக்கு வேலையில்லாது போகுமே என்று சந்தேகிக்க வேண்டியதில்லை. அங்கு வேலை நேரம் பங்கிட்டுத் தரப்படுகிறது. பொருள் உற்

பத்தி ஜாஸ்தியாவதற்குத் தகுந்தவாறு கூலியும் ஜாஸ்தி தரப்படுகிறது. வேலை நேரத்தைக் குறைத்ததற்காக கூலியையும் குறைப்பதில்லை.

பொதுவுடமை ருஷ்யாவின் மத்திய சர்க்காரின் ஆதிக்கத்திலே அந்தத் தேசத்தின் நூற்றுக்கும் அதிகமான சிறிய சிறிய தேசங்கள சேர்ந்திருக்கின்றன. இப்படி யிருந்தும் இவை ஒன்றுக் கொன்று பொறாமையோ, வெறுப்போ கொள்வதில்லை. ஒன்றை ஒன்று அமுக்க நினைப்பதில்லை. ஒன்றின் மீது ஒன்று அதிகாரம் செலுத்துவதுமில்லை. ருஷ்யாவினுடைய அந்நிய நாட்டுக் கொள்கையின் முக்கிய அடிப்படை, எந்த ஒருதேசமும் தனக்குத்தானே ஆட்சிசெலுத்தவேண்டும்; உலகத்திலே யுத்தம் என்பது இருக்கவே கூடாது; ஏனெனில், மனித சமூகம் சுகமாயும் சந்தோஷ சித்தர்களாகியும் வாழ்வதற்கு எந்த எந்தச் சக்திகளைச் செலவு செய்ய வேண்டுமோ, அவை, இந்த வகைக்கு உபயோகிக்கப்படாது. யுத்தத்திற்காகவே, அநியாயமாக மனிதர்களை நாசமாக்குவதற்காகவே உபயோகிக்கப்படுகின்றன என்பதாகும்.

நாஜிசம்

நாஜிசம் என்பது, நாஷனல் சோஷலிசம் என்பதின் சுருக்கப் பெயராக அழைக்கப்படுகிறது. இந்தக் கொள்கை, ஜாதி அல்லது வம்சத்தை அடிப்படையாகக் கொண்டது. அவர்களுடைய அபிப்பிராயம், ஜாதி அல்லது வம்சத்தின் அதிகாரமே. அவர்களும் தங்களை அபேதவாதிகள் என்றே கூறிக் கொள்ளுகின்றனர். ஆனால் இவர்களுடைய அபேதவாதத்திற்கும், மார்க்ஸ் வகுத்த அபேதவாதத்திற்கும் சம்பந்தமில்லை. மார்க்ஸினுடைய சித்தாந்தத்தின் அடிப்படை உழைப்பைப் பொறுத்தது. ஆனால் இது ஜாதியைப் பொறுத்தது.

இந்த நாஜிக் கொள்கையிலே, எந்த ஒரு மூலதனம் படைத்த முதலாளியும் லாபத்தைக் கருதி வியாபாரம் செய்ய இடமுண்டு. ஆனால் ஒரு நிபந்தனை. அவர்கள் செய்யும் காரியமானது, அந்த ஜாதிக்குத் தீங்கு பயப்பதாயிருக்கக் கூடாது. மற்றும், அந்த முதலாளிகள், நாஜி சர்க்கார் எதைத் தேவையென்று கருதுகிறார்களோ அந்தப் பொருள்களைத் தான் உற்பத்தி செய்ய வேண்டும்.

அபேதவாதம் அல்லது பொதுவுடமைக் கொள்கையில், மதம், ஜாதி அல்லது வம்சம் இவைகளை ஆதாரமாகக் கொண்டு காரியங்கள் செய்யப் பெறுவதில்லை. அதில் கவனிக்கப்படுவது முக்கியமாக யாதெனில் எந்த ஒரு மனிதனும், பூராச் சமூகத்தின் உபயோகத்திற்காகப் பொருள் உற்பத்திக்கு வேலை செய்கிறானா இல்லையா; யாரேனும் பிறருடைய உழைப்பைச் சுரண்டுகிறார்களா என்பது. ஆனால் நாஜிக் கொள்கை, மனிதர்களை அநேக தரவாரியாகப் பிரிக்கிறது. இந்தப் பிரிவில் யாவரிலும் உயர்ந்த ஜாதியாகக் கருதப்படுபவர்கள் ஜெர்மன், அதாவது ஆரிய ஜாதியார். இதே போல் யாவரிலும் தாழ்ந்த ஜாதியாகக் கருதப்படுபவர்கள் யூதர்கள்.

நாஜியர்கள், ஜனங்களிடத்திலே அவர்கள் எந்த ஒரு முணு முணுப்புமின்றி, ஜெர்மன் ஜாதியினுடையவும்,

தேசத்தினுடையவும் க்ஷேமத்திற்காக, அத் தேசத் தலைவன் அல்லது சர்க்காருடைய அதிகாரத்தை அப்படியே யேற்று அதன்படி நடக்க வேண்டும் என்று போதிக்கிறார்கள். விவசாயிகள், தொழிலாளிகள், ஏழைகள், மத்தியதர வகுப்பினர் இவர்களுடைய நன்மையைக் கருதாது உலகத்தின் மற்ற தேசங்களின் மீது படை யெடுக்கவும், அவர்களைத் தங்கள் ஆதிக்கத்தின் கீழ் உட்படுத்தவும் அந்தச் சர்க்கார் விரும்புவதாயிருந்தால் அதையும் அந்த ஜனங்கள் ஒப்புக் கொள்ள வேண்டும். ஏனெனில் ஜாதி அல்லது வம்சத்தின் க்ஷேமம் இதைப் பொறுத்துத் தானிருக்கிறது என்பது அவர்கள் சித்தாந்தம்.

அப்படியானால், ஜாதி, அல்லது வம்சத்தின் க்ஷேமம் எதை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது? இதை நிர்ணயிப்பது யார் என்ற கேள்வி யெழுவது சகஜமல்லவா? ஜெர்மனியிலே நாஜி சர்க்கார்தான் இதற்குப் பைசல் அதிகாரிகள். அந்தத் தேசத்திலே 'யார் பலமுள்ளவர்களோ, செல்வாக்குள்ளவர்களோ அவர்களுடைய ஆதரவினால்தான் அங்கு நாஜி சர்க்கார் நடை பெறுகிறது. பலமுள்ளவர்கள், செல்வாக்குள்ளவர்கள் யார்? முதலாளித்துவத்தை அடிப்படையாகக் கொண்ட இந்தக் காலத்திலே யாரிடத்திலே உற்பத்திச் சாதனங்களின் ஆதிக்கமிருக்கிறதோ அவர்கள்தான் என்பது பிரத்தியட்சம். அதாவது, ஜெர்மன் ஜாதியினுடைய க்ஷேமமும் முன்னேற்றமும் இன்ன வழியிலே முயற்சித்தால்தான் கிட்டும் என்பதை நிர்ணயிப்பவர்கள் இவர்களாய்த் தானிருக்கிறார்கள். மற்ற தேசங்களின் மீது படை யெடுப்பதற்காக துப்பாக்கிகளும் யுத்தக் கப்பல்களும் செய்ய வேண்டு மென்று இவர்கள் ஆஞ்ஞாபிப்பார்களானால் அது ஜெர்மன் ஜாதியினுடைய க்ஷேம லாபத்திற்கென்றே ஏற்றுக் கொள்ள வேண்டும். மற்ற தேசங்களிலே தங்களுடைய சாம்ராஜ்யத்தை நிலை நாட்டுவான் வேண்டி எந்த நேரமும் ஜனங்கள் யுத்த சன்னத்தர்களாயிருக்க வேண்டும், இரவு பகலாகத் தொழிற்சாலைகள் ஆயுதங்களைச் செய்து குவிக்க வேண்டும். இதற்காக, தொழிலாளிகளிடத்திலே அதிக வேலை வாங்கினாலும் குறைந்த கூலிதான் தரப்படும் என்று இவர்கள் ஆஞ்ஞாபிப்பார்களானால், தங்களுடைய க்ஷேமத்திற்கென்று கருதி ஜனங்கள் யாதொரு முனகலுமில்லாமல் ஏற்று நடக்க வேண்டும். விவசாயி பட்டினியால் தவிக்கிறானே, தொழிலாளி வயிற்றுக் கில்லாமல் வாடுகிறானே என்ற எண்ணமே இருக்கக்கூடாது.

ஜெர்மனியானது, தன்னுடைய சாம்ராஜ்யத்தைப் பெருக்கி, ஆதிக்கத்திலுள்ள நாடுகளில் சுரண்ட ஆரம்பிக்குமானால் அந்த லாபம் தொழிலாளிகளைச் சாருமா அல்லது முதலாளிகளைச் சாருமா என்று வினவலாம். அப்போது அந்த ஜெர்மன் முதலாளிகள், ஜெர்மன் தேசத்துச் சாமான்கள் மற்ற தேசங்களிலே குறைந்த விலைக்கு விற்று அந்த மார்க்கெட்டுகளைக் கைப்பற்ற வேண்டும், இதனால் குறைந்த கூலியே தொழிலாளிகளுக்குக் கொடுக்கப்படும் என்று ஆணையிட்டார்களானால் அதை

யும், ஜெர்மன் ஜாதியின் க்ஷேமத்திற்காகவே என்று ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டியதிருக்கும். இதனால் தெரிவதென்ன? நசுங்குபவர்கள் ஏழைகள், தொழிலாளிகள். லாபம் பெறுவது ஜெர்மன் முதலாளிகள்.

ஜெர்மன் நாஜி சர்க்காரினுடைய அந்நிய நாட்டுக் கொள்கையைச் சிறிது ஆராய்வோம். இதைத் தெரிவதற்கு நாம் அகராதியின் உதவியை நாட வேண்டியதில்லை. அது ஸ்பஷ்டமான கொள்கை. அதாவது, இந்த உலகத்திலே, யாவரிலும் சிரேஷ்டமானவர்கள் ஜெர்மன் ஜாதியார்; அவர்களுடைய ஆளுகை இந்த உலகம் பூராவும் பரவுதல் வேண்டும். ஆனதால் இதை நிறைவேற்றுவதற்கனுகூலமாக ஜெர்மன் மக்கள், தங்களுடைய சர்க்கார் என்ன கூறுகிறார்களோ அவை யாவற்றையும் நிம்மதியோடு அப்படியே யேற்று நடக்க வேண்டும் என்பது. ஜெர்மானியப் பிரஜைகளைத் தங்களுக்கு ஒரு சாதகமாக உபயோகித்துக் கொண்டு ஜெர்மன் முதலாளிகள், தங்களுடைய ஆதிக்கத்தை இந்த உலகம் பூராவிலும் பரப்ப வேண்டுமென்பதே நாஜிக் கொள்கையின் முக்கியமான லட்சியம்.

பாசிசம்

நாஜிசம், எப்படி ஒரு ஜாதியை அடிப்படையாகக் கொண்டதோ, அப்படியே பாசிசம் இத்தலி தேசத்தை அடிப்படையாகக் கொண்டது. அவர்கள் எந்த ஜாதியினராயினும் சரி இத்தலி மக்கள் யாவரும் சமமானவர்களே. பாசிசத்தின் முக்கியக் கொள்கை, இந்த உலகத்திலே, இத்தலி தேசத்தின் உயர் தன்மையை நிலை நாட்டுவது. இதை யெல்லையாக வைத்துத் தான் அங்கு அரசியல் நீதி வகுக்கப்படுகிறது. இத்தாலிய மக்களின் ஏகப் பிரதிநிதி சர்க்கார்தான் என்பது பாசிசத்தின் கோட்பாடு. ஏனெனில், அங்கு உற்பத்திச் சாதனங்கள், அதாவது மில் முதலியன யாவும் பணம் படைத்த முதலாளிகளுடைய ஆதீனத்திலே இருக்கின்றன. அவர்களுடைய இச்சைக்குகந்ததாய்த் தானே சர்க்காருமிருக்கும். இதனால் அங்கு சர்க்கார் என்பது பொதுவாக மேற் கண்ட முதலாளிகளைத் தான் குறிக்கும். அவர்களுடைய க்ஷேம லாபம், அவர்களுடைய சக்தி இத்தலியின் க்ஷேமம், சக்தியாகக் கொள்ளப்படுகிறது. இந்தச் சர்க்காருக்கு விரோதமாக யாரும் வாய் திறப்பார்களானால் அது ஒரு பயங்கரமான குற்றமாகக் கருதப்படுகிறது. அப்படிப்பட்டவர்கள் யாதொரு விசாரணையுமில்லாமலே தண்டிக்கப்படுவார்கள். நாஜியர்கள், ஜெர்மன் ஜாதியின் பொருட்டு தங்களுடைய வெளி நாட்டுக் கொள்கையாக எவ்வித நடைமுறையைக் கைக்கொள்ளுகிறார்களோ, அதுவே போன்று பாசிச இத்தலியும், இத்தலி தேசத்திற்காகத் தங்கள் வெளி நாட்டுக்கொள்கையைநிர்ணயிக்கிறது. அநேகமாகப் பார்க்கும் போது, நாஜிசமும் பாசிசமும் ஒரே லட்சியம், ஒத்த கொள்கையுடையனவாகவே இருக்கும். இரண்டிற்கும் வித்தியாசமென்னவென்றால் நாஜிசம் கொஞ்சம் வேகமுடையது. அவ்வளவுதான்.

(மொழி பெயர்ப்பு.

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி
லிமிடெட்டால்

பிரதி இங்கிலீஷ் மாதம்

முதல் வாரம் வெளியிடப் பெறும்.

"ஜோதி"

வருஷ சந்தா

பர்மாவுக்கு	4—0—0
இந்தியாவுக்கு	4—8—0
மலேயா முதலிய எல்லா வெளி நாடுகளுக்கு	6—0—0

தனிப் பிரதி

பர்மா, இந்தியா	0—6—0
வெளி நாடுகளில்	0—8—0

— ஏஜெண்டுகள் எங்கும் தேவை —

விளம்பரங்கள்
முதலிய விபரங்கட்கு நேரே எழுதுக.

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி லிமிடெட்.
நெ. 47, 31-வது வீதி,
இரங்கூன்.

மூன்றுவது வருஷம்
"ஜோதி"யின்
பைண்டு வால்யூம்
இரண்டு புஸ்தகங்களாக
தயாராகிவிட்டது.

விலை ரூபா 4—8—0

தபால் செலவு

பர்மாவுக்கு -6-0 இந்தியாவுக்கு -8-0
மலேயா முதலிய வெளி நாடுகளுக்கு ரூ. 2

தபால் செலவுடன் மணியார்டர் செய்யுங்கள்

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி, லிமிடெட்,
47, 31-வது வீதி, இரங்கோன்.